Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

11/00

දිනමුරසු වාරමලර්

டிச.21-27,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 236

## காணக யுத்தம்

## புதிர்களும் புரளிகளும்



## நம்புகிறாரா சந்திரிக்கா





## யாருடைய குண்டு?

## இனி என் முறை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## ஒய்யாரக் கொண்டை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ் மாவட்டத்தில்
உள்ளூராட்சித் தேர்தல்
அறிவிக்கப்பட்டுள்ளது.
ஜனநாயக நாடகம்
அரங்கேற்றப்படவுள்ளது!

நாட்டின் ஏனைய
பகுதிகளில் இருந்து
தனி வேறான பகுதியாகவே
யாழ் குடாநாடு
பிரித்து வைக்கப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணத்திற்கு
ஒருவர் செல்ல வேண்டுமானால்
பாதுகாப்பு அமைச்சின்
'கிளியரன்ஸ்' தேவை!

நாட்டின் ஏனைய
பகுதிகளைப் பொறுத்தவரை
அப்படியொரு
கட்டுப்பாடு இல்லை!

மூன்று வருடகாலமாக
ஊரடங்குச் சட்டம்
தொடர்ந்து நீடிக்கும்
பகுதியும்
யாழ் குடாநாடுதான்!

உலகில் வேறெங்கும்
இத்தனை நீண்டகாலமாக
ஊரடங்கு உத்தரவு
அமுலில் இருந்ததாக
நாம் அறியவில்லை.

மனித உரிமை தினத்தில்
அமைதியாக
ஊர்வலம் நடத்தக்கூட
யாழ் குடாநாட்டில் படையினர்
அனுமதி மறுத்திருந்தனர்!

தலை நகரான கொழும்பிலும்
மட்டக்களப்பிலும்
மனித உரிமை தினத்தில்
ஆர்ப்பாட்டங்களும்
ஊர்வலங்களும்
பல்வேறு அமைப்புக்களால்
நடத்தப்பட்டிருந்தன!

யாழ் குடாநாட்டில் மட்டும்
ஏனைய பகுதிகளில் இருந்து
தனியான சட்ட திட்டம்!
மூச்சுக் காட்டாமல்
உண்ணாவிரதம் இருக்கமட்டும்
அனுமதி கொடுத்தனர்!

மக்களின் இரத்தத்தில்
எதிர்ப்பு உணர்ச்சி
கௌரவ எழுச்சி
ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில்
குடாநாட்டுப் படையினர்
குறியாக உள்ளனர்!

படையினரைக்
குறை கூறக்கூடாது!
அவர்கள் தங்கள்
கடமையைத்தான்
கச்சிதமாகச் செய்கிறார்கள்!

ஆனால், இத் தேர்தலில்
போட்டியிடும்
தமிழ்க் கட்சிகள்தான்
தங்கள் கடமையைச்
செய்யத் தவறியுள்ளன!

தேர்தல் அறிவிக்கப்பட்ட
தினத்தில் இருந்தே
தாங்கள் போட்டியிடக்கூடிய
சூழல் உண்டா? இல்லையா?
என்பதுதான்
தமிழ்க்கட்சிகள் அனைத்தினதும்
பிரதான ஆய்வாக இருந்தது!

ஒரு கட்சிகூட
இத் தேர்தல் நடத்தப்படும்
நோக்கம் என்ன?
என்பதை அம்பலப்படுத்த
முன்வரவில்லை!

அரசின் உள்நோக்கம்
உலக அரங்கில்
வெளிப்படாத வகையில்
உதவியுள்ளன
தமிழ்க் கட்சிகள்!

உள்ளூராட்சிச் சபைகளுக்கு
பிரதிநிதிகள்
தெரிவு செய்யப்படுவதால்,
நிலவும் சூழலில் மாற்றம்
நிகழப் போவதில்லை!

குப்பை அள்ளக்கூட
படையினரின் அனுமதி
தேவைப்படலாம்!

திருமலை நகர சபையில்
நடந்த கதை
யாவரும் அறிந்ததே!

இந்நிலையில்-யாழில்
உள்ள சூழலை மறைக்கும்
உள்ளூராட்சித் தேர்தல்
வெள்ளையடிப்புத்தான்!

'ஒய்யாரக் கொண்டையாம்
உள்ளே ஈரும் பேனுமாம்'
என்பது போல
உள்ளூராட்சித் தேர்தலாம்
உள்ளே இராணுவ ஆட்சியாம்
என்பதே பொருத்தம்!

நல்லூர் திருவிழாவைக்கூட
யாழில் நல்ல சூழல்
உள்ளதாக நிரூபிக்க
பயன்படுத்தியது அரசாங்கம்!

அதனைவிடவும் - இந்த
மினித் தேர்தல் திருவிழா
அரசுக்கு பயன்படும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## உங்கள் பகைவருக்கு அன்பு செய்யுங்கள்

நான் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகின்றேன், உங்கள் பகைவருக்கு அன்பு செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிக்கிறவர்களுக்கு ஆசிக் கூறுங்கள்.

உங்களை தூற்றுவோருக்காக செபியுங்கள்.

ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் காட்டுங்கள் உன் மேலாடையை பறிப்பவனுக்கு, உள்ளாடையும் மறுக்காதே.

உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு.

உன் உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்காதே.

(லூக்காஸ் 6:27-31)



நீதி, பக்தி, விசுவாசம், அன்பு, மனவுறுதி, சாந்தம் இவற்றைக் கடைபிடியுங்கள். விசுவாச வாழ்வு எனும் சீரிய பந்தயத்தில் தளராதீர். முடிவில்லா வாழ்வைக் கைப்பற்றிக் கொள்ளுங்கள். அதற்காகவே அழைக்கப் பெற்றிருக்கின்றீர்கள். (1- தீமோத்தேயு 6:11-12)

அன்புக்குரியவர்களே! நாம் மற்றவர்களுடன் அன்புடனும், சமாதானத்துடனும் நடந்து கொண்டால், நிச்சயமாக பிரச்சனைகள் தோன்றுவதற்கு இடமில்லை. நாம் வாழ்வது இவ்வுலகில் சில காலமே. நாம் நல்லவர்களாக வாழ்வதற்கே அழைக்கப்பெற்றிருக்கின்றோம். அன்பு, நீதி, பக்தி, விசுவாசம், பகிர்வு, தாழ்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவற்றைக் கடைபிடித்தால் இறைவனின் இறையரசை இலகுவாக காணலாம்.

ச. ஜேம்ஸ், குயின்ஸ்பெரி.

## இஸ்லாமிய சிந்தனைகள்!

★ மறுமைக்குரிய சாதனமின்றி மண்ணறையில் பிரவேசிப்பவர் கப்பலின்றிக் கடல் கடப்பவர் போலாவார். (அபூபக்கர் ஸித்தீக்-ரலி)

★ இம்மையின் கீர்த்தி பொருளைக் கொண்டு, மறுமையின் கீர்த்தி நற்கிரியையைக் கொண்டு. (உமர் ரலி)

★ இம்மை பற்றிய சிந்தனை இதயத்தில் இருளை உண்டாக்கும். மறுமைப் பற்றிய சிந்தனை உள்ளத்திலே ஒளியை உண்டாக்கும். (உதுமான்-ரலி)

★ ஓர் அடியான் பாவஞ்செய்து கொண்டே இருந்தாலும், இறைவன் அவனுக்கு நான்கு வித உபகாரங்களைச் செய்கிறான்.

1. அவனது ஆகாரத்தைத் தடுப்பதில்லை.
2. அவனது ஆரோக்கியத்தைத் தடுப்பதில்லை.
3. அவனது பாவத்தை வெளிப்படுத்துவதில்லை.
4. அவனை உடனுக்குடன் தண்டிப்பதில்லை.

(ஸஅதிப்னு பிலால்)

★ வாலிபத்தின் சிறப்பை வயோதிகரே அறிவர். சுகத்தின் சிறப்பை அல்லலுற்றோரே அறிவர். ஆரோக்கியத்தின் மகிமையை நோயுற்றோரே அறிவர். சீவியத்தின் மகிமையை மரணித்தவரே அறிவர்.

(ஹத்தமுல் அசம்முரஹ்)

தொகுப்பு: மடவளை, இப்திமா.

# கவிதைப் போட்டி இல.233

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

### முத்தம்



தாய் தந்த
உயிருக்கு
சேய் கொடுக்கும்
சிறு இலஞ்சம்.

சுபா வரன்-
கண்டி.

### வன்னியில்

காலத்தின் கோலத்தில்
கடும் போரின் கோபத்தில்
இருப்பதற்கு இடமில்லை
கையிலே பணமில்லை
வயிற்றிலே உணவில்லை
முலையிலே பாலில்லை
முத்தத்தை விட-நீ
பெறுவதற்கு ஒன்றுமில்லை!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### மனச் சுமை ஆற

வயிறு சுமந்ததை
கைகள் சுமக்குது!
மனம் சுமப்பதை
முத்தம் குறைக்குது!

ம.திருவரசுராசா-
வவுனியா

### அன்னைக்கு....

யுத்த மழையிலும், அன்னைக்கு,
முத்த மழை!

அ.சந்தியாகோ-கண்டி.

### மு (யு)த்தம்!

யுத்தம் தராத
நிம்மதி-இவள்
முத்தம் தருவதில்
கிடைக்காதோ?

டி.ஜோர்ஜ்-லபுகலை.

### உள்ளே வெளியே

முத்தம்...
இரத்த ஓட்டத்தை
அதிகரிக்கும்...
யுத்தமுந்தான்!

எஸ்.பிரபா-பதுளை.

### சொந்தம்

நிலவுக்கு வானம் சொந்தம்
மலருக்கு வாசம் சொந்தம்
மரத்திற்கு கிளை சொந்தம்
தாய்க்கு சேய் சொந்தம்!

என்.சியாமளா-
யாழ்ப்பாணம்.

## பரிசுக்குரிய கவிதை

### எந்நாளும் குழந்தையாய்!

வீதிக்கு வந்தால் இராணுவ
சாவடிகளில் -சோதனை!
வளாகம் சென்றால்
பகிடிவதை-வேதனை!
இரண்டிலும் தப்பி வந்தால்
அது-சாதனை!
கண்ணே நீ.. குழந்தையாய்
எந்நாளும் இருந்தால்
இல்லையே- ஆக்கினை!

நூர்ஜஹான்-அநுராதபுரம்.

### பிரியாத சொந்தங்கள்

கருவோடு உயிர் சேர்ந்த
ஜாலங்கள்!
உயிரோடு உடல் சேர்ந்த
கோலங்கள்!
ஒருநாளும் மாறாதசொந்தங்கள்
உயிரோடு உயிர் சேர்ந்த
பந்தங்கள்!

எஸ்.தர்மபாலன்-திருக்கோயில்.

### என்ன செய்வேன்?

'இச்'சென்று முத்தமிடும்
இளங்குருத்தே! என் மகளே! எனக்கு
அச்சமாக இருக்கிறது!
அதிவிரைவாய் நீவளர்ந்தால்-அந்த
சுந்தரப் பெண் 'கிருஷாந்தியை'
பச்சையாகத் தின்றது போல்
புசித்தால்நான் என்ன செய்வேன்?

கு.திருமால்-மட்டக்களப்பு.

### முத்தம்

இருட்டிற்கு பிறகு நிலவம்மா
இன்னமும் கண்ணீர் ஏனம்மா
உறவென்று உனக்கு நானம்மா
என் புன்னகை முத்தம் உனக்கம்மா!

செ.லோஜனா-கொழும்பு-15.

# கவிதைப் போட்டி இல.236




கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 27.12.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.236,
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

சாள்ஸ் திருட நினைத்த படம் என்னைத் திருடி விட்டது. (ட)யானை(னா) இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்!

பா.குமரன், மொறட்டுவ.




இனிய முரசே!

வாரந் தோறும் நீ சுமந்து வரும் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' புவனா மிகவும் புதுமையாக தொகுத்து தந்துள்ளார். மற்றும் ராஜேஸ்குமாரின் 'வாரம் ஒரு கிரைம்' மிகவும் பிரமாதமாக இருந்தது.

ஆர்.ஜெயராஜ், பொகவந்தலாவ.

வெற்றி முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் பார்க்கப் பார்க்க சலிக்காதவை. மேலும். கவியரசு கண்ணதாசனின் அனுபவம் புதுமை புதிய பகுதிக்கு என்னுடைய இனிய வாழ்த்துக்கள்!

எஸ்.சத்தியா, திருமலை.

## 'சே'யின் கடிதம்

மதிப்பிற்குரிய ஆசிரியரவர்கட்கு!

இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்!

வாரா வாரம் தினமுரசு படித்த உடனே எதையாவது எழுத வேண்டுமென்று எண்ணுவேன். வேலை பழு மழுங்கடித்துவிடும். பின்பு அடுத்தவாரம். பின் அதேநிலை.

சேகுவேராவின் கடிதம் என் கன்னங்களை நனைத்துவிட்டது. பொதுவாழ்வில்-அல்லது இலட்சியத்தோடு வாழ்பவர்கட்கு இருக்க வேண்டிய மிகமிகப் பெரிய பண்பு சேகுவேராவிடம் காணப்படுகிறது. தனது குடும்பத்துக்காக எதையும் சேர்த்து வைக்கவில்லை. மாறாக விரக்தி அடையவில்லை. எல்லாம் அரசு கவனிக்கும். அந்த உண்மையான வரிகள் அனைத்து இலட்சியவாதிகளின் இலட்சிய வரிகள் என்றே நான் நம்புகிறேன்.

அருட்திரு. வி.கே.சீவரத்தினம், நு.கேகொட.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

## எங்கே ஒற்றுமை

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட எத்தனை போட்டா போட்டி. புலிகள்தான் 'ஒற்றுமைக்கு கேடு செய்ததாகக் கூறும் தமிழ்க் கட்சிகளால், உள்ளூராட்சித் தேர்தலில்கூட ஒற்றுமை காட்ட முடியவில்லையே.

கா.ஜெயரோம், கொழும்பு-06.

தினமுரசுக்கும், ஆசிரியர்களுக்கும் வணக்கம்!

கடந்த வாரம் முரசில், உலகின் தலை சிறந்த கெரில்லா போராட்ட தளபதி (என் மனம் கவர்ந்த தளபதியான) சேகுவேராவின் மடலினைப் பிரசுரித்தீர்கள். பார்த்ததும் மிகவும் மனவேதனையாகத்தான் இருந்தது.

தளபதி சேகுவேராவின் வீரச் சிறப்புக்களையும், நேர்மையான நடத்தைகளையும் நினைவுபடுத்திய தினமுரசுக்கு எனது இதயம் கனிந்த நன்றி.

கரவெட்டி சதீஸ், மட்/கருவேப்பங்கேணி.

### முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடமுள்ள வரை பெயர் பதிவு செய்யப்படுகிறவர்கள்:

- ★ ச.நளினி, கொழும்பு-13.
- ★ கே.சர்மிளா தேவி, வட்டகொட.
- ★ ஆ.நித்தியானந்தராஜா, வெல்லம்பிட்டிய
- ★ கே.றஜீதா, களுபோவில.
- ★ எஸ்.குமார், பெரிய நீலாவணை.
- ★ தாமோதரம் பிரதீபன், பாண்டிருப்பு-01.
- ★ எட்வேட் நிஷாந்தன், மட்டக்களப்பு.
- ★ திருமதி நா.தங்கமேனி, வவுனியா.
- ★ மா.மகேஸ்வரன், மட்டக்களப்பு.
- ★ பு ராகவன், சுவிற்ஸர்லாந்து.
- ★ ஜி.பிரகாஷ், கனடா.
- ★ எம்.றுஸ்மியா, காத்தான்குடி-06.
- ★ எஸ்.எம்.ராபீக், தம்புள்ள
- ★ வி.தியாகன், அம்பாறை.
- ★ எம்.பூபாலசிங்கம், அமெரிக்கா.
- ★ கே.ரவீந்திரன், கனடா.
- ★ ஏ. றினோஸியா, திஹாரிய.
- ★ எஸ்.எஸ்.சுரேன், ஜேர்மனி.
- ★ பா.ரோசன், பா.விஜி, மஸ்கெலியா.'
- ★ செல்வி தேவிகா சோமபாலா, வவுனியா.
- ★ ஜெயந்தி மாசிலா மணி, அன்புவழிபுரம்.
- ★ ஏ.வினோதராஜ், ஃபிரான்ஸ்.
- ★ எம்.நிஷாந்தன், யாழ்ப்பாணம்.
- ★ பி.தனேஸ்வரன், நோர்வே.
- ★ அ.சந்திரகலா, கொழும்பு-05
- ★ ஜி.சுரேஸ்குமார், குவைட்.

## பிரபலம் தேடுகிறார்கள்

யாழ் குடாநாட்டில் காணாமல் போனதாக கூறப்பட்டோரில் அறுநூறுபேர் பலியாகிவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை விடுத்துள்ளது. இலங்கை அரசின் விவேகமான பிரசாரங்கள் முன்பாக, சர்வதேச அரங்கில் அமுக்கப்பட்ட நம் குரல்கள் மறுபடி ஒலிக்க அது ஒரு நல்ல சந்தர்ப்பம். அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, "பலியானவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடு, அல்லது அவர்களை உயிருடன் கொடு" என்று போராடுவதே சரி. அது தொடர்பில் முரசு கூறிய கருத்தும் நூறு வீதம் உண்மை. ஆனால் காணாமல் போனோர் பெயரில் பிரபலம் தேட அரசியல் கட்சிகளும், சில நபர்களும் விரும்புகிறார்களே அல்லாமல், உரிய நீதி கிடைக்க வேண்டும் என்பதை இரண்டாம் பட்சமாகவே கருதுகிறார்கள்.

இ.கிருபாகரன், கொழும்பு-10.

## எங்கே-யார் தேடுவதாம்?

அன்புள்ள முரசுக்கு!

வடபகுதியில் சூரியக் கதிரின் பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் கைதானது என்பது சாதாரண விடயமல்ல. இந்தக் கொடுமையை அம்பலப்படுத்துவது முதற் கட்டமாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் பெற்றுத் தருவதும், அக் கொடுமைகளுக்கு காரணமானவர்களை தண்டிக்க அரசை நிர்ப்பந்திப்பதுமே மனித உரிமை அமைப்பினரின் தலையாய பணியாகும். அரசியல் கட்சிகளின் தலையாய கடமையாகும். ஆனால், காணாமல் போனோர் கொலையுண்டுவிட்டனர் என தெரிந்த பின்னரும், "அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? தேடித் தாருங்கள்!" என்று அரசிடம் கோருவது, மாபெரும் அநியாயத்தை மக்களிடம் இருந்து மறைப்பதற்கு சமம். அதனை நேர்மையோடு சுட்டிக்காட்டிய முரசுக்கு பாராட்டுக்கள்.

பா.தேவராசா, வவுனியா.

## தேர்தலுக்கு மூலதனம்

முரசுக்கு!

வாழ்த்துக்களுடன் எழுதிக்கொள்வது, இராஜதந்திரியின் அரசியல் அலசல் தொடர்ந்து படித்து வருகிறேன். யார் அந்த இராஜதந்திரி என்பதை நாம் அறியோம். எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது போல, எல்லாப் புகழும் முரசுக்கே என்ற மனப்பான்மையோடு, எவ்வித தளம்பலும் இன்றி அலசல் தரப்படுகிறது! யாருக்கும் சார்பின்றி உண்மை உரைப்பது வரவேற்கத்தக்கது. மினித் தேர்தல் பற்றிய அலசல் மணியாக இருந்தது. காணாமல் போனோர் விவகாரம் யாழ் தேர்தலுக்கான மூலதனமாகிவிட்டது. "குரல் கொடுத்தோம், போராடினோம்" என்று கூறிக்கூறியே கடை விரிக்கிறார்கள். இவ்வாறான மூலதனத்தை கொடுத்த படையினருக்கு நன்றி கூறட்டும்.

பி.சவரிமுத்து, மிருசுவில்.

# சந்தேகம் கிளப்பும் குண்டுகள்

## தமிழ்க் குழுக்கள்மீது சந்தேகம்!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏட்டிக்குப் போட்டியான குண்டுவெடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

9.12.97 அன்று மட்டக்களப்பு பொதுச் சந்தையில் வெடித்த குண்டு தொடர்பாக பலத்த சந்தேகங்கள் எழுந்திருந்தன.

குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற சில மணிநேரங்களுக்கிடையே, அரசாங்க செய்திகளில் பயங்கரவாதிகள் குண்டு எறிந்ததாக திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

சந்தைக்கு பொருட்கள் வாங்க பொலிசார் வருவர் எனத் தெரிந்து, அவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டது.

ஆனால் பொலிசார் சிலரை தாக்குவதற்காக,பொது மக்களின் பாரிய உயிரிழப்பு ஏற்படக்கூடிய இடத்தை தெரிவு செய்ய வேண்டிய அவசியம் என்ன?

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பு சோதனைகளையும் தாண்டி குண்டை கொண்டுவந்தவர்களால், பொலிசார் கூடிநிற்கும் வேறொரு இடத்தில் தாக்குவதா இயலாத காரியம்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மேற்படி குண்டுவெடிப்பு நடைபெற்ற காலகட்டம் புலிகள் அக் காரியத்தை செய்யக்கூடிய காலகட்டமல்ல. இலங்கை அரசை சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைமீறல்களுக்காக கண்டித்துள்ளது. இந்நிலையில் உலகின் வெறுப்பை அரசுக்கு எதிராக திருப்பத்தான் புலிகள் முற்படுவார்களே தவிர, தம் மீதும் மனித உரிமை அமைப்புக்கள் பழிசொல்லக் கூடிய தாக்குதல்களை நடத்தமாட்டார்கள்.

### மனித உரிமை தினம்

தலைநகரில் சமீபகாலகமாக புலிகள் நடத்திய குண்டுத் தாக்குதல்களுக்கு மக்களின் உயிரிழப்பு குறைவாக இருக்கக்கூடிய நாட்களே தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு சந்தைக் குண்டுவெடிப்பில் பொலிசார் சிலர் காயப்பட்டது தற்செயல் சம்பவமாகும். அதனை வைத்து ஒரு முடிவுக்கு வரமுடியாது எனவும் மக்கள் கூறுகின்றனர்.

குறிப்பிட்ட குண்டுவெடிப்பால் புலிகளைவிட அரசுக்கே சாதகம். அதன் அர்த்தம் அரசாங்கம் செய்தது என்பதல்ல. ஆனால் சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை தொடர்பாக அதிருப்தி அடைந்தவர்கள், புலிகளும் தங்களைவிட மனித உயிரழிவுகளை ஏற்படுத்துவதாக காட்ட மேற்கொண்ட முயற்சிபோலவே அமைந்திருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சம்பவம் நடைபெற்ற மறுநாள்தான் சர்வதேச மனித உரிமைகள் தினமாகும்.

ஆயுதம் ஏந்தி மட்டக்களப்பில் செயற்படும் ஒரு தமிழ்க் குழுமீது பரவலான சந்தேகங்கள் எழுந்துள்ளன. இராணுவ துணைப்படை போல இவர்கள் செயற்படுகின்றனர்.

அக் குழுவை பின்னணியில் நின்று தூண்டிவிட்ட சக்தி யார் என்பதுதான் கேள்விக் குறி. பணத்துக்காக எதையும் செய்யத் தயங்காத அத் தமிழ்க் குழுவே குண்டுப் புரளிகளை கிளப்பிவிடும் காரியங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதாக மக்கள் சந்தேகிக்கின்றனர்.

சைக்கிள் குண்டொன்று சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டது. அதன் முன்னரும் சைக்கிள் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன. சைக்கிளில் குண்டுபொருத்தி கொண்டுவந்து வைத்துவிட்டு, பின்னர் பொதுமக்கள்போல் பொலிசாருக்கு தகவல் கொடுக்கவும் கூடும் எனவும் கூறப்படுகிறது.

### தந்திரமா?

மட்டக்களப்பு நகரில் புலிகளின் ஊடுருவல் அதிகமாகியுள்ளதாக கருதப்படுவதால், மக்களிடம் புலிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்த இத் தந்திரங்களை குறிப்பிட்ட குழுவினர் பயன்படுத்துகின்றனரா? என்றும் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இதன் காரணமாகவே தமிழ்க் கட்சிகள் விசாரணை கோரியுள்ளன. உரிய விசாரணை நடத்தப்பட்டால், உண்மைகள் வெளியாகக் கூடும். இவை தொடர்பாக மேலும் விபரங்களை 'முரசு' திரட்டி வருகிறது.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் "சமீபகால குண்டுவெடிப்புக்கள் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுக்கு புலிகள் காரணமல்ல, வேறு ஒரு சக்தியின் கைதான் பின்னணியில் உள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

---

## சிறப்புத் தலையங்கம்

### பலியானால் புலியா?

களுத்துறைச் சிறையில்
தமிழ் பேசும் கைதிகள்
படுகொலையாகியுள்ளனர்!
ஒருவர் முஸ்லிம்,
இரண்டுபேர் தமிழர்கள்!

"விசாரணை செய்
அல்லது விடுதலை செய்"
என்று தமிழ்க் கைதிகள்
நீண்டகாலமாய் கோரினர்!

உண்ணாவிரதங்கள்
இருந்தனர்.
உருக்கமாய் வேண்டினர்!
அரசின் செவியில்
அது ஏறவே இல்லை!

அக் கைதிகளில்
சிலர்தான் இப்போது
கோரமாய், கொடூரமாய்
கொல்லப்பட்டுள்ளனர்!

உயிருடன்
இருந்தபோதுதான்
இந்த அரசாங்கத்தால்
அவர்களுக்கு
நீதிவழங்க முடியவில்லை!

அவர்கள்
இறந்த பின்னராவது
நீதி வழங்க
அரசு முன்வருமா?

ஆனால், அரசின்
நடவடிக்கைகள்
திருப்தியாக இல்லை!

படுகொலை நடந்த
உடனேயே,
பலியானவர்கள்
புலிச் சந்தேக நபர்கள்
என்று திரும்பத் திரும்ப
அரச செய்தி நிறுவனங்கள்
கூறிக்கொண்டிருந்தன!

சிறைக்குள்
நிகழ்ந்த வேட்டையை
மறைமுகமாக
நியாயப்படுத்தத்தான்
புலி முத்திரை!

முதற்கோணல்
முற்றும் கோணல்!
களுத்துறை படுகொலை
விடயத்தில்
அரச செய்தி நிறுவனங்கள்
நடந்து கொண்ட முறை
அநாகரிகமானது!

பல்கலைக்கழக மாணவன்
வரப்பிரகாஷ் கொலையில்
யாழ் மாணவர்கள்
சம்பந்தம் என்று
திரும்பத் திரும்ப
அரச செய்தி ஊடகங்கள்
கூறியதைக் கேட்டோம்!

களுத்துறை சிறையில்
மனித வேட்டையாடியவர்கள்
யார் என்பதை மட்டும்
குறிப்பிட்டுக்கூற
அரச செய்தி ஊடகங்கள்
தயங்கினவே ஏன்?

சிறைப் படுகொலை
பற்றி ஆராய
விசாரணைக் கமிஷனாம்!

கைப்புண்ணுக்கு
கண்ணாடி எதற்கு?

படுகொலை வேட்டையை
கண்ணால் கண்டும்
தடுக்க முயலாமல்
கடமையில் இருந்த
இராணுவத்தினர்;
வேட்டையை
வேடிக்கை பார்த்த
சிறை அதிகாரிகள்
காவலர்கள்
ஆகியோரை
உடனடியாக தற்காலிக
வேலை நீக்கம்
செய்திருக்க வேண்டும்!

விசாரணைக் கமிஷன்கள்
என்பவை
பிரச்சனைகளை
ஆறப்போடுபவை என்று
ஒருகருத்தும் உண்டு!

எனவே- உடன்
நடவடிக்கையே தேவை!

களுத்துறை சிறைக் கைதிகளை
வேறு இடத்துக்கு மாற்றக்கூட
உடன் முன்வரவில்லை!

பலியான உடல்களை
சொந்த இடங்களுக்கு
எடுத்துச் செல்லவும்
அனுமதி மறுக்கப்பட்டுள்ளது!

இவையெல்லாம்
தகுந்த நீதி கிடைக்குமா
என்பதை
சந்தேகத்துடனேயே
நோக்க வைத்துள்ளன!

-ஆசிரியர்-

---

## 'ஓட்டோ'வில் கைக்குண்டு!

# விடை தெரியாத கேள்விகள்

மட்டக்களப்பில் ஓட்டோ ஒன்றில் கைக்குண்டு ஒன்று வெடித்தது. 11.12.97 நடைபெற்ற இச் சம்பவத்தில் இரண்டுபேர் பலியானார்கள்.

இச் சம்பவத்தில் பலியானவர் ஒருவர் புலிகளின் தற்கொலைப் போராளி என்றே செய்திகள் வெளியாகின. கரும்புலிகள் என்பது தங்கள் உடம்பில் குண்டு பொருத்திக் கொண்டு சென்று தாக்குபவர்களைக் குறிப்பதாகும்.

கைக்குண்டோடு சென்று, அது வெடித்தது என்பதால் பலியானவர் கரும்புலி என்று கூறிவிடமுடியாது. ஓட்டோவில் கைக்குண்டுதான் வெடித்துள்ளது. வெடிகுண்டு என்றால் ஓட்டோ சிதறி இருக்கும். குறிப்பிட்ட நபரின் உடலும் துண்டாகி இருக்கும்.

பலியானவர்களில் ஒருவர் ஓட்டோ சாரதி. இன்னொருவர் தபாலக ஊழியர் சதீஷ். இவர் முன்னர் புலிகள் இயக்கத்தில் இருந்தவர். பின்னர் 1990ல் படையினரிடம் சரணடைந்தவர்.

இவ்விடயம் மட்டக்களப்பில் படையினருக்கும், படையினருக்கு உதவும் சிலருக்கும் தெரியும்.

மட்டக்களப்பில் தபால் குண்டுகள் தொடர்பாக சதீஷ்மீது பலத்த சந்தேகம் இருந்ததாம். தீவிரமாக விசாரிக்கப்பட்டும் உள்ளாராம்.

இந்நிலையில்தான் சதீஷ் சென்ற ஓட்டோவில் கைக்குண்டு வெடித்துள்ளது. சதீஷ் ஓட்டோவில் ஏறிச் சென்றபோது சிலர் கண்டுள்ளனர். அவரது கையில் கைக்குண்டு இருந்ததாகத் தெரியவில்லை.

### சந்தேகங்கள்

இவ்விடயத்தில் இரண்டு விதமான சந்தேகங்கள் எழுந்துள்ளன. சதீஷ் புலிகள் இயக்கத்தில் மீண்டும் சேர்ந்திருக்கலாம். மட்டக்களப்பு சந்தைக் குண்டுவெடிப்புக்கு பதிலடியாக, தாக்குதல் நடத்த இலக்கு ஒன்றை நோக்கி சென்றிருக்கலாம்.

அல்லது, சதீஷ்மீது சந்தேகப்பட்ட ஒரு பிரிவினர் ஓட்டோவுக்குள் சதீஷ் செல்வதைக் கண்டதும், கைக்குண்டைக் கழற்றிப்போட்டு விட்டு போயிருக்கலாம். ஓட்டோ சென்ற எதிர்திசையில் இருந்து வாகனம் ஒன்று வந்ததாகவும், ஓட்டோ 'பிறேக்' பிடித்து நின்றதாகவும் வெளியாகியுள்ள தகவல் மேற்படி சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது. குறிப்பிட்ட வாகனத்தில் சென்றவர்கள் யார்?

சதீஷ் புலியாக இருந்தால், அவரைத் தொடர்ந்து பயன்படுத்துவதே புலிகளுக்கு சாதகம். தபாலகத்தில் வேலை செய்தபடி, நகரில் நடமாடித்திரிய வாய்ப்பு அதிகம் உள்ள ஒருவரை இழப்பது புலிகளுக்குத்தான் நஷ்டம். எனவே அவ்வாறான ஒருவரை தாக்குதலுக்கு பயன்படுத்தி இருப்பார்களா? என்பதும் சந்தேகமாக உள்ளது.

சதீஷ் அவசரமாக வந்து ஓட்டோவில் ஏறியதாகக் கூறப்படுகிறது. அப்படியானால் யாராவது அவரை துரத்தி வந்தனரா? யாரிடமிருந்தாவது தப்பி ஓடிவந்தாரா? அவரது சைக்கிள் வேறு காணாமல் போயிருக்கிறது. இப்படியான சந்தேகங்களுக்கு விடை கிடைக்கவில்லை.

---

# யாழ் மக்களுக்கு ஆர்வம் இல்லாத தேர்தல்

## அதிகாரம் இல்லாத சபைகளுக்காக கட்சிகள் அடிபிடி!

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்ட பின்னர் பரவலான தேடுதல் வேட்டைகள் தீவிரமாகியுள்ளன.

தேர்தல் நடத்தப்படுவதை புலிகள் தடுக்கக்கூடும், வேட்பாளர்களை புலிகள் தாக்கக்கூடும் என்று கருதியே பாதுகாப்பு ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. 16.12.97 அன்று அல்வாய் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. பொதுமக்கள் அனைவரும் கோயில்களுக்கும், பாடசாலைகளுக்கும் கொண்டுவரப்பட்டனர்.

அதன்பின்னர் அப்பகுதியில் படையினர் நடத்திய தேடுதலின்போது மறைந்திருந்த புலிகள் படையினரைத் தாக்கினர். படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதலில் நான்கு புலிகள் பலியாகினர். பலியான புலிகளின் உடல்கள் மந்திகை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டன. நான்கு சடலங்களில் ஒரு சடலத்தில் காலும், தலையும் காணப்படவில்லை என்று ஒரு தகவல் கூறுகிறது.

### ஆர்வமில்லை

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு யாழ் குடாநாட்டு மக்களிடம் எவ்வித சல சலப்பையும் ஏற்படுத்தவில்லை. இந்தக் காலகட்டத்தில் இத் தேர்தல் தேவையற்ற ஒன்று என்றே பலரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டு நிற்பதையும் யாழ் குடாநாட்டு மக்கள் சலிப்புடனேயே நோக்குகின்றனர்.

"உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் எதுவும் இல்லை. பாதுகாப்பு காரணங்கள் கருதி குப்பைத் தொட்டியை எங்கெங்கே வைக்கலாம் என்பதும் படையினரால்தான் முடிவு செய்யப்படவேண்டி இருக்கும். அப்படியிருக்க, இத் தேர்தலில் போட்டியிட தமிழ்க் கட்சிகள் தமக்குள் மோதுவது வேதனையைத் தருகிறது" என்று யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் 'முரசு' நிருபரிடம் கூறினார்.

உள்ளூராட்சி சபை வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு தரப்படும் என்று படையினர் அறிவித்துள்ளனர். யாழ் குடாநாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்து படை உயரதிகாரிகள் கலந்தாலோசனை நடத்தியுள்ளனர்.

"எவ்வாறான பாதுகாப்பை எதிர் பார்க்கிறீர்கள்? உங்களிடம் தற்போது உள்ள ஆயுதங்கள் யாவை?" போன்ற கேள்விகளும் படை அதிகாரிகளால் எழுப்பப்பட்டதாம்.

யாழ் குடாநாட்டில் யாழ் மாநகரசபை மற்றும் நகரை அண்டியுள்ள பிரதேச சபைகள் தவிர்ந்த ஏனைய நகர சபைகள் பிரதேச சபைகள் என்பவற்றில் போட்டியிடும் வேட் பாளர்களின் பாதுகாப்பு கடும் கேள்விக்குள்ளாகும் நிலையே காணப்படுகிறது.

---

## நள்ளிரவின் பின் வந்தனர்

கடந்த 16ம் திகதி அதிகாலை 3 மணியளவில் கொழும்பு கட்டு நாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்கிய எயார் லங்கா விமானத்தில் அமெரிக்கப் படைவீரர் பாணியில் தலைமயிர் ஒட்ட நறுக்கப்பட்ட நயத்துடன், 75 இற்கும் குறையாத, பிறநாடுகளில் பயிற்றப்பட்ட நமது நாட்டுப் படை வீரர்கள் வந்திறங்கியதாக சென்னையிலிருந்து வந்த பயணி ஒருவர் தெரிவித்தார்.

சீருடையிலிருந்த இவர்கள் அனைவரது கைகளிலும் துணி துவைக்கும் இயந்திரம், வீடியோ-டி.விக்கள், குளிர்சாதனப்பெட்டிகள் ஈறாகப் பல பொருட்களாம். இவற்றைக் கண்ட உயரதிகாரி அவற்றை ஓரமாக வைத்துவிட்டு அணி வகுத்து நிற்கும்படி கட்டளையிட்டாராம்.

இவர்கள் எந்த நாட்டிற்குச் சென்று பயிற்சி பெற்றனர் என்பது தெரியவராத சங்கதி.

---

## காத்திருக்கும் படையினர்

விடுமுறையில் தத்தமது இல்லங்களுக்குச்சென்று குடும்பத்தாருடன் குதூகலிப்பதற்கு தயாராய்ப் புறப்பட்ட சுமார் 2500 படையினர் பலாலி விமான தளத்தில் காத்துக்கிடக்கின்றனர்.

இவர்களது காத்திருப்புக்கு காரணம் விமானப் படையின் போக்குவரத்து விமானங்கள் அனைத்தும் செயலிழந்து போனமையே என்று தெரிவிக்கப்படுகின்றது.

எம்.ஐ.17 ஹெலிகொப்டர்களைக்கூட சேவையிலீடுபடுத்தவில்லையெனவும் அறியப்படுகின்றது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையின்போது படையினர் காட்டிய உற்சாகமும் ஆர்வமும் இத்தகைய பிரயாணத் தாமதங்களால் பாழடிக்கப்பட்டு வருவதாக படையதிகாரிகள் கவலை கொண்டுள்ளனராம்.

எவ்வாறு, 'இனிமேல் படையினர் வடக்குக்கு வரமாட்டார்கள்- தனி இராச்சியம்தான்' என்று புலிகள் அன்று மெத்தனமாக இருந்தனரோ, அதே போல் படையினரும் யாழ் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் எண்ணிக் கொண்டனர்.

ஆனால் இப்பொழுது பாதுகாப்பமைச்சின் 'கிளியரன்' சுக்குக் காத்திருக்கும் வடபகுதிப் பயணியைப் போல், விமானப்படையின் கிளியரன்ஸ் எப்போது வரும்? விமானம் எப்போது வரும்? என்று படையினர் பலாலியில் தவித்துப் போயுள்ளனராம்.

---

## காத்தான்குடி, வாழைச்சேனையின் குண்டு கண்டுபிடிப்பு!

## ஓட்டமாவடியில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள்!

மட்டக்களப்புக் குண்டுச் சம்பவங்கள் ஓயுமுன்னர் காத்தான்குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் கொலை, கொள்ளை, கிரனேட் வீச்சு, தீ வைப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

காத்தான் குடியில் 15.12.97 அன்று இரவோடிரவாக மின்மாற்றியொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டு குண்டு செயலிழக்கும் நிபுணர்களால் காலை 9.05 மணிக்கு வெடிக்க வைக்கப்பட்டது. ஆரையம்பதி உள் வீதி வழியாக வந்தே புலிகள் இயக்கத்தினர் குண்டைப் பொருத்தி விட்டுச் சென்றிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காத்தான்குடியிலிருந்து ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்தைப் புலிகள் தாக்கி அங்கு ஒரு குண்டையும் கைவிட்டுச் சென்றனர். அதைச் செயலிழக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது ஒரு பொலிஸார் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ஓட்டமாவடியில் இருந்த மின்மாற்றியொன்றும் கடந்த 12.12.97 அன்றிரவு புலிகளால் சுட்டுச் சேதமாக்கப்பட்டது. அதே தினமிரவு வாழைச்சேனை பிறைந்துரைச் சேனையில் மின்மாற்றி கிரனேற் வீச்சுக்கு உள்ளான போதும் அது வெடிக்காததால் மின்மாற்றி தப்பிவிட்டது. படையினர் குண்டைக் கண்டெடுத்துச் செயலிழக்க வைத்தனர்.

ஓட்டமாவடியில் முற்றிலும் பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள முஸ்லிம் பகுதியில் அதே தினமிரவு ஒரு ஊர்காவல் படைவீரர் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் படையினருக்குச் சீருடைகள் தைக்கும் கடையொன்றினுள் புகுந்த புலிகள் இயக்கத்தினர் சுமார் ஒரு இலட்ச ரூபா பெறுமதியான சீருடைகளையும் கொள்ளையடித்துள்ளனர். தையல் கடையின் காவலாளி கட்டி வைக்கப்பட்ட பின்னரே கடை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

---

## மக்கள் இல்லாத சபை

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட சபைகளில் ஒன்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை. இந்தப் பிரதேச சபையின் பெரும்பாலான பகுதிகள் படையினரின் பாதுகாப்பு வலயப் பகுதிகளாக உள்ளன. அதன் காரணமாக அங்கு மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

சில பகுதிகளில் மட்டுமே செறிவற்ற நிலையில் மக்கள் உள்ளனர். பலாலி, மயிலிட்டி, தையிட்டி காங்கேசன்துறை, கீரிமலை, மாரிசல்கூடல், இளவாலை, விளான், மாதகல், கடுகம்பானை, கொல்லல் கலட்டி, பன்னாலை, போன்ற பகுதிகள் மக்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன.

அளவெட்டியில் ஒரு பகுதியில் மட்டும் மக்கள் குடியேறி உள்ளனர். மறு பகுதியில் படையினர் உள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் இத் தேர்தலில் வாக்களிக்க முடியாது. பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் மட்டுமே இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் உள்ளோரும் வாக்களிக்க முடியும்.

---

## ஊடுருவும் தாக்குதல்கள்

வன்னியில் 'ஜயசிக்குறுய்' படையணிகள் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்கும் பொறுப்பு சிறுத்தை படையணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

9.12.97 அன்று நெடுங்கேணி ஒதியமலைப் பகுதியில் படையினர்மீது சிறுத்தைப் படையணிகள் தாக்குதல் நடத்தின.

ரோந்தில் ஈடுபட்ட படையினர்மீதே சிறுத்தைப் படையணி காத்திருந்து தாக்கியது என்று புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது. இத் தாக்குதலில் மூன்று படையினர் பலியானதாகவும், தமது தரப்பில் கப்டன் பவான் என்பவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னகுளம் பகுதியில் முற்றுகைத் தாக்குதலிலும் சிறுத்தைப் படையணியே முக்கிய பங்கு வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

---

# மலையக தமிழாராய்ச்சி மாநாடு!

## கௌரவிக்கப்படாத முஸ்லிம் எழுத்தாளர்கள்!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவிலும் மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் எவருமே கௌரவிக்கப்படவில்லை.

இம் முறை நுவரெலியாவில் நடைபெற்ற (டிசம்பர் 13ம் 14ம் திகதிகளில்) மேற்படி விழாக்களில் கௌரவிக்கப்பட முஸ்லிம் எவரும் தேர்ந்தெடுக்கப்படாத பாராபட்சம் குறித்து முஸ்லிம்கள் மத்தியில் இருந்து அதிருப்தியும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற மாநாட்டில் ஓரிருவர் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்ட போதிலும் இம்முறை முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டதேன் என பலரும் வினவுகிறார்கள்.

மத்திய மாகாணத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நூற்றாண்டு காலமாக முஸ்லிம்கள் தொடர்ந்து அரும்பணியாற்றி வருகின்றனர். புலவர் அருள்வாக்கி, அறிஞர் சித்திலெப்பை காலம் தொட்டு இந்தப் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

மத்தியமாகாண சபை தமிழ் சாகித்திய மற்றும் இலக்கியப் பணிகளுக்காக அதன் வரவு செலவுத் திட்டத்தில் போதுமான நிதியை ஒதுக்கி வருவதுடன் 1997ம் ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாவும் முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 5 இலட்சம் ரூபாவும், 1998ம் ஆண்டில் முறையே இரு அமைச்சுக்களுக்கும் தலா 5 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மத்திய மாகாண முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சு ஓரளவு நிதியை இந்து கலாசார அமைச்சுக்கு வழங்கி இருந்தால், புரிந்துணர்வுடன் முஸ்லிம் எழுத்தாளர்களும் பாராட்டப்பட்டிருக்கலாம் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக கண்டி, மாத்தளை மாவட்டங்களில் இத்துறையில் பாராட்டி கௌரவிக்கப்பட வேண்டிய முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர் இருந்தும், இம்முறை இத்தவறு ஏற்பட்டதேன் எனவும் அங்கலாய்க்கின்றனர்.

இது பற்றி அனைத்து முஸ்லிம் எழுத்தாளர்களையும் ஒன்றிணைத்து மத்திய மாகாணத்துக்குள் தமக்குள் ஓர் அமைப்பை உருவாக்கவும் உறுதி பூண்டிருப்பதாக இத்துறையில் ஆர்வ முள்ளோர் முரசுக்குத் தெரிவித்தனர்.

---

# சோதனையால் நீண்ட தாமதம்

(மன்னார் நிருபர்)

மன்னார்-மதவாச்சி வீதி பொதுமக்களின் பாவனைக்காக கடந்த 10.12.97 அன்று திறக்கப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்பு, புத்தளம் போன்ற இடங்களுக்குச் செல்லும் வாகனங்கள் இவ்வீதி வழியாக சென்றுவருகின்றன.

முன்னர் வவுனியா-ஈரற் பெரியகுளம், கோழிக்கூடு முகாம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சகல சோதனை நடவடிக்கைகளும் தற்போது செட்டிகுளத்தில் இடம் பெறுகின்றன.

மன்னார்-மதவாச்சி வீதி திறக்கப்பட்டால் மக்களின் பயணக் கஷ்டம் ஓரளவு நீங்கும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது "பிச்சை வேண்டாம், நாயைப்பிடி" என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது.

செட்டிகுளம் தடை முகாமில் கொழும்பு செல்லும் பஸ் 3 மணிநேர தாமதத்தையும் மன்னார் செல்லும் பஸ் ஒரு மணிநேர தாமதத்தையும் எடுக்கின்றது.

ஈரற் பெரியகுளத்தில் வழங்கப்பட்ட ஒருநாள் பாஸிற்கு பதிலாக செட்டிகுளத்தில் ஒருவார பாஸ் வழங்கப்படுகிறது. இதற்காக பயணி ஒருவர் இரு இடங்களில் ஒப்பமிட வேண்டியுமுள்ளது. கொழும்பு செல்பவர்கள் வீடியோ எடுத்த பின்பே செல்ல அனுமதிக்கப்படுவர்.

செட்டிகுளத்தில் நடைபெறும் இச் சோதனை நடவடிக்கையினை மன்னாரில் மேற்கொண்டால் 3 மணி நேர தாமதம் இருக்காது. இவ்விடயத்தில் இப்பகுதி அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் உருப்படியான நடவடிக்கை எடுக்க திராணியற்றவர்களாகவே உள்ளதாக மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

## இதுதானா தமிழ் மொழி அமுலாக்கம்?

வாரந்தோறும் சனிக்கிழமைகளிலும் விருது பெற்ற, புகழ்பெற்ற திரைப்படங்கள் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டு வருவது தெரிந்ததே.

படம் ஆரம்பமாகுமுன்னர், அத் திரைப் படம் பற்றி சுருக்கமாகக் கதையை தமிழ், சிங்கள மொழிமூலம் கூறிமுடிக்கின்றனர். எம்மொழிப்படமாக இருந்தாலும், சிங்கள மொழி பெயர்ப்புடன் வழங்குகின்றனர்.

29.11.97 ஒருபடம் சிங்கள டப்பிங்குடன் காண்பிக்கப்பட்டது. சிங்களத்தில் டப்பிங் செய்யப்பட்டு இருந்தும்கூட கதைச் சுருக்கத்தை சிங்கள மொழி மூலம் விளக்கம் கொடுக்கப்பட்டது. தமிழை மருந்துக்குக்கூட காணவில்லை. சரிபோகட்டும், சிங்கள டப்பிங் என்றபடியால் தமிழ் மொழிபெயர்ப்பு இருக்கும் என்றெண்ணிய எல்லோருக்கும் ஏமாற்றமே காத்திருந்தது.

சிங்களம் தவிர்ந்த வேற்றுமொழிப்படமென்றால் சிங்களமொழி பெயர்ப்புடன் ஒளிபரப்பும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சிங்களப்படத்திற்காவது தமிழ்மொழிபெயர்ப்புச் செய்ய முன்வராமைக்கான காரணம் என்ன?

தமிழ்மொழி அமுலாக்கல் பற்றி பாராளுமன்றம் தொடக்கம் பிரதேசசபைவரை உரத்து முழங்குவார்கள். எல்லாம் வாய்ப் பேச்சில் மட்டும்தான். தலையிடியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்.

உ. ஷஜிபா.

## கிழக்கில் முளைக்கும் மத்தியஸ்த சபைகள்!

(காரைதீவு நிருபர்)

தென்கிழக்காசியாவில் பிரசித்திபெற்ற 'மத்தியஸ்தசபை' முறை 1990லிருந்து இலங்கையிலும் அறிமுகமாகிவருகிறது. நீதியமைச்சினால் இணக்க சபைகளுக்குப் பதிலாக தோற்றுவித்த மத்தியஸ்தசபைகள் தென்னிலங்கையில் 219 உள்ளன.

நாட்டின் சூழ்நிலையை கருத்திற் கொண்டு தற்போதுதான் கிழக்கில் இச் சபையை ஸ்தாபிக்க அரசு முன்வந்துள்ளது. இதற்கென ஓய்வுபெற்ற சிறைச்சாலை அலுவலர் கே. கணேசராஜா பிரதேச செயலக ரீதியாக சென்று பயிற்சி வழங்கி வருகிறார்.

கிழக்கில் இதுவரை 6 சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய 5 பகுதிகளிலும், அம்பாறை மாவட்டத்தில் காரைதீவிலும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1998முதல் செயற்படுமாம்.

புலிகளின் நீதிமன்றத்திற்கு இது தடையாக இராதாம். இது அரசியல் பணியல்ல. மக்கள் சேவை என்கிறார் அவர்.

## சாரதிகளின் கோரிக்கைகள்

(திருமலை நிருபர்)

சாரதிகளின் கடமை நேரம் பத்துமணி நேரத்திலிருந்து எட்டுமணி நேரமாகக் குறைப்பது. சீருடை வழங்குவது, ஆண்டொன்றுக்கு இரண்டு தடவை சாரதிகளின் குடும்பத்தினரின் கல்வி, ஆலய சம்பந்தமான பயணங்களுக்கு வாக்னம் அனுமதிப்பது, குடும்ப உறுப்பினர்களுக்கேற்படும் விபத்து, திடீர் சுகயீனம் என்பவற்றுக்கு குறப்பிட்ட தூரத்துக்குள் எரிபொருள் செலவு செலுத்தி வாகனம் உபயோகிப்பதற்கு அனுமதி வழங்குவது போன்ற 11 கோரிக்கைகள் சாரதிகள் சங்கத்தினரால் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ அலவி மௌலானாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை சாரதிகள் சங்கத்தின் ஒருவருட வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நவம்பர் 30ல் நடைபெற்றபோதே இக்கோரிக்கைகள் கையளிக்கப்பட்டதாக திருகோணமலை சாரதிகள் சங்கக் கிளை உத்தியோகத்தர்கள் முரசுக்கு தெரிவித்தனர்.

இக் கோரிக்கைகளைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்த அமைச்சர் கூடிய விரைவில் இவற்றை நடைமுறைப்படுத்த ஆவன செய்வதாக உறுதியளித்தார் எனவும் அவ்வுத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

## வைத்தியசாலை தேவை

சுகாதார வசதிகளைப் பொறுத்தவரை சேனையூர், கட்டைபறிச்சான், கடற்கரைச்சேனை, சம்பூர், கூனித்தீவு, சூடைக் குடா, இளக்கந்தை, பாட்டாளிபுரம், கணேசபுரம், கிரவல்குழி, நல்லூர், பள்ளிக்குடியிருப்பு போன்ற கிராமங்களில் எந்த வொரு அரசாங்க வைத்தியசாலைகளோ, தனியார் மருத்துவமனைகளோ இயங்குவதில்லை. இதனால் நோயாளிகளை சைக்கிள்களிலோ மாட்டு வண்டிகளிலோ மூதூர் மாவட்ட வைத்தியசாலைக்கே எடுத்துவர வேண்டும்.

இரவு வேளைகளில் கடுமையாக நோய் வாய்ப்படுபவர்களை வைத்திய சாலைக்கு எடுத்து வரமுடியாத நிலையில் உயிரிழக்கும் அபாயம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இதனையிட்டு திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் எடுப்பார்களா?

அ. அச்சுதன், சேனையூர்-06.

## மன்னார் திரும்ப விருப்பம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தம் சொந்த இடம் திரும்ப உள்ளனர்.

முதற்கட்டமாக இவர்கள் தம் சொந்த வீடுகளை வந்து பார்வையிட்டுவிட்டுச் செல்கின்றனர். வீடுகளைத் துப்பரவு செய்து விட்டுச் சென்றுள்ளனர்.

மாணவர்களின் கல்வி, மற்றும் தொழில் வாய்ப்பு என்பன போன்ற முக்கிய காரணங்களுக்காகவே, இதுகால வரையிலும் சொந்த இடம் திரும்புவதற்கு தயங்கினர்.

புத்தளம் போன்ற வெளி மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் ஏராளமான அகதிக் குடிசைகள் சேதமடைந்துள்ளன. நுளம்புகளும் ஏராளமாகப் பெருகியுள்ளதால் வியாதிகளும், தொற்று நோய்களும் அதிகரித்து வருகின்றன.

மன்னாரில் தற்போது சுமுகமான நிலை ஏற்பட்டு வருவதாகவும், அங்கு மீள்குடியேற நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் புத்தளம் வாழ் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

இதேவேளை புத்தளத்தில் சொந்தமாக 10 பேர்ச் காணி வாங்கிய பலர், மக்கள் சொந்த இடம் திரும்பக்கூடாது என்ற எண்ணத்தில் இங்கு நடைபெறும் சிறு அசம்பாவித சம்பவங்களை பெரிது படுத்திக்கூறி வருகின்றனர்.

மேலும் சிலர் காணிகளை அப்படியே விட்டுவிட்டு சொந்த இடம் திரும்ப ஆயத்தமாகி வருகின்றனர்.

## கட்டாக்காலிகளின் தொல்லை

காத்தான்குடிப் பட்டினம் நிலத்தாற் குறுகியது. சனத் தொகையால் கூடியது. மூச்சு 'விடுவதற்கே இடமில்லாதபடி வீடுகளும் வீதிகளும் நெருக்கமாக அமைந்துள்ளன. இதனால் சூழலைப் பாதுகாப்பதும் பட்டினத்தை சுத்தமாக வைத்திருப்பதும் பெருஞ்சிரமமானதொரு பணியாகவுள்ளது.

இவ்வளவிற்கும் மத்தியில் நகரில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை சொல்லுந்தரமன்று. மனிதர்களே வாழ இடமில்லாத போது, கால் நடைகளை எப்படி வளர்க்க முடியும். ஆசை யாரைத்தான்விட்டது. இதன் காரணமாக சிலர் தங்களோடுசேர்த்து மாடுகளையும் வளர்க்கின்றனர். இந்தமாடுகள் உணவுதேடி வீதியிலே அலைந்து திரியும் காட்சி போக்குவரத்துக்குத் தடையாக இருப்பதோடு வீதிகளையும் அசிங்கப்படுத்தி விடுகின்றன.

கட்டாக்காலி மாடுகளை வீதிகளில் அலைய விடாது, கட்டுப்பாட்டோடு வைத்து வளர்க்குமாறு உரியவர்களை பிரதேச சபை நிருவாகம் பல தடவைகள் கேட்டுக் கொண்டும், கால்நடை சொந்தக்காரர்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை. எதிரே வருவது மாரி காலம். தொற்று நோய்கள் இலகுவாகத் தொற்றிக்கொள்ளும் காலம் அது. இதனைக் கருத்திற்கொண்டு கட்டாக்காலி மாடுகள் வீதியில் நடமாடாது இருப்பதற்கு உரிய அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். செய்வார்களா?

ஊர் நலன் விரும்பி.

## தனிச் சிங்களத்தில் பயிற்சி!

(நமது நிருபர்)

இலங்கை மின்சார சபை தொகுதி தொகுதியாக அதன் ஊழியர்களுக்கு மத்திய மலைநாட்டிலுள்ள காசல் ரீயில் ஒரு மாத காலப் பயிற்சி நெறியை வழங்கி வருகிறது.

வடக்கு கிழக்கிலுள்ள ,தனித் தமிழ் மாத்திரம் பேசத் தெரிந்த இ.மி.ச. ஊழியர்களுக்கு மேற்படி காசல் ரீ நிலையத்தில் பயிற்சி நடைபெறுகிறது.

இப்பயிற்சி நெறிக்காக தமிழ் மாத்திரம் பேசத் தெரிந்த வடக்கு கிழக்கிலுள்ள ஊழியர்களுக்குரிய அழைப்புக் கடிதங்கள் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன.

"பயிற்சி நெறியின்போது, நாம் வெறும் தலையாட்டிகளாகத்தான் கலந்து கொள்கிறோம்." என்று இ.மி.சபையின் மட்டக்களப்பு ஊழியர் ஒருவர் தெரிவித்தார். தமிழ் மொழி அமுலாக்கம் தலைகீழாய்ப் போய் விட்டது. இதற்குத் தகுதி வாய்ந்த தமிழ் அதிகாரிகளின் அசிரத்தையே காரணமென்று மற்றொரு ஊழியர் கவலை தெரிவித்தார்.

## நன்றி நவிலல்

இரத்தினபுரி தும்பர வித்தியாலய அதிபரான பூபதி அம்பலவாணரின் இறுதிக் கிரியைகள் 5.12.97 அன்று கொழும்பு பொரள மயானத்தில் நடைபெற்றது.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும், தொலைபேசி மூலமும், தந்திகள் மற்றும் ஃபக்ஸ் செய்திகள் மூலமும் அனுதாபம் தெரிவித்து எம் துயரில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

4.12.97 அன்று இரத்தினபுரி தும்பர பாடசாலையில் அன்னாரின் பூத உடலுக்கு அஞ்சலி செலுத்திய மாணவ, மாணவியருக்கும் எமது இதய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வேலுப்பிள்ளை அம்பலவானர்.
(ஓய்வு பெற்ற அதிபர்)
மற்றும் குடும்பத்தினர்.

## தபாலகச் சீர்கேடு!

மட்டக்களப்பு செங்கலடித் தபாலகத்தில் ஃபக்ஸ் சீர்கேடு கடந்த 4 மாதகாலமாக இருந்து வருகிறது. இத்தபாலகத்தினூடாக ஃபக்ஸ் செய்தி அனுப்ப வருவோர் தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களை நாடிச் செல்ல வேண்டியுள்ளது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இத்தபாலகத்திலிருந்த ஃபக்ஸ் இயந்திரம் திருத்த வேலைகளுக்காக மட்டக்களப்பு பிரதம தபாலக அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் அது இன்னமும் திருத்தப்பட்டாகவில்லை.

செங்கலடி பிரதம தபாலகத்தின் கீழ் 11 உபதபாலகங்கள் இயங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக்ப் பெரியளவு பரப்பைத் தன்னகத்தே கொண்டு, சுமார் 55 ஆயிரம் பேருக்குச் சேவை வழங்கவேண்டிய இத்தபாலகத்தின் குறைபாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை என்று தபாலக வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன. ஃபக்ஸ் இயந்திரத்தை மீள வழங்குமாறு எழுத்து மூல வேண்டுகோள்கள் விடுக்கப் பட்டும் பயனேதும் கிட்டவில்லை.

இதேபோல் ஏறாவூர் தபாலகத்திலும் சீரான தபால் சேவைகளை வழங்குவதில் பல குறைபாடுகள் நிலவுவதாக தபாலக வட்டாரங்கள் கூறுகின்றன.


விளம்பரப் பகுதி

நியூ கலா
1998
கலண்டர்கள்

என்ன அழகு !
எத்தனை அழகு !!
படக்கலண்டர்களின் அழகு
மங்கள அழகு !
மனம் போல அழகு
நிறைந்துள்ளதே !!

1998ம் ஆண்டுக்கான
படக்கலண்டர்கள் ஆர்ட் பேப்பரில்
அச்சிடப்பட்டுள்ளன.
(Large, Medium, Small)
3 அளவுகள்.

பொங்கல்
வாழ்த்து மடல்கள்
தற்பொழுது விற்பனையாகிக்
கொண்டிருக்கின்றன.

நியூ கலா கிரியேசன்ஸ்
192, செட்டியார் தெரு, கொழும்பு 11.
போன்: 332465

றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு
வழங்குவதில் முன்னோடி....
நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்
★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான்
★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்
NAGOOR Travels & Tours
அங்கீகார இல: 1094
33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.
☎ - 439392
Royal - 071-35132

தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக தெய்வீக சேவை
THEYVIGA SAKTHY CENTRE DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES
GOVT REGED NO. HA\04\BT\219
வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.
'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.
பாலுசோதிடர்–S.A.M.P.
தெய்விக சக்தி நிலையம்
கல்லடி–அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு. (P.O).
BALUSOTHIDAR-S.A.M.P.
THEYVIGASAKTHY CENTRE,
BATTICALOA (P.O.)
SRI LANKA.
"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்" - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"


மளையாள மாந்திரிகம்

மளையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
162, KOTAHENA STREET,- MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)
வவுனியாவிலும் சந்திக்கலாம்
இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்திஇழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.
SEXUAL DISORDERS
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.
வெளிநாட்டில் வசிப்போருக்கு
வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு தபாலமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)
மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு, விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.
கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388
கொழும்பில் டிசம்பர் 21 முதல் 29 வரை
DR. P. ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING No. 10, Reclamation Road,
(Entrance: Bankshall St., Opposite Renjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
ஓட்டமாவடியில் ஜனவரி 2, 3ம் திகதிகளில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P. 065-57345
கல்முனையில் ஜனவரி 4, 5, 6ம் திகதிகளில்
T.M.M. பாமசியிலும் T.P. 065 - 29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.
வவுனியாவில் ஜனவரி 10, 11, 12ம் திகதிகளில்
வவுனியா வைரவர் கோவில் வீதி, VANNI INN இல் சந்திக்கலாம்
T.P. 024 - 22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போர்க்களப் புதிர்களும் புரளிகளும்

மன்னகுளத்தில் புலிகள் நடத்திய முற்றுகைத் தாக்குதல் தொடர்பாக மேலும் சில விபரங்கள் கிடைத்திருக்கின்றன.

அதற்கு முன்பாக மாறிவரும் போர்க்கள நிலவரங்களை சற்று நோக்குவோம்.

'ஜயசிக்குறுய்' முதற்கட்டத்தில் படையினரின் முன்னேற்ற முயற்சிகள் மரபுப் படைப் பலத்தை மட்டுமே சார்ந்தவையாக இருந்தன.

விமானப் படையினர் வான் அரணாக மேலே பறந்தும், குண்டு வீசியும் சுழன்றடிக்க, தரையில் கனரக வாகனங்கள் யானைகள் போல் முன்செல்ல, அவற்றை பாதுகாப்பு கவசமாகக் கொண்டு கனரக பீரங்கித் தாக்குதல்களுடன் தரைப்படை முன்னேறும்.

'ஜயசிக்குய்' முதற்கட்டமானது, பிரதானமாக வவுனியா-யாழ் சாலையில்தான் முன்னெடுக்கப்பட்டது. அதற்கு துணையாக நெடுங்கேணியில் இருந்தும் புளியங்குளம் நெடுங்கேணி சாலையில் படை நகர்வு மேற்கொள்ளப்பட்டது.

பாரிய படைக்கலப் பலத்துடன் வான் படை உதவியுடன் அசுரத்தனமாக முன்னேற ஆரம்பித்தால் புலிகள் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றே படைத்தரப்பு கணக்குப்போட்டது.

புலிகளின் பாரிய பங்கர்களை விமானப் படை துவம்சம் செய்துவிடும் என்று நம்பப்பட்டது.

**ஆனால் புளியங்குள புகையிரத நிலையத்தில் இருந்து இரண்டு மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் புளியங்குள நகரைப் பிடிக்க, அடிமேல் அடி அடித்தும், குண்டு மேல் குண்டு போட்டும், ஷெல் மேல் ஷெல் அடித்தும் பல மாதங்கள் மல்லுக் கட்டியும் கூட படையினரால் முடியவில்லை.**

புளியங்குள நகரை பிடிப்பதற்கு புலிகள் காட்டிய எதிர்ப்பாலும், புலிகளின் பலத்தை பலகூறுகளாகப் பிரிக்க படையினர் நெடுங்கேணியில் இருந்து மேற்கொண்ட நகர்வுகள் பயனற்றுப் போனதாலும் 'ஜயசிக் குறுய்' முதற்கட்டம் எதிர்பார்த்த இலக்கை எட்டவில்லை.

பாரிய மரபுப் படைபலத்தை வைத்துப் புலிகளை ஒதுக்கித் தள்ளிக்கொண்டு முன்னேறலாம் என்ற கணிப்பும் பொய்யானது.

பெரிய எடுப்புடன் படை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது புலிகள் உஷாராகிவிடுகிறார்கள். மோட்டார் தாக்குதல்களை ஆரம்பித்துவிடுகிறார்கள். எனவே முன்கூட்டியே புலிகளுக்கு செய்தி கொடுப்பது போலாகி விடுகிறது.

உதாரணமாக படை நடவடிக்கை தொடங்கப்போகிறது என்றால், விமானங்கள் இரைந்து கொண்டு பறக்கத் தொடங்கும். படையினர் முன்னேறப் போகும் பகுதிகளை நோக்கி குண்டுகளைக் கொட்டும். படையினரின் ஆட்டிலெறிகளும் குண்டுகளை மழையெனப் பொழியும். இவையெல்லாம் புலிகளையும் போர்ச் சன்னதம் கொண்டு தயாராகச் செய்துவிடுகின்றன.

**பழங்காலத்தில் போர் தொடங்க முன்னர் முரசறைவர். கொம்பு ஊதுவர். வன்னியில் ஜயசிக்குறுய் படையினர் முன்னேறத் தொடங்க முன்னர் விமானக் குண்டோசைகளும், ஷெல் கூவல்களும் கேட்கும்.**

பழங்காலத்தில் நடந்த மரபுப்போர்களில் போரிடும் இரு தரப்பும் ஒருவருக்கு ஒருவர் அறிவித்துவிட்டுத்தான் போர் தொடங்குவதுண்டு.

ஆனால் தற்காலத்தில் மரபுப் போர்களில்கூட போர்த்தர்மங்கள் கிடையாது. ஆனால் பாரியமரபுப் படையின் நகர்வுகள் எதிரிக்கு தெரியாமல் இரகசியமாக மேற்கொள்ளக்கூடியவை அல்ல.

அதேசமயம் தமது படைநகர்வு முயற்சிகளின் அதிர்வொலிகள் புலிகளை கலங்கடிக்கும் என்றும் படையினர் எதிர்பார்த்திருப்பர். குண்டோசைகள், சீறிவரும் விமானங்களின் தாக்குதல்கள், குண்டேவி வரும் டாங்கிகள் போன்றவை தங்கள் எதிரியின் பலத்தை நினைத்து புலிகளை அஞ்ச வைக்கும். இந்தப் பெரிய படையை எதிர்த்து நிற்பது இயலுமா? என்ற நம்பிக்கையீனத்தை தோற்றுவிக்கும் என்றெல்லாம் படையினர் கணிப்பிட்டிருப்பர்.

ஆனால் களநிலவரம் படையினரின் கணிப்பை தலைகீழாக்கி விட்டது. படையினர்தான் புலிகளின் ஊடறுப்புக்களால் பாரிய சேதங்களை சந்தித்தனர். புலிகளின் கெரில்லா பாணியும், மரபுப் போர் பாணியும் கலந்த புதிய போர்முறைக்கு வன்னிக் களத்தில் 'ஜயசிக்குறுய்' படையினர் முகாம் கொடுத்து வருகின்றனர்.

தமது கணிப்புக்கள் பொய்யான நிலையில், பாரிய படைபலத்தை பிரதானமாகக் கொண்டு மட்டும் புலிகளை ஓரம்கட்ட முடியாது என்பதை உணர்ந்து, படையினரும் புதிய உத்திகளை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

**வன்னிக்களம் போரிடும் இரு தரப்புக்களுக்கும் அனுபவங்களையும், அதன் காரணமாக புதுப்புது உத்திகளையும் கற்றுக்கொடுத்து வருகிறது.**

**படையினரின் புதிய உத்திகளில் ஒன்றுதான் முதலில் கெரில்லா நகர்வு மூலம் முன்னேறும் பாதையை சுத்தப்படுத்தல். பின்னர் அப்பாதை வழியாக மரபுப் படையணி நகருதல்.**

புலிகளை உஷார்படுத்தாமல், புலிகளின் கண்களில் படாமல் இரவோடு இரவாக காடுகள் மற்றும் காடுகள் சார்ந்த பகுதிகள் ஊடாக குறித்த பகுதி நோக்கி முன்னேறுவது முதற்கட்டம்.

குறிப்பிட்ட பகுதியில் உள்ள புலிகளின் முகாமை, முக்கிய காவலரண்களை தாக்கியழித்து படைநகர்வுக்கு உள்ள தடைகளை அகற்றுவது இரண்டாவது கட்டம்.

**அதாவது குறிப்பிட்ட பகுதியை கைப்பற்றிக் கொள்வது விசேஷ கொமாண்டோக்களின் வேலை. கைப்பற்றிய பகுதியை தக்க வைப்பது கனரக ஆயுதங்கள், கனரக வாகனங்கள் கொண்ட மரபுப்படைகளின் வேலை.**

'ஜயசிக்குறுய்' இரண்டாம் கட்டத்தின் பின்னர்தான் மேற்கண்ட உத்தியை படையினர் கையாளத் தொடங்கினர்.

புளியங்குளத்துக்கு கிழக்கே நெடுங்கேணியில் இருந்து முன்னேறி நயினாமடு, மதியாமடு, பெரியமடு பகுதிகளில் படையினர் பாரியளவில் நிலைகொண்டதும் இரண்டாம் கட்டத்தில்தான்.



புலிகள் பயன்படுத்தும் டம்மிகள் இவைதான். சட்டென்று ஏமாற்ற, திசைதிருப்ப மட்டும் உதவும். பாரிய அளவில் ஏமாற்ற உதவாது!

அப்பகுதிகள் காடு சார்ந்து இருந்தமையால் இரகசிய நகர்வுகளில் விசேஷ கொமாண்டோக்கள் ஈடுபட உகந்ததாக இருந்தது.

பெரியமடுவில் இருந்து மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் உள்ள கரிப்பட்ட முறிப்புவரை சென்றதுதான் விசேஷ கொமாண்டோக்களின் பாரிய முதல் நகர்வு.

**அதுமட்டுமல்லாமல், நயினாமடுவில் இருந்து படையினர் கரப்புக்குத்தி, கற்கிடங்கு, விஞ்ஞானகுளம் போன்ற பகுதிகளுக்கு முன்னேறுவதற்கு முன்னதாக விசேஷ கொமாண்டோக்கள்தான் பாதையைச் சுத்தப்படுத்திக் கொடுத்திருந்தனர்.**

கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் பகுதியில் புலிகளின் முகாம் ஒன்றும் விசேஷ கொமாண்டோக்களால் தாக்கப்பட்டது.

'ஜயசிக்குறுய்' இரண்டாம் கட்ட ஆரம்பத்தில் படையினரின் உத்தி புலிகள் எதிர்பாராத ஒன்றுதான்.பெரிய எடுப்புடன் படைகள் முன்னேறும் அல்லது சிறு குழுக்களாக படையினர் படைமுகாமில் இருந்து சற்றுத்தூரம் வரை பதுங்கித் திரிவர் என்றே புலிகள் நினைத்திருந்தனர்.

ஆனால் பெருமளவான கொமாண்டோக்கள் இரவோடு இரவாக காடுகள் ஊடாக நகர்வர் என்பது எதிர்பாராத ஒன்றுதான்.

எனினும் படையினரின் தந்திரத்தை அறிந்தவுடன் துரிதமாக மாற்றுத் தந்திரம் வகுப்பதில்தான் புலிகளின் போர் அனுபவம் கைகொடுக்கிறது.

கடந்த அக்டோபர் மாதம் தொடங்கிய ஜயசிக்குறுய் 2ம் கட்டத்தில் கரப்புக்குத்தி விஞ்ஞான குளத்தை விசேஷ கொமாண்டோக்கள் உதவியுடன் மரபுப்படையணிகள் கைப்பற்றின.

**அதன்பின்னர் நடந்ததுதான் படையினர் எதிர்பாராதது. புலிகள் இதுவரை பல பொறிகளை படையினருக்கு எதிராக வைத்துள்ளனர். ஆனால் கடந்த அக்டோபர் மாதம் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளத்தில் புலிகள் வைத்த பொறிதான் ஜயசிக்குறுய் படையினருக்கு எதிரான பெரிய பொறியாக அமைந்தது.**

கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் பகுதிகளை படையினர் முற்றாக கைப்பற்றி நிலைகொள்ளும் வரை அனுமதித்து, அங்கு விநியோக தளம் அமைத்து ஆயுததளபாடங்கள் கொண்டுவந்து சேர்க்கும்வரை காத்திருந்துவிட்டு, பொறியை இறுக்கினர் புலிகள்.

பதிலுக்கு பதில் என்ற ரீதியில் இருதரப்பின் உத்திகளும் மாறிவருகின்றன என்பதே கள நிலவரமாகும்.

ஜயசிக்குறுய் இரண்டாம் கட்டத்தில் படையினர் கையாண்ட புதிய உத்தியை புலிகள் கண்டுபிடித்தும் விட்டனர்.

முதலில் விசேஷ கொமாண்டோக்கள் சத்தம் இல்லாமல் வருவர். பின்னர் அதிர்வோசைகளுடன் மரபுப்படையணிகள் வரும். எனவே, படையினர் முன்னேற வாய்ப்பு இருக்கக்கூடிய பாதைகளை பூரண கண்காணிப்பில் வைத்திருப்பது, விசேஷ கொமாண்டோக்கள் வந்தால், நன்கு உள்ளே இழுத்துவிட்டு அழித்தொழிப்பது என்று புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் தங்கள் புதிய உத்தியை புலிகள் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை என்று நினைத்தோ என்னவோ, வழக்கம்போல கொமாண்டோ தாக்குதலுக்கு சென்ற விசேஷ கொமாண்டோக்கள் புலிகளின் வலையில் வீழ்ந்தனர்.

'ஜயசிக்குறுய்' இரண்டாம் கட்டத்தில் படையினருக்கு நம்பிக்கையளித்த விசேஷ கொமாண்டோக்கள், ஜயசிக்குறுய் மூன்றாம் கட்டத்தில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளனர்.

'ஜயசிக்குறுய்' மூன்றாம் கட்டம் விசேஷ கொமாண்டோ அணிகளை பிரதானமாக நம்பியே தொடங்கப்பட்டது. மூன்றாம் கட்டத்திற்காக மேலதிகமாக புதிய விசேஷ கொமாண்டோ அணிகளும் வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டன.

4.12.97 அன்று நள்ளிரவில் விசேஷ கொமாண்டோக்கள் நகரத் தொடங்கினர். அவர்கள் முதல் அடி எடுத்து வைத்ததில் இருந்தே புலிகளின் வலை விரிந்து உள்வாங்கத் தொடங்கியது.

**புலிகளின் பிரதான தளத்துக்கு தகவல் செல்ல, பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள சிறுத்தைப் படையணியும் போர்முனைக்கு விரைந்து வந்து சேர்ந்தது. பிரதான தாக்குதல் அணியாக சிறுத்தைப் படையணியே செயற்பட்டது.**

**மன்னகுளத்தில் இருந்தது புலிகளின் டம்மி முகாம் என்று சில ஆங்கில விமர்சகர்கள் கதைவிட்டிருந்தனர். உளவு விமானம் படம் பிடிக்கும் அதை நம்பி கொமாண்டோக்கள் வருவார்கள் என்று புலிகள் காத்திருந்தனராம்.**

முதல் விடயம் என்னவென்றால், உளவு விமானம் படம்பிடித்தால், அதன்பின்னர் விமானம் சென்று இலக்கை தாக்குவதுதான் வழமை. எனவே உளவு விமானம் படம்பிடிக்கும், கொமாண்டோக்கள் வருவர் என புலிகள் நம்பிக் காத்திருக்க வழியில்லை.

இரண்டாவது விடயம் என்னவெனில், உளவு விமானம் படம்பிடிப்பது வீடியோ கமராவில். குறிப்பிட்ட பகுதியில் சற்று நேரம் அப்படியே அசையாமல் நின்று படம் பிடிக்கும் ஆற்றல் உளவு விமானத்திற்கு உண்டு.

உளவு விமானம் படம்பிடித்து தந்தால் அதனை போட்டுப்பார்க்கும்போது, டம்மிகள் என்றால் தெரிந்துவிடும். டம்மி என்றால் எப்படி செய்யப்படும்? சில உருவங்களை செய்து, பொம்மைத் துப்பாக்கிகளை அவற்றின் கையில் கொடுத்து வைத்திருப்பர். புலிகள் இவ்வாறான உத்திகளை கையாள்வது வழக்கம்.

எட்டத்தில் நின்றோ, இருளில் நின்றோ பார்க்கும் எதிரி, சட்டென்று பார்த்த வேகத்தில் டம்மியை உண்மை என நம்பிச் சுட்டால், அந்தச் சத்தத்தில் புலிகள் உஷாராகிவிடுவர். அல்லது வானத்தில் விரைவாக பறந்தபடி குண்டுவீசும் விமானமும் ஏமாந்துபோய் குண்டை வீசிவிட்டுப் போகும்.

ஆனால் நிதானமாக கூர்ந்து நோக்கினாலோ, தொலை நோக்கி வழியாக அவதானித்தாலோ டம்மியா இல்லையா. என்று தெரிந்து விடும். ஏனெனில் டம்மிகள் அசையாது. அப்படியே நட்டுவைத்ததுபோல காணப்படும்.

உளவு விமானம் மூலம் படம் எடுத்து பார்த்தால் டம்மிகளின் சாயம் உடனே வெளுத்து விடும். எடுக்கப்பட்ட படத்தை போட்டுப் பார்க்கும்போது டம்மிகள் என்பதை சுலபமாக கண்டு பிடித்துவிடலாம்.

உளவு விமன படப்பிடிப்பின் பலன்களில் அதுவும் ஒன்று.

அதுமட்டுமல்ல டம்மி ஆட்டிலெறிகளையும் புலிகள் செய்து வைத்திருந்தார்கள். என்றும் ஒரு புரளி. உளவு விமானம் படம் எடுக்க வேண்டும் என்றால் அடர்காடு இல்லாத பகுதியில்தான் சாத்தியம்.

எனவே குண்டுவீசி அழிக்கவும், விமானங்கள் காணக்கூடியதாகவும் தங்கள் முகாமையும், அதனைச் சுற்றி ஆட்டிலெறிகளையும் நிறுத்தி வைக்குமளவுக்கு புலிகள் விவேகம் இல்லாதவர்கள் என்று படையினர் நினைத்தனர், அதனை நம்பிச் சென்றனர் என்பது நல்ல கற்பனை.

**விசேட கொமாண்டோக்கள்**
**வருவர் முன்னே**
**மரபுப் படையணி**
**வரும் பின்னே!**
**புதிய உத்தி**
**புலிகளுக்கு தெரிந்துவிட்டது!**

அதுமட்டுமல்ல, மன்னகுளத்தில் படையினர் அதிகம் பலியாக புலிகளின் ஆட்டிலெறி தாக்குதல்தான் காரணம் என்று படைத்தரப்பு கூறுகிறது.

அதன்மூலம் விசேஷ கொமாண்டோக்களை சுற்றிவளைத்து முற்றுகையிட்டு தாக்கிய புலிகளின் அணிகளின் திறனை மறைக்கப் பார்க்கிறார்கள். ஒரு பகுதியில் பாரிய அளவில் மரபுப் படைகள் முன்னேறும்போதும், அல்லது ஒரு பகுதியில் நிலைகொண்டிருக்கும்போதுமே அப்பகுதியை நோக்கி ஆட்டிலெறிச் ஷெல்களை நீண்டதூரத்தில் இருந்து ஏவலாம்.

**காடுகள் சார்ந்த பகுதிகளில் துரிதமாக முன்னேறவும்,பின்வாங்கவும், பதுங்கவும் வசதியாக குறுந்தூர ஆயுதங்களுடன் முன்னேறும் விசேஷ கொமாண்டோக்களை ஆட்டிலெறியால் தாக்கியழிக்க முடியாது.**

முதல் ஷெல் வந்து விழுந்ததுமே உஷாராகி விடுவர். தங்கள் நகர்வு தெரிந்துவிட்டதென்று பின்வாங்கியும்விடுவர். அப்படி பின்வாங்குவோரை புலிகள் சுற்றிவளைக்கவும் முடியாது.

ஏனெனில் ஆட்டிலெறி ஷெல்களுக்கு புலிகளும் பலியாக நேரலாம். படையார், புலியார் என்று பார்த்தா ஷெல் வெடிக்கும்?!

ஆனால் மன்னகுளத்தில் நடந்தது முற்றுகையிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல். விசேஷ கொமாண்டோக்களும், அவர்களை நிழலாகத் தொடர்ந்து, தங்கள் முற்றுகை வலை விரித்த புலிகளின் அணிகளும் ஒரே பகுதியில் மிகக் கிட்டத்தில் நின்று சண்டையிட்டனர்.

குறுந்தூர ஆயுதங்களுடன் இருதரப்பும் மோதிக்கொண்டது. கையில் தாங்கிச் செல்லக்கூடிய நடுத்தர மோட்டார்கள், மற்றும் ஆர்.பி.ஜிக்கள், கிரனேட் ஏவிகள் போன்றவற்றுடன் சிறுத்தைப் படையணியினர் பாரிய அதிரடி நடத்தினர்.

**புலிகளின் முற்றுகைக்குள் விசேஷ கொமாண்டோக்கள் சிக்கிய செய்தி அறிந்துகூட படையினரும் ஆட்டிலெறி தாக்குதல் நடத்தவில்லை. அப்படி தாக்குதல் நடத்தினால் தங்கள் தரப்பை தாங்களே அழிப்பதாக முடிந்துவிடும் என்பதால் தவிர்த்தனர். இருதரப்புக்குமே உள்ள பிரச்சனை அதுதான்.**

அது தவிர ஆட்டிலெறி ஷெல்களை ஏவினால் பாரிய தரைநகர்வில் ஈடுபடும் படைகளை பாதுகாப்புத் தேடிப் பதுங்கச் செய்யலாம். அதன் மூலம் முன்னேற்றத்தை தடங்கலாக்கலாம். அந்த வகையில் ஆட்டிலெறிகளும், கனரக மோட்டார்களும் வன்னிக் களத்தில் புலிகளுக்கு கைகொடுக்கின்றன.

ஆனால் படையினருக்கு பாரிய உயிரழிவை ஏற்படுத்தி இருப்பவை படையினரை நெருங்கி குறிபார்த்து குறுந்தூர ஆயுதங்களால் நடத்திய தாக்குதல்கள்தான். தாண்டிக்குள ஊடறுப்பு முதல், மன்னகுளம் முற்றுகைத் தாக்குதல் வரை புலிகளின் படையணிகளின் அதிரடித் தாக்குதல் மூலம் பெற்ற பலன்களேயாகும்.

**போர் அரங்கில் புலிகளின் கெரில்லாத் திறன் புதிராக இருப்பதால் புரளிகளும் கிளப்பப்படுகின்றன. மறுபுறம் படையினரும் தங்கள் பாரிய இழப்புக்களுக்கு புலிகளின் அணிகளை காரணம் சொல்வதைவிட, மோட்டார்களையும், ஆட்டிலெறிகளையும் காரணம் சொல்வது ஓரளவு கௌரவம் என நினைத்து விடுகின்றனர்.**

இன்னொரு வேடிக்கை, மன்னகுளம் முகாமில் புலிகளின் பாரிய பீரங்கிகள் இரண்டு அழிக்கப்பட்டதாக அரச வானொலி அறிவித்தது. அதேசமயம் பீரங்கித் தாக்குதல் காரணமாகவே படையினருக்கு இழப்பு என்றும் முன்னுக்குப்பின் முறணாக்க் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு சந்தையில் 9.12.97 அன்று குண்டுவெடித்தில் முதல் நாளன்றே ஐந்துபேர் பலியாகினர். இத் தகவல் சகல செய்தி நிறுவனங்களுக்கும் அன்றைய தினம் மூன்றுமணிக்கு முன்னரே கிடைத்திருந்தது. பின்னர் மேலும் ஒருவர் மரணமாகியிருந்தார்.

ஆனால் அரச செய்தி நிறுவனங்கள் குண்டை எறிந்தது புலிப் பயங்கரவாதி என்பதுமட்டும் தெளிவாக தெரிந்ததுபோல் கூறின. பலியானோர் தொகைகூட இரவுச் செய்திவரைகூட சரியாகத் தெரியவில்லை. மூன்றுபேர் பலி என்று இரவு பத்து மணிச் செய்தியிலும் ரூபவாஹினி கூறியது.

நேரடித் தொடர்புள்ள ஒரு பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில்கூட சரியான விபரம் பெற ரூபவாஹினியால் முடியவில்லை. ஆனால் மன்னகுளத்தில் முன்னூறு புலிகள் பலியானதை மட்டும் துல்லியமாக எண்ணிவிடுகிறார்கள்.

படைத்தரப்பினரும் மன்னகுளம் சண்டையில் பலியான புலிகளின் எண்ணிக்கையைத்தான் முதலில் கணக்கிட்டு கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்னமும்கூட தமது தரப்பில் பலியான எண்ணிக்கையை எண்ணிக் கொண்டே இருக்கிறார்கள்.

இன்னொரு புரளி யாதெனில், உளவு விமானம் இருப்பதால், புலிகள் முகாம் தாக்குதல்களுக்கு ஒன்றுகூட முடியாதாம். கண்டுபிடித்துவிடுமாம்.

உளவு விமானத்தை கண்டுபிடித்தவுடனேயே அதனை ஏமாற்றவும் பல வழிகள் கண்டுபிடிக்கப்பட்டே உள்ளன.

சில உளவு விமானங்களால் தரையில் வாகனங்கள் நடமாடினால் மோப்பம் பிடிக்க இயலும். அதாவது உலோகங்களை கண்டறியும் சக்தி கொண்டவை. அப்படியிருந்தும் காடுகள் மத்தியில் உள்ள முகாம்களை அவற்றால் ஊடுருவிப் பார்க்க இயலாது. சூரிய வெளிச்சம்கூட புகுவதற்கு கஷ்டப்படும் அடர் காடுகள் வன்னியில் உள்ளன.

முகாம் தாக்குதல்கள் பட்டப் பகலில் நடப்பதில்லை. தவிர உருமறைப்பு, தரையோடு நகர்வு என்று எத்தனையோ உத்திகள் உள்ளன.


உளவு விமானத்தால் புலிகளின் நடமாட்டத்தையோ, முகாம்களையோ ஊடுருவி அறிய முடியுமானால் வன்னியில் 'ஜயசிக்குறுய்' எப்போதோ முடிந்திருக்கும். வவுனியா-யாழ் சாலையில் உள்ள புலிகளின் பங்கர்களைக்கூட கண்டறிந்து காட்ட உளவு விமானத்தால் இயலவில்லை.

நவீன ஆயுதங்கள், நவீன இராணுவ வாகனங்கள் என்பவை மட்டும் போரின் போக்கை தீர்மானிப்பதில்லை. தவிர உலகில் மிக முன்னேறிய தொழில் நுட்பங்களை இலங்கை அரசு பெறுவதற்கு நாட்டின் ஏழ்மையும் இடமளிக்காது. உளவு விமானம் என்பது நம் நாட்டுக்கு புதிது. போர்க்களங்களுக்கு பழையது.

மொத்தத்தில் போர்க்களத்தில் பெரும் படையணியை பொருளாதார, இராணுவ தளபாட, ஆட்பலம் என்பவற்றில் சிறு படையான புலிகள் எதிர்த்து தாக்குப் பிடிப்பது இராணுவ விமர்சகர்களுக்கு புதிர்தான். அப்புதிருக்கு விடை காண முடியாதபோது புரளிகளும், கற்பனைகளும் உலாவுகின்றன. உண்மையில் அந்தப் புதிருக்கு விடை, யுத்தம் ஏன் ஆரம்பமானது? இன்னமும் ஏன் தொடர்கிறது? என்பதற்கான பதிலில் உள்ளது. ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**வவுனியா அகதிமுகாம்** பக்கமும் சில தமிழ்க் கட்சிகளின் கடைக்கண் பார்வை சென்றதாம். வேட்பாளராக போட்டியிட வேட்பு மனுவில் கையொப்பம் போட்டால், முகாமில் இருந்து வெளியே எடுத்து விடுகிறோம் என்று பேரம் பேசப்பட்டதாம். "உங்களுக்கு வெளியே வரவேணும், எங்களுக்கு வேட்பாளர் வேணும், போடுங்கோ கையெழுத்தை" எண்டு நயமாக பேசி வலைவீசினார்களாம்.

**மனித உரிமை தினத்தன்று** ஜனநாயகக் கட்சியினர் தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினவை. ஆனால் தங்கள் கட்சிப் பெயரில் நடத்தவில்லை. எனினும் அக் கட்சி உறுப்பினர்கள்தான் முன்னணியில் நின்றனர். ஆனால் இன்னொரு தமிழ்க்கட்சியான கழகத்தினரும், கழக மாணிக்கத்தாரும் திடீரென்று ஆள் அம்பு சேனையுடன் வந்து ஆர்ப்பாட்டத்தில் முன்வரிசையில் காணப்பட்டவையாம். எங்கள் பலத்திலும், வளத்திலும் நாங்கள் வேறு பெயரில் ஆர்ப்பாட்டம் நடத்த, அவை வந்து பெயரைத் தட்டிக் கொண்டு போயிட்டினமே எண்டு ஜனநாயக கட்சி வட்டாரம் தலையில் அடித்து கொண்டதாம். கழக மாணிக்கத்தார் சைவக் கொக்காகிவிட்டார். எங்கே அகிம்சை போராட்டம் நடந்தாலும் தவறாமல் ஜோராக ஆஜராகிறார். நல்ல முன்னேற்றம்.

**களுத்துறைச் சிறையில்** பலியானவர்களின் உடலைக்கூட தமிழ்க் கட்சிகளால் மீட்டுக்கொடுக்க முடியவில்லை. இந்த இலட்சணத்தில் கைதிகளின் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டவையாம். அதிகாரத் தரப்பாருக்கும் கைதிகளுக்கும் இடையே சமரசம் செய்யும் தரகர் வேலை தேவைதானோ? இவைதான் போராடமாட்டினம், போராட நினைப்போரை பின்னுக்கு நின்று பிடித்திழுக்காமலாவது இருக்கலாமல்லோ.

**ரெண்டு எழுத்தாரின்** ஆசீர்வாதம் தங்களுக்கு இருப்பதாக யாழில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் சிலர் கதை ஒன்றை உருட்டிவிட்டுள்ளனராம். கிழக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் தமிழ்க் கட்சி ஒன்று தங்களுக்கு ரெண்டு எழுத்தாரின் ஆசீர்வாதம் இருப்பதுபோல பிரசாரம் செய்ததும், அதன் பரிசாக பல உறுப்பினர்களை பலிகொடுத்ததும் நேற்றைய வரலாறு...நாளை?

**யாழ் குடாநாட்டில்** 'கொலரா' பரவும் அறிகுறி தெரிந்ததும் தமிழ்க் கட்சி ஒன்று அறிவுரைகள் சிலவற்றை பிரசுரமாக வெளியிட்டனராம். இன்னொரு கட்சியினருக்கு பொறுக்க முடியவில்லை. 'எய்ட்ஸ்' நோய் தடுப்புப் பற்றி ஒரு பிரசுரம் அடித்துவிடலாமோ எண்டு 'எய்ட்ஸ்' தொடர்பான பூரண விபரங்களை புயல் வேகத்தில் திரட்டி வருகின்றனராம். கூட்டான கட்சியினர் வேண்டுமானால், முதுமையிலும் இளமையாக தேர்தல் பணியாற்றுவது எப்படி? என்ற தகவல்களை வெளியிட்டு உதவலாம். இன்றைய தமிழ்க் கட்சிகளின் எதிர்கால 'மூத்த தலைவர்'களுக்கு உபயோகப்படும்.

**ரெண்டு எழுத்தார்** தேர்தலைப் பற்றி என்ன சொல்லியிருக்கினம் எண்டு அறிவதில் யாழில் தேர்தலில் போட்டியிட ஆவல் உள்ள பலர் ஆர்வமாய் ஓடுப்பட்டுத் திரிகின்றனராம். ஆசை யாரைத்தான் விட்டது? யாழ் மாநகர முன்னாள் ஆணையரும் நாடிபிடித்துப் பார்க்க ஆலாய்ப் பறந்து திரிந்தவராம். அப்பா ஞானம், கிளியரன்னைக் காணோம்.

**எங்கள் தமிழ்க் கட்சிகளுக்கு** தமாஷ் குணம் எக்கச்சக்கம். சமீபத்தில் சகல கட்சிகளும் மாறி மாறி, பயன்படுத்திய பொதுத் தமாஷ் யாதெனில், 'தேர்தல் நடத்தால் எமது கட்சியும் போட்டியிடும்.' தமாஷைப் பார்த்தியளோ? 'தேர்தல் நடக்காட்டி எப்படிப் போட்டியிடுவது?'

**அரச தொலைக்காட்சியில்** 'கையளவு மனசு' பலராலும் பார்க்கப்படும் நல்ல நாடகம். வியாழக்கிழமைகளில் ஒளி பரப்பாவது வழக்கம். கடந்தவாரம் ஒரு நாள் முன்னதாக புதன்கிழமை ஒளிபரப்பாகும் என அறிவிப்புப் போட்டனர். சனம் காத்திருந்தது. வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. 'இன்று நாடகம் ஒளிபரப்பாகாது' எண்டு சின்னதாக அறிவிப்புக்காட்டக்கூட முடியவில்லையோ? அரச தொலைக்காட்சியில் மட்டுமில்லைப் பாருங்கோ எங்குமே செந்தமிழ் என்றால் இளக்காரம்தான்! நிலமை வரவர மோசமாகுது! எப்படியாவது இனப்பிரச்சனையைத் தீர்ப்போம் என்பதின் அர்த்தம் இப்பதான் வெளிக்குது! தீர்க்கத்தான் விரும்புகினம்.

**இவ்வாரப் பொன்மொழி** மிஸ்டர் அநுரா பண்டாரநாயக்கா. 'அவர் மட்டும் என்ன யோக்கியமோ?' எண்டு கேட்க வேண்டாம். யார் சொல்கிறார் என்பதல்ல, என்ன சொல்கிறார் எண்டு பாருங்கோ.

**"இந்த அரசாங்கம்**
**நேட்டோ (NATO)**
**போன்றது.**
**கதை மட்டும்**
**செயல் இல்லை!"**
**(NO ACTION TALK ONLY)** ■

# 161

# பிரபாகரனைச் சுட்டு வீழ்த்திய வரதராஜப் பெருமாள்

வன்னிக்காட்டில் புலிகள் இயக்கத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளின் போது, நித்திகைக்குளத்தில் தான் இந்தியப்படையினரின் பிரதான முகாம் இருந்தது. வன்னிக் காட்டில் புலிகளுக்கு எதிரான போரின் நடவடிக்கை மையம் அதுதான்.

யாழ் குடாநாட்டில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது இந்தியப் படைக்கு புலிகளின் இராணுவ ஆற்றலும், கெரில்லாப் போர்திறனும் விளங்கிவிட்டது.

எனவே வன்னிப்போர்க் களத்தில் 'மெதுவாக ஆனால் உறுதியாக' என்ற கொள்கையுடன் தனது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

காட்டுக்குள் இந்தியப் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களும் அவர்களின் நடவடிக்கைகளை மந்தகதிக்கு உள்ளாக்கின.

வேகமாகச் சென்றால் புலிகளின் பொறிகளுக்குள் சிக்கி பாரிய உயிரிழப்பை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அத்துடன் ஆயுத தளபாடங்களை புலிகளிடம் இழப்பதன் மூலம், புலிகளுக்கு புதுப் பலத்தையும் கொடுப்பதாகிவிடும் என்று கருதியே இந்தியப் படையினர் 'மெதுவாக ஆனால் உறுதியாக' என்ற கொள்கையை வகுத்தனர்.



ஆனால், தமது பலம், எதிரியின் பலம் இரண்டையும் கணக்கில் கொண்டு இந்தியப் படை அதிகாரிகள் வகுத்த கொள்கையை இராணுவ விமர்சகர்கள் பலரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

## கட்டுக்கதைகள்

புலிகளின் திறனை மக்கள் அறிந்து விட்டால், தங்கள் மதிப்பு என்னாவது என்ற நினைப்பில் ஏனைய இயக்கங்களும் சில கட்டுக்கதைகளை கிளப்பிவிட்டன.

'பிரபாகரனின் முகாமை சுற்றி வளைத்தது இந்தியப்படை. அந்த நேரம் புதுடில்லியில் இருந்து வந்த உத்தரவு காரணமாக படைகள் திரும்பிவிட்டன' என்று ஒரு கதை அடிபட்டது.

படைகள் பிரபாகரனின் முகாமை சுற்றிவளைத்துவிட்டு, புதுடில்லியில் இருந்து உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்வரை, புலிகள் என்ன தூங்கிக் கொண்டிருந்தனரா? அபத்தமான அந்தக் கட்டுக்கதையை இப்போதுகூட் சிலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

'பிரபாகரனது உயிருக்கு ஊறு நேருவதை இந்திய அரசு விரும்பவில்லை' என்பது இன்னொரு கதை.

வன்னிக்காட்டில் பிரபாகரனின் முகாம் இருக்கக்கூடும் என்று கருதப்பட்ட பகுதிகள்மீது இந்திய விமானங்கள் வட்டமிட்டன. குண்டுகளை மழையாகப் பொழிந்தன.

பிரபாகரன் எங்கிருக்கிறார் என்று பார்த்து, அவர்மீது படாமல் விழுவதற்கு குண்டுகளுக்கு என்ன கண்ணா இருந்தது? பிரபாகரனின் உயிருக்கு ஊறு விளைவிக்க எண்ணமில்லையென்றால் குண்டுமழை எதற்காக?

இந்தியப் படையால்கூட வன்னிக் காட்டுக்குள் முன்னேற முடியவில்லை. என்ற உண்மையை சிலரால் நம்ப முடியாமல் இருந்தது.

இந்தியப்படை தொடர்பாக இருந்த பிரமையும் அதற்கு ஒரு காரணமாக இருந்தது. பாரிய படைபலத்துடன் சென்றால் புலிகளை ஊதித்தள்ளிவிடலாம் என்று கெரில்லாப் போர் அனுபவம் இல்லாத இயக்கங்களின் தலைவர்களும் கனவு கண்டுகொண்டிருந்தனர்.

தங்கள் கனவுகளுக்கும், பிரமைகளுக்கும் மாறாக போர் நிலவரம் அமைந்த போது அவர்கள் எல்லோருமே கட்டுக் கதைகளை நாடினார்கள்.

பிரபாகரனையோ புலிகள் இயக்கத்தையோ பாதுகாக்க வேண்டிய அவசியம் இந்திய அரசுக்கு ஏன் ஏற்படவேண்டும்? என்ற கேள்விக்கு யாரிடமும் பதில் இருக்கவில்லை.

இந்திய அரசு காலால் இட்ட பணியை தலையால் செய்யக்கூடிய இயக்கங்கள் இருந்தன. செய்துகொண்டும் இருந்தன.

தன் கருத்துக்களை ஏற்காத, சுய கௌரவம் பார்க்கின்ற புலிகள் இயக்கத்தை இந்தியா பாதுகாக்க முற்படுவதற்கு ஒரு காரணமும் இருக்கவில்லை.

இந்தியப் படையின் முதல் நடவடிக்கைகூட யாழ்ப்பாணம் கொக்குவிலில் பிரபாகரனை பிடிக்கும் திட்டத்துடன்தான் ஆரம்பமானது.

## கோயபல்ஸ்

சிலர் வேறு காரணம் கூறினர். 'பிரபாகரனுக்கு ஊறு நேருமானால் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடையும் என்று ராஜீவ் காந்தி நினைத்திருக்கலாம் அல்லவா?' என்கின்றனர்.

அதுவும் தவறான அபிப்பிராயம்தான்.

ஏனெனில், அமிர் கொலையால் ஏற்பட்ட அனுதாபத்தை, பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற செய்தி ஏற்படுத்திய தாக்கம் அடித்துச் சென்றுவிட்டது.

அமிர்தலிங்கத்தைவிட பிரபாகரனுக்கு தமிழ் மக்களிடம் ஆதரவு இருக்கிறது என்பதை கணிப்பிடத் தவறிவிட்டனர்.

இந்திய வானொலி, தொலைக்காட்சி உட்பட, இந்தியப் பத்திரிகைகளும் வரதராஜப் பெருமாள் சொன்னதை நம்பி அச் செய்தியை பெரிதாக வெளியிட்டன.

இந்திய வானொலியிலும், தொலைக் காட்சியிலும் அச்செய்தியை கேட்டதும் தமிழக மக்கள் காட்டிய பிரதிபலிப்பு இந்திய அரசையே திகைக்க வைத்தது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வெள்ளைக் கொடிகள் உடனடியாக பறக்க விடப்பட்டன. எங்கும் சோகமயமான நிலை ஏற்படத் தொடங்கிவிட்டது.

இலங்கையிலும் தமிழ் பேசும் மக்களிடம் அனுதாப அலை வீசத் தொடங்கியது. இந்தியப் படைதான் பிரபாகரனை பிடித்து வைத்துக் கொண்டு கதை கட்டி விடுகிறதோ? என்று மக்கள் சந்தேகித்தனர்.

மொத்தத்தில், வரதராஜப் பெருமாள் புலிகளுக்கு எதிராக செய்த பிரசாரம், புலிகளுக்கு சாதகமான பிரசாரமாக மாறியது.

ஆனாலும் வரதராஜப் பெருமாள் சற்றும் சளைக்கவில்லை. பத்திரிகையாளர்களுக்கு எப்படிச் சொல்கிறேன் தெரியுமா? மேலே படியுங்கள் புரியும்.

## மாபெரும் கதை

1989, ஜூலை 13ல் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப் பட்டனர்.

அந்த அமளி அடங்குவதற்கு இடையில், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு ஒரு தகவல் எட்டியது.

அமிர் கொலை விடயத்தில் பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் இடையே கருத்து முரண்பாடு வெடித்தது.

அமிரை தீர்த்துக்கட்ட பிரபா திட்டம் தீட்டியது மாத்தையாவுக்கு தெரியாது. அதனால் பிரபாகரனுடன் பிரச்சனைப் பட்டார் மாத்தையா.

பிரச்சனையின் முடிவில் மோதல் மூண்டது. மாத்தையாவின் கைதான் மேலோங்கியது.

பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மெய்க்காவலர்களும் கொல்லப்பட்டனர்.

கிடைத்த தகவல் அதுதான். ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களுக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

முதற்காரியமாக இந்திய உளவுப் பிரிவான 'றோ' விடம் தெரிவித்தனர்.

'றோ' அதனை மளமளவென்று ராஜீவ் காந்திக்கு தெரிவித்தது.

உடனே பெரும் பிரசாரமாக முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

தன் வாயாலேயே அச் செய்தியை தெரிவிக்க ஆசைப்பட்டார் வரதராஜப் பெருமாள்.

பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் அனைவருக்கும் அழைப்புக்கள் பறந்தன. ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்கள், மாகாணசபை அலுவலகங்கள் எங்கும் ஒரே கொண்டாட்டம்.

தங்களுக்கு கிடைத்த தகவலை சரிபார்க்கக்கூட அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. அமிர் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டு பலியானவர்களில் ஒருவர் மாத்தையாவின் மெய்க்காவலராக இருந்தவர் என்ற தகவல் கூட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு தெரியவில்லை.

அது தெரிந்திருந்தால், அமிர் கொலை விவகாரத்தில் பிரபா- மாத்தையா கருத்து முரண்பாடு என்ற கதையை நம்பியிருக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்ல, அமிர் கொலையை வைத்து தமிழ் மக்களிடம் புலிகளுக்கு எதிரான உணர்வை ஏற்படுத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். முயற்சி செய்தது அல்லவா.

அந்த முயற்சியைக்கூட, பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற பிரசாரம் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரே பாழடித்தும் விட்டனர்.

வரதராஜப் பெருமாள் பின்வரும் தகவலை திட்டவட்டமாகக் கூறினார்:

"பிரபாகரனின் உடல் இறுதி அஞ்சலிக்காக வல்வெட்டித்துறையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது நெற்றியில் திலகமிடப்பட்ட நிலையில் பூத உடல் காணப்படுகிறது."

அதைத் தொடர்ந்து இன்னொரு செய்தியையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்டது.

"வல்வெட்டித்துறையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பிரபாகரனின் உடலை மாத்தையா குழுவினர் எடுத்துச் சென்றுவிட்டனர். மக்கள் அஞ்சலி செலுத்தினால் பிரபாகரன்மேல் அனுதாபம் ஏற்பட்டுவிடும் என்று நினைத்தே உடலை எடுத்துச் சென்று விட்டனர்."

"பிரபாகரனுடன் கிட்டுவும் கொல்லப் பட்டார். கிட்டுவின் உடலை உடனடியாக எரித்து விட்டார்கள்." என்றும் செய்திகள் வெளியாகின.

பிரபாகரன் மாத்தையா ஆகியோருக்கு இடையில் மோதல் நடந்ததாக தவறான தகவல் கிடைத்தது. அதனை ஈ.பி.ஆர்.எல்.எஃப். நம்பிவிட்டது என்றதோடு கதை முடியவில்லை.

பின்னர் வரதராஜப் பெருமாள் சொன்ன கதைகள் யாவும் திட்டமிட்டே கூறிய பொய்களாக அமைந்தன.

வல்வெட்டித்துறையில் உடல் இருந்தது என்றதும், பிரபாகரனின் உடலுக்கு அவரது மனைவி திலகமிட்டார் என்று கூறியதும் வரதராஜப் பெருமாள் நன்கு தெரிந்தே சொன்ன பொய்கள்தான்.

## இந்தியப் பத்திரிகைகள்

தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள் பல பிரபாகரன் பற்றி வெளியான தகவல்களை நம்பவில்லை.

கேள்விக்குறியுடன்தான் செய்திக்கு தலைப்பிட்டு இருந்தன.

தினமலர் பத்திரிகை மட்டும்தான் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று உறுதியாக நம்பிச் செய்திகளை வெளியிட்டது.

24.07.1989 அன்று தினமலர் வெளியிட்ட செய்தி இது:

"தமிழர் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டதை அடுத்து பிரபாகரனுக்கும் அவருடைய துணைத் தலைவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் தான் துப்பாக்கிச் சண்டை வரை சென்று, பிரபாகரன், கிட்டு மரணத்தில் முடிந்தது. தினமலர் நிருபர் பல்வேறு தரப்பிலும் திரட்டிய தகவல்கள் அதனை நிரூபிக்கின்றன. பிரபாகரன் கொலை செய்யப்பட்டு இன்றுடன் ஒருவாரம் முடிகிறது." என்று செய்தி வெளியிட்டது தினமலர்.

அத்தோடு நிறுத்தவில்லை. செய்தி மேலும் தொடர்கிறது பாருங்கள்:

"பல ஊர்களில் பிரபாகரன் படத்திற்கு மக்கள் வரிசையில் நின்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

பிரபாகரனையும் கிட்டுவையும் தீர்த்துக் கட்ட நேர்ந்தது ஏன்? என்பதை விளக்கி மாத்தையா பேசியுள்ள ஆடியோ கசட்டுக்கள் இலங்கைத் தமிழர் பகுதிகளில் ஆங்காங்கே ஒலிபரப்பப்படுகின்றன.

சில இடங்களில் பிரபாகரன், கிட்டு ஆகியோரின் படங்கள் ஒட்டப்பட்டு இதய அஞ்சலி என்று எழுதப்பட்டு பூக்கள் போடப் பட்டுள்ளன."

மேற்கண்ட செய்தி தினமலர் தானாக வெளியிட்ட செய்தி அல்ல. சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வட்டாரங்கள் கொடுத்த செய்தி.

## உறுதிப்படுத்தல்

"பிரபாகரன் உயிருடன்தான் இருக்கிறார். புரளிகளை நம்பவேண்டாம்" என்று தமிழ்நாட்டில் பல பகுதிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

தினமலரும் விடவில்லை. 25.07.89 அன்று தினமலர் வெளியிட்ட செய்தியைப் பாருங்கள்:

"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவருடைய தளபதியான மாத்தையாவால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை திட்டவட்டமாக நேற்று வெளியிட்ட ஒரே நாளிதழ் தினமலர்தான் என்பதை வாசகர்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

எல்லாப் பத்திரிகைகளிலும் கேள்விக் குறியுடன் வெளியான இந்த முக்கிய செய்தியை முழுமையாகவும், விரிவாகவும், ஆதார பூர்வமாகவும் வாசகர்களுக்கு வழங்க தினமலர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது.

ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தினமலர் செய்தி பொய்யானது என்று சில நகரங்களில் சுவரொட்டி மூலம் செய்த பிரசாரம், கொழும்பில் நேற்றுப் பிற்பகல் இலங்கை அரசு வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிப்பினால் முடமாக்கப்பட்டுள்ளது." என்று தினமலர் செய்தி, வெளியிட்டதுதான் உச்சக்கட்டம்.

## மறுப்பு

பிரபாகரன் கொல்லப்பட்டது உண்மை என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியதாக செய்திகள் வெளியாகின.

செய்தியைப் பார்த்ததும் ஜனாதிபதி பிரேமதாசா கடுப்பாகிவிட்டார்.

புலிகளுட்ன் நடக்கும் பேச்சுக்களுக்கு லலித் கூறிய கருத்து குந்தகமாகிவிடும் என்று நினைத்தார் பிரேமதாசா.

உடனே மறுப்பு விடும்படி லலித் அத்துலத் முதலிக்கு பிரேமதாசாவிடம் இருந்து தகவல் பறந்தது.

"நான் அவ்வாறு கூறவில்லை" என்று பல்டியடித்தார் லலித். மறுப்பும் பத்திரிகைகளில் சுடச்சுட வெளியானது.

பிரபாகரன், மாத்தையா மோதல் செய்தி கட்டுக் கதை என்ற தகவலை புலிகள் பிரேமதாசாவுக்கும் எட்டச் செய்திருந்தனர்.

## நக்கீரன் நாடகம்

சந்தனமரக் கடத்தல் மன்னன் வீரப்பன் விவகாரத்தில் சமாதான தூதராக சென்றவர் 'நக்கீரன்' பத்திரிகை ஆசிரியர் கோபால். அதனால் அவரது பெயர் சமீபத்தில் இலங்கைப் பத்திரிகைகளிலும் அடிபட்டது.

1989ல் 'நக்கீரன்' மூலம் கோபால் ஒரு காரியம் செய்தார்.

எந்தத் 'தினமலர்' பத்திரிகை பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற செய்தியை உறுதிப் படுத்தியோ, அதே தினமலர் பத்திரிகையை பிரபாகரன் வாசித்துக் கொண்டிருக்கும் காட்சியை நக்கீரன் முகப்பு அட்டையில் தாங்கிவந்தது.

பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று



வெளியான செய்தியைத் தாங்கிய 'தினமலரை' பிரபாகரன் ஓர் புன்னகையுடன் படித்துக் கொண்டிருந்த காட்சிதான் வெளியானது.

நக்கீரனில் பிரபாகரனின் புகைப் படம் வந்ததும்தான் தமிழ்நாட்டில் பலருக்கு பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று நிம்மதி ஏற்பட்டது.

ஆனால் அப் புகைப்படம் உண்மையானது அல்ல. என்ன நடந்தது தெரியுமா?

பிரபாகரன் போன்ற தோற்றமுடைய ஒருவரின் கையில் தினமலரை கொடுத்து படம்பிடித்தனர். பின்னர் புகைப்படத்தில் பிரபாகரனின் தலையை கச்சிதமாக பொருத்திவிட்டனர். 'நக்கீரன்' கோபால் ஓவியர் என்பதால் சிறப்பாக செய்து முடித்தார்.

பிரபாகரன் உயிருடன் இருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட பின்னர், நக்கீரன் கோபால் வாசகர்களுக்கு உண்மையைத் தெரிவித்தார்.

## பிரபாவுக்கு சந்தேகம்

பிரபாகரன் கொல்லப்பட்டார் என்ற செய்தியை வன்னிக்காட்டில் இருந்து இரசித்துக் கேட்டார் பிரபாகரன்.

பின்னர் பிரபாகரன் பத்திரிகையாளர்களை முதன் முதலாக சந்தித்தபோது என்ன கூறினார் தெரியுமா?

"எனக்கே நான் இருக்கிறேனா என்று சந்தேகமாகிவிட்டது. என்னை நானே கிள்ளிப் பார்த்துக்கொண்டேன்."

கொழும்பில் புலிகளின் ஆதரவாளராக இருந்தவர் மாணிக்கசோதி. பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பதை நிரூபிக்க வீடியோ கசட் ஒன்றை ஏ.பி. செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து போட்டுக் காண்பித்தார்.

அதிலே, பிரபாகரன்,மாத்தையா, யோகி ஆகியோர் அருகருகே அமர்ந்திருந்தனர். யோகி எழுந்து பின்வருமாறு கூறினார்:

"இந்தியப் படை வன்னியில் மண்கவ்வியிருக்கிறது. எங்கள் தலைவரை நெருங்க முடியாதவர்கள், தங்கள் கையாலாகாத்தனத்தினால் பொய்யான பிரசாரங்களை செய்துவருகின்றனர்" என்று யோகி கூறினார். வீடியோ கசட்டில் இருந்தது அதுதான்.

பிரபாகரனின் உயிருக்கு ஊறு நேர்ந்தால், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு பாதகம் ஏற்படும் என ராஜீவ் கருதியிருந்தால்,பிரபாகரன் பலியானார் என்ற செய்தியை 'றோ'வும் முன்னின்று பரப்பியிருக்காது.

இந்தியப் படை பிரபாகரனை நெருங்கக்கூடாது என்று நிர்ப்பந்தம் இருந்ததா? என்று இந்திய அமைதிப்படை தளபதிகளில் ஒருவரான திபீந்தர் சிங்கிடமும் கேள்விகள் சென்றன.

அவர் ஓய்வுபெற்ற பின்னர் எழுதிய புத்தகத்தில் அக் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறார்:

"அப்படி எந்த நிர்ப்பந்தமும் எக்கட்டத்திலும் ஏற்பட்டதில்லை!"

இந்திய அமைதிப்படைக் காலத்தின் அனுபவங்களை எழுதிய திபீந்தர் சிங் பல உண்மைகளை குறிப்பிட்டுள்ளார். நிர்ப்பந்தம் இருந்திருந்தால் அதனைக் கூறாமல் விட்டிருக்கவும் மாட்டார்.

இன்னொரு கட்டுக்கதை பற்றி அடுத்த வாரம் கூறுகிறேன்.

(தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## சூடான கடிதமும் சுவையான பதிலும்

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம், இத் தொடரில் தன்னைப் பற்றிக் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சூடான பதில் தந்துள்ளார். அப்பதிலும், அதற்கான என் பதிலும் அடுத்த வாரம் தரப்படும்.

## தவறும் திருத்தமும்

அரசியல் தொடர் 158ல் ஒரு சிறு தவறு நிகழ்ந்துள்ளது. புலிகள் இயக்க யாழ் அரசியல் பொறுப்பாளராக இருந்த கந்தசாமி (மேஜர் டயஸ் கந்தசாமி-அரியாலை) நல்லூர் மோதலில் பலியானதாக குறிப்பிட்டிருந்தேன் அது தவறு. பருத்தித்துறையில் தம்பச்செட்டி என்ற இடத்தில் நடந்த மோதலில்தான் பலியானார். இவருடன் இரண்டாம் லெப்டினன்ட் சுதா (பருத்தித்துறை) என்பவரும் பலியானார்.

இச் சம்பவத்தில் இந்தியப்படை நடத்திய தாக்குதலில் திக்கம், வியாபாரி மூலை ஆகிய பகுதிகளில் பத்து பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

யாழ் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்களை மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்புமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

பாதுகாப்பு படையினரும் மக்களை வரவேற்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து இருந்தனர். அத் துண்டுப் பிரசுரங்களில் படையினர் தங்களை 'சந்திரிக்காவின் படையினர்' என்றே குறிப்பிட்டிருந்தனர்.

**முன்பிருந்த அரசாங்கங்களின் படைகள்தான் தமிழ் மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கின, இப்போது வந்திருப்பது சந்திரிக்காவின் படையினர், எனவே மக்கள் 'அச்சமின்றி திரும்பி வரலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்திலேயே, தங்களை 'சந்திரிக்காவின் படையினர்' என அழைத்துக் கொண்டனர்.**

தமது சொந்த இடங்களில் மீண்டும் வாழும் விருப்பம் காரணமாக பெருந்தொகையான மக்கள் யாழ் குடாநாட்டுக்கு திரும்பினர்.

மக்கள் தம் சொந்த இடங்களுக்கு திரும்பும் காட்சிகளும், படையினர் அவர்களை இன்முகத்துடன் வரவேற்கும் காட்சிகளும் அரச தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்யப்பட்டன.

யாழ் குடாநாட்டில் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின்போது மக்கள் இடம்பெயர்ந்து சென்றிருக்காவிட்டால், ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகி இருக்கும் என்பதை போர் நிலவரத்தை நன்குணர்ந்தவர்கள் மறுக்கவியலாது.

வீடுகளுக்குள்ளோ, கோயில்களுக்குள்ளோகூட பதுங்கிப் பாதுகாப்பு தேட முடியாதளவுக்கு டாங்கிகளும், ஆட்டிலறிகளும், விமானத் தாக்குதல்களும் சரமாரியாகவும், பரவலாகவும் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறெனினும் வெற்றிபெறும் உத்வேகத்துடனேயே அரச படையினர் முன்னேறினர்.

**பாரிய உயிரிழப்புக்களை எதிர்பார்த்து முன்கூட்டியே செய்தித் தணிக்கை பிரகடனப்படுத்தப்பட்டும் இருந்தது.**

இடம்பெயர்ந்த மக்கள் திரும்பி வந்தபோது உடமைகள் பல களவாடப்பட்டிருந்தன. அது மட்டுமல்லாமல் இடம்பெயர்ந்து சென்று அனுபவித்த கஷ்ட நஷ்டங்களும் மக்களுக்கு பெரிதாகத் தோன்றின. அதனால் தங்களை இடம்பெயருமாறு கூறிய புலிகள் இயக்கத்தினர்மீது மக்கள் மத்தியில் அதிருப்திகள் தோன்றியிருந்தன.

**போராட்டம் என்பது மக்களும் பங்குகொள்ளும் புரட்சிகர திருவிழாவாகும். வெற்றிகளும், தோல்விகளும், இழப்புக்களும் கொண்ட நீண்ட பாதையூடாகவே போராட்டம் சென்றாக வேண்டும் என்பதை புலிகளோ, ஏனைய இயக்கங்களோ மக்களிடம் தெளிவுறுத்தத் தவறியதும் அதற்கு ஒரு காரணம் எனலாம்.**

இந்நிலையில் யாழ் குடாநாட்டுக்கு திரும்பிச் சென்ற மக்களை கௌரவமாக நடத்தி, அவர்களின் மனங்களை வென்றெடுக்கக்கூடிய வாய்ப்பு அரசாங்கத்திற்கும், படையினருக்கும் அமைந்திருந்தது.

ஆனால், அரச படையினரும், அரசாங்கமும் யாழ் குடாநாட்டு மக்களை புதிய சூழல் ஒன்றுக்கு தயார்படுத்துவதிலேயே கவனம் செலுத்த தொடங்கியிருந்தனர்.

சுயகௌரவமும், நீதிக்காகப் போராடும் மனத் தைரியமும் இல்லாத மக்களாக அவர்களை மாற்றுவதுடன் அரசை எதிர்த்து நின்று எதனையும் சாதிக்க முடியாது என்ற மனப்போக்கையும் மக்களிடம் ஏற்படுத்த நினைத்தனர்.


அதுவே அவர்கள் ஏற்படுத்த விரும்பிய புதிய சூழலாகும்.

விடுதலைப் புலிகள் மீது யாழ் குடாநாட்டில் பெற்ற வெற்றியை, தமிழ்ச் சமூகம் மீதான வெற்றியாக கருதினரோ எனவும் சந்தேகம் தோன்றியிருந்தது.

யாழ் குடாநாட்டு மக்கள் மத்தியில் சுத்திகரிப்பு ஒன்றை நடத்துவது மூலம், அம் மக்களிடம் நிரந்தரமான பணியையும், அடங்கி நடக்கும் மனப்போக்கையும் தோற்றுவிக்கவே முயற்சிக்கப்பட்டது.

அத் திட்டத்தின் பிரதானமான கட்டமாகவே நூற்றுக்கணக்கானோர் கைதாகினர். பின்னர் காணாமல் போயினர்.

**புலிகளின் தாக்குதல்கள்தான் அக் கைதுகளுக்கு காரணம் எனவும் கூற முடியாது. ஏனெனில் யாழ் குடாநாட்டில் புலிகள் மறுபடியும் தங்கள் பிரசன்னத்தை காட்டுவதற்கு முன்பாகவே அக் கைதுகளும்,**



# "காணாமல் போனோர் புலிகளிடம் சென்றிருக்கலாம் அல்லது புலிகளால் கூட்டிச் செல்லப்பட்டிருக்கலாம்"

## அலசுவது- இராஜதந்திரி

**காணாமல் போதல்களும், பாலியல் வல்லுறவுகளும் பரவலாக நடைபெற்றிருந்தன.**

பாலியல் வல்லுறவு விவகாரத்தில் கிருஷாந்தி கொலை வழக்கு மட்டுமே நடைபெற்றுவருகிறது. யாழ்ப்பாணம் கோண்டாவிலில் ராஜினி என்ற இளம்பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்டார். மலசலகூட குழிக்குள் போடப்பட்டார். அச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இராணுவத்தினருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் உள்ளது.

அதன் பின்னரும் பாலியல் வல்லுறவுச் குற்றச்சாட்டுக்கள் பல கூறப்பட்டபோதும், யாழ் குடாநாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகள்கூட படையினருக்கு எதிரான புகார்களை பெரிதுபடுத்த தயங்கி வருகின்றன.

யாழ் குடாநாட்டில் கைதான அறுநூறுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை திட்டவட்டமாக கூறிவிட்டது.

குறிப்பிட்ட ஆட்கள் தொடர்பாக இலங்கை அரசிடம் சர்வதேச மன்னிப்புச் சபை விபரங்களைக் கோரத் தவறியிருக்காது. குறிப்பிட்ட ஆட்கள் படையினரால் கைதானது உண்மை என்று உறுதிப்படுத்திய பின்னரே மன்னிப்புச்சபை விபரம் அறிய முற்பட்டிருக்கும்.

ஆட்களை கைது செய்தல் என்பதைவிட ஆட்களை கொல்லுதலே பாரதூரமான மனித உரிமை மீறலாகக் கருதப்பட்டு வருகிறது.

எனவே கைதானவர்கள் உயிருடன் இருந்திருப்பின் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அரசாங்கம் தகவல் தந்திருக்கும். அவ்வாறு தகவல் கொடுக்க அரசால் இயலவில்லை. அரசு புலிகள்மீது குற்றம்சாட்டியுள்ளது. அதன் அர்த்தம் காணாமல்போன பட்டியலில் உள்ள எவரும் சிறைகளிலோ, தடுப்பு முகாம்களிலோ இல்லை என்பதேயாகும்.

**சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை தவறானது எனவும், படையினர் அவ்வாறு கைதுசெய்யவில்லை என்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கடந்த வாரம் கூறியிருக்கிறார். அதுவும் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அதனை குறிப்பிட்டிருக்கிறார்.**

சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையால் இலங்கை அரசுக்கும், படையினருக்கும் வெளியுலகில் ஏற்பட்டுள்ள அதிருப்திகளை தணிக்கும் ஒரு முயற்சியாக அப்பத்திரிகை மாநாடு நடைபெற்றிருந்தது. டிசம்பர் 11ம் திகதி அந்த மாநாடு கொழும்பில் நடைபெற்றிருக்கிறது.

**அந்த மாநாட்டில் உரையாற்றிய பிரதி பாதுகாப்பு அமைச்சர் அவர்கள், "காணாமல் போன 750 பேரில் 180 பெயர் விபரங்கள் போலியானவை. சிலரின் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மிகுதி 400 பேர்தான். அவர்கள் புலிகளுடன் இணைந்திருக்கலாம். 1995ல் புலிகளால் மக்கள் வெளியேற்றப்பட்டபோது கூட்டிச் செல்லப்பட்டிருக்கலாம்" என்று கூறியிருக்கிறார்.**

சர்வதேச மன்னிப்புச் சபையிடமும் அரசு கைவிரித்திருந்தது. இப்போது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடமும் விளக்கம் கூறப்பட்டுவிட்டது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இக் கூற்று தங்களுக்கு தெரியாதுபோன்று தமிழ்க் கட்சிகள் நடந்துகொள்கின்றன. 'காணாமல் போனோரைக் கண்டுபிடித்து தருமாறு அரசிடம் கூறியிருக்கிறோம்' என்று தமிழ்க் கட்சிகள் கூறுவதுடன், காணாமல் போனோரின் உறவினர்களையும் ஏமாற்றிவருகின்றன.

அதுமட்டுமன்றி காணாமல்போனோர் விவகாரத்தின் தாக்கத்தால் உலக அரங்கில் இலங்கை அரசுக்கு கிடைக்கவிருந்த கண்டனங்களையும், நிதி உதவிக் குறைப்புக்களையும் தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகள்தான் தடுத்து நிறுத்தியுமுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபற்றும் தமிழ் கட்சிகள், யாழ் குடாநாடு ஜனநாயக பூமி என்றும், அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி நடத்தப்படுகிறது போன்றும் பொய்யான தோற்றங்களை ஏற்படுத்தவே துணைபோயுள்ளன.

அரசுக்கும் நோகாமல், படையினருக்கும் வலிக்காமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தங்கள்மேல் அதிருப்தி ஏற்படாமல் எல்லோருக்கும் நல்லபிள்ளைகளாக நடந்துகொள்ளவே தமிழ்க் கட்சிகள் முற்பட்டுவருகின்றன.

காணாமல் போனோர் உயிரோடு இல்லை என்பதை உறுதிப்படுத்தினால் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தமிழ்க் கட்சிகள் சென்றாக வேண்டியிருக்கும்.

அரசுக்கு கொடுத்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்வது, கைது செய்து காணாமல் போகச் செய்த படையினர்மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது, அல்லது பகிரங்க விசாரணை கோருவது போன்ற கோரிக்கைகளை முன்வைப்பது ஆகியவையே அந்த அடுத்த கட்ட நடவடிக்கைகளாகும்.

ஆனால், காணாமல் போனோர் விவகாரத்தை தார்மீகக் கோபத்தோடு அல்லாமல், தங்கள் கட்சிகளின் அரசியல் இலாப நோக்குடனேயே தமிழ்க் கட்சிகள் அணுகியுள்ளன.

**"காணாமல் போனோர் எங்கே?" என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதும், காணாமல் போனோர் விவகாரமும் தமிழ்க் கட்சிகளுக்கு பிரசார மூலதனமாக அமைந்திருக்கின்றன.**

இதன் காரணமாக காணாமல்போனோர் விவகாரம் ஆறின கஞ்சி பழம் கஞ்சி என்ற நிலைக்கு செல்லப் போவதையும், காணாமல் போனோரை நம்பி இருந்த குடும்பங்கள் மரண அத்தாட்சிப்பத்திரங்களையோ, நஷ்டஈடுகளையோகூட பெறமுடியாமல் நடுத்தெருவில் நிற்கப் போகும் நிலை ஒருநாள் ஏற்படும் என்பதையும் தமிழ்க் கட்சிகள் எதுவுமே உணரவில்லை.

களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகள் மூவர் பலியாகியுள்ளனர். அங்கிருந்த தமிழ்க் கைதிகளின் துணிச்சலால் பாரிய படுகொலை வேட்டை தடுக்கப்பட்டிருந்தது.

பலியானவர்களில் இருவர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், அங்கு உள்ளூராட்சி தேர்தல் நடைபெற இருப்பதாலும் தமிழ்க் கட்சிகள் இந்த விவகாரத்தில் பேர் தேடிக்கொள்ள முண்டியடித்தன.

ஆனால் கடந்த நவம்பர் மாத இறுதியில் புதிய மகசீன் சிறையில் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தபோதும், சிறை அதிகாரிகளால் கம்பிகளாலும், தடிகளாலும் தாக்கப்பட்டிருந்தனர். களுத்துறைக்கு இடமாற்றப்பட்டனர்.

அப்போதே தமிழ்க் கட்சிகள் உறுதியான குரலில், குறிப்பிட்ட சிறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருக்குமானால், வெள்ளம் தலைக்கு மேல் வருமுன்னர் அணைகட்டியதுபோல் அமைந்திருக்கும்.

களுத்துறைச் சிறைப் படுகொலைக்கு பின்னரும்கூட, அங்கு கடமையில் இருந்த சிறை அதிகாரிகள், படையினர் ஆகியோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு எந்தவொரு தமிழ்க் கட்சியும் கோரவில்லை. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தெரிவித்த கண்டனங்களை நன்கு அவதானித்தால் அந்த உண்மை புலப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற உள்ள தருணம் என்பதால் படையினரைப் பற்றி தவறாகப் பேசுவதற்கு தமிழ்க் கட்சிகள் தயங்கியுள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெற உள்ள தேர்தலில், படையினரை அதிருப்திக்கு உள்ளாக்குவது புத்திசாலித்தனமல்ல என்றே தமிழ்க் கட்சிகள் கருதுகின்றன.

காணாமல் போனோருக்கான போராட்டத்தை புளொட் இயக்கத்தினர் யாழ் குடாநாட்டுக்கு வெளியே மட்டும் முன்னின்று நடத்தியதற்கும் அதுவே காரணமாகும்.

ஈ.பி.டி.பி.யினரும் 'மனித கௌரவத்திற்கான அமைப்பு' என்ற பெயரில் கொழும்பில் காணாமல் போனோருக்கான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

களுத்துறை சிறைப் படுகொலை தொடர்பாக கருத்துக் கூறிய நீதியமைச்சர் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறமாட்டாது எனக் கூறியுள்ளார்.

**இவை புளித்துப் போன வாக்குறுதிகளாகவே உள்ளன. அரசு உண்மையில் சிறைப்படுகொலை தொடர்பாக நீதியான நடவடிக்கை எடுக்க விரும்பினால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலரை இடமாற்றம் செய்வது பரிகாரமாகாது. சம்பவம் நடைபெற்றபோது பணியில் இருந்த சிறை அதிகாரிகளையும், படையினரையும் பணிகளில் இருந்து நீக்கிவிட்டு, தகுந்த விசாரணை மூலம் தண்டனை வழங்குவதே நீதியான முறையாகும்.**

தமிழ் மக்கள் மீதான அநீதிகளுக்கு துணிச்சலான, நேர்மையான தண்டனைகளை வழங்க இதுவரை எந்த அரசாங்கமும் முன்வந்ததில்லை. வெறுமனே ஆறுதல் வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும் மட்டுமே வழங்கி வந்திருகின்றன.

ஆனால், தமிழ்க் கட்சிகள் அந்த வாக்குறுதிகளை தாங்கள் குரல் கொடுத்ததுக்கு கிடைத்த பலனாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பதும், அதன் ஊடாக சிறைப்படுகொலை விவகாரத்தில் அரசு எடுக்கத் தவறிய நீதி நடவடிக்கையை மூடிமறைக்கத் துணைபோனதையுமே அவதானிக்க முடிந்தது.

---

# கைதிகளை நிராயுதபாணிகளாக்கிய காவலர்கள்

கடந்த நவம்பர் மாத இறுதியில் புதிய மகசீன் சிறையில் தமிழ்க் கைதிகள் உண்ணா விரதம் இருந்தனர்.

'விசாரணை செய், அல்லது விடுதலை செய்' என்று கோரியே சாகும்வரை உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

சிறை அதிகாரிகளும், காவலர்களும் தமிழ்க் கைதிகளுக்கு பலவந்தமாக உணவு ஊட்டினர். கைதிகளைத் தாக்கினர்.

கைதிகள் வைத்திருந்த பகவத்கீதை புத்தகங்கள்கூட பயங்கரவாதப் புத்தகங்களாக சிறைக்காவலருக்கு தெரிந்தன. கிழித்து எறிந்தனர். கைதிகள் வைத்திருந்த செப மாலைகளும் சயனைட் குப்பிகள் தொங்கும் கயிறுகளாக தெரிந்தனவோ என்னவோ, அவையும் பறித்து வீசப்பட்டன.

உண்ணாவிரதம் இருந்த கைதிகள் புதிய மகசீன் சிறையில் இருந்து களுத்துறைச் சிறைக்கு இடம்மாற்றப்பட்டனர்.

இடம்மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகளையும், அங்கு ஏற்கனவே இருந்த தமிழ்க் கைதிகளையும் அடிமைகள் போன்று நடத்த முற்பட்டனர் சிறை அதிகாரிகள்.

ஆனால் தமிழ்க் கைதிகள் தங்கள் சுயகௌரவத்தை இழக்கத் தயாராக இல்லை.

சிறையில் சமையல் வேலை செய்யும் ஒருவர் தமிழ்க் கைதி ஒருவரை அவமரியாதை செய்தாராம். பொறுக்கமாட்டாத கைதி திருப்பி அடித்திருக்கிறார். சிறையில் இவ்வாறான சம்பவங்கள் சகஜம். ஆனால் தமிழ்க் கைதிகளின் நடவடிக்கைகள் இனவாத நோக்குடனேயே அதிகாரிகளால் பார்க்கப்படுகின்றன.

அடங்கி ஒடுங்கி நடக்காமல் கைதிகளுக்கு உரிய உரிமைகளை தமிழ்க் கைதிகள் வலியுறுத்தியதும் சிறை அதிகாரிகளுக்கு பிடிக்கவில்லையாம். இதன் காரணமாகவே தாக்குதல் ஒன்றுக்கு சிறை அதிகாரிகள் சிலர் திட்டம் தீட்டினராம்.

இவையெல்லாம் அரசல் புரசலாக தமிழ்க் கைதிகளுக்கும் தெரியவந்தது.

தாங்கள் தாக்கப்படலாம் என்று கருதி தமிழ்க் கைதிகள் உஷாராக இருந்தனர்.

'கரம்போர்ட்' பலகைகளை உடைத்து தடிகளாக வைத்துக் கொண்டனர். கைக்கு கிடைக்கக்கூடிய தடிகளையும் சேகரித்து வைத்தனர்.

இதனை எப்படியோ சிறை அதிகாரிகள் மோப்பம் பிடித்து அறிந்து கொண்டனர். தமிழ்க் கைதிகளிடம் சென்று தடிகளை கேட்டு வாங்கினார்கள். "பிரச்சனை எதுவும் நடக்க விடமாட்டோம். பயப்படாதீர்கள்" எனக் கூறியே தடிகள், பொல்லுகளை வாங்கிச் சென்றார்களாம்.

டிசம்பர் 11ம் திகதிதான் இவ்வாறு தமிழ்க் கைதிகளை நிராயுதபாணிகளாக்கினார்கள் சிறை அதிகாரிகள்.

சமீபத்தில் களுத்துறைச் சிறைக்கு பாதாள உலகத்தைச் சேர்ந்த குற்றவாளிகள் சிலர் வந்து சேர்ந்தனர். சிறை அதிகாரிகளுடன் இவர்களுக்கு பயங்கரமான ஒட்டுதலாம்.

அந்தக் குற்றவாளிகள்தான் தமிழ்க்கைதிகளை தாக்கும் திட்டத்தின் முக்கிய அம்புகளாக சிறை அதிகாரிகள் சிலரால் பயன்படுத்தப்பட்டனர் என்று தெரிகிறது.

டிசம்பர் 12ம் திகதி அன்று சிங்களக் கைதிகள் தங்களுக்குள் சைகைகள் பரிமாறிக் கொள்வதை தமிழ்க் கைதிகள் கண்டுள்ளனர்.

தங்களைத் தாக்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தமிழ்க் கைதிகளுக்கு, அன்றைய சூழ்நிலை உணர்த்தியது.

சிறை அதிகாரிகளிடம் தங்கள் சந்தேகத்தை தமிழ்க் கைதிகள் தெரிவித்தார்கள் "அப்படி ஒன்றும் நடக்காது. நாம் அதற்கு விடமாட்டோம்" என்று கூறிவிட்டார்களாம்.

ஆனால் தமிழ்க் கைதிகளுக்கு வெலிக்கடை சிறைப் படுகொலை நினைவும், அந்த கறைபடிந்த வரலாறு கற்றுத்தந்த பாடமும் மறக்கவில்லை.

தங்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் முடியுமானவரை எதிர்த்துப் போராடுவது என்று தீர்மானித்தனர். தயாராய் இருந்தனர்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே, தமிழ்க் கைதிகள் வைக்கப்பட்டிருந்த சிறைப் பிரிவு நோக்கி சிங்களக் கைதிகள் பலர் கத்திகள், வாள்கள், இரும்புச் சட்டங்கள் சகிதம் பாய்ந்து சென்றனர். தங்கள் பிரிவுக்குள் சிங்களக் கைதிகள் புகுவதைத் தடுக்க தமிழ்க் கைதிகள் போராடினார்கள்.



சிறை அதிகாரிகள் எடுத்துச் சென்றது போக, மறைத்து வைத்திருந்த தடிகளையும் பயன்படுத்தி தங்கள் உயிரைக் காக்க தமிழ்க் கைதிகள் தைரியமாக எதிர்த்துப் போராடினார்கள்.

சிறைக்காவலுக்கு நின்ற இராணுவத்தினரும் சிறைக் காவலர்களும் தமிழ்க் கைதிகளுக்கு உதவிக்குச் செல்லாமல் வேடிக்கை பார்த்தனர்.

தாங்கள் வைக்கப்பட்டிருந்த சிறைப்பிரிவின் 'கேற்றை' இழுத்துப்பிடித்தபடி தமிழ்க் கைதிகள் நின்றனர். கேற்றைப் பிடித்திருந்தவர்களின் கைகளில் பொல்லுகளால் அடித்தனர். கத்தியால் வெட்டினர். அப்படியும் நீண்டநேரம் 'கேற்றை' மூடிப்பிடித்திருந்தனர் தமிழ்க் கைதிகள்.

கடைசியாக தாக்குதல் அதிகமானதால் 'கேற்றை' மூடிப்பிடித்து நிற்க முடியவில்லை. 'கேற்றை' தள்ளியபடி உள்ளே புகுந்தவர்களை எதிர்த்தும் தம்மால் முடிந்தவரை போராடினார்கள்.

பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த காடையர்களின் முன்பாக துணிந்து நின்று போராடியதால்தான் நூற்றுக்கணக்கான உயிர்கள் தப்பின. இல்லையெனில் குறைந்தது நூறு பேராவது வெட்டிக் கொல்லப்பட்டிருப்பர்.

வெலிக்கடையைவிட மிகப் பயங்கரமான படுகொலை வேட்டை ஒன்றுக்கே திட்டமிட்டனராம். அத்திட்டம் நிறைவேறாமல் போனதற்கு காரணம் தமிழ்க் கைதிகளின் முன்கூட்டிய விழிப்புணர்வும், தைரியமும்தான்!

'ஆயுதங்களை கைவிட்டு பேச்சுக்கு வருமாறு அரசு புலிகளை அழைக்கிறது. ஆயுதம் ஏந்தாத நிரபராதித் தமிழர்களுக்கு பாதுகாப்பளிக்காத தன் அதிகாரிகளுக்கும், படையினருக்கும் என்ன தண்டனை கொடுக்கப் போகிறது?' படுகொலைகளை நேரில் கண்ணுற்ற சிறைக் கைதி ஒருவர் நம்மிடம் கேட்ட கேள்வி அதுதான்.

# கொள்ளை ராணி பூலான்தேவி

74

தருவது ரசிகன்

பெஹ்மாய் கிராம படுகொலைகளைத் தொடர்ந்து பூலானை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்குமாறு இந்திய அரசு கடும் உத்தரவு பிறப்பித்தது.

உத்தரப் பிரதேச மாநிலம் எங்கும் பண்ணையார் சமூகத்தினர் கிளர்ந்தெழுந்தனர். பூலானை பிடிக்குமாறும், பூலான் உயிருடன் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் பண்ணையார் சமூகத்தினருக்கு ஆபத்து என்றும் அரசியல்வாதிகளிடம் நெருக்கினார்கள்.

பெஹ்மாய் கிராமத்தில் பூலான் குழுவினரால் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஐநூறு ரூபாயும் உத்தரப்பிரதேச மாநில அரசால் வழங்கப்பட்டது.

உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர் வி.பி.சிங் (பின்னர் பிரதமராக இருந்தவர்) பெஹ்மாய் கிராம படுகொலைகளுக்கு அனுதாபம் தெரிவித்து அறிக்கை விடுத்திருந்தார்.

"அனுதாபத்தைக் கொண்டுபோய் குப்பையில் போடுங்கள். முதலமைச்சர் வி.பி.சிங் எங்களைச் சந்திக்க வேண்டும். சுற்றிவளைக்காமல் நேராகப் பேசட்டும். என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று கூறட்டும்" பண்ணையார்கள் கையொப்பம் போட்டு மகஜர் அனுப்பினார்கள்.

ராஜ்பூர் என்ற ஊரில் தெரு மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. நீதிபதியும், பொலிசாரும் வந்து மக்களை அமைதிப்படுத்தி கலைந்து போகச் செய்தார்கள்.

பண்ணையார் சமூகத்தினர் கொதித்துக் கொண்டிருந்தனரே தவிர, தங்கள் கோபத்தை தாழ்த்தப்பட்ட சமூக மக்களிடம் காண்பிக்கத் துணியவில்லை. பூலானிடம் இருந்த பயம்தான் காரணம்.

பெஹ்மாய் கிராமத்தில் பண்ணையார் சமூகத்தினரை பூலான் குழுவினர் கொன்று தீர்த்தது, தாழ்த்தப்பட்ட மக்களிடம் பூலான்மேல் இருந்த மதிப்பு மேலும் வளர காரணமாகியது.

பண்ணையார் சமூகத்தினரால் அடிமைகளாய் நடத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அவர்களை திருப்பித் தாக்க வழி தெரியாமல் தவித்தார்கள்.

பூலான் எழுப்பிய வேட்டொலிகள் பண்ணையார் ஜாதியினரை ஆட்டம்காணச் செய்தபோது, தாழ்த்தப்பட்ட மக்கள் பூலானை தெய்வமாக நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் பல கிராமங்களுக்கு பூலான் சென்றாள். அங்கு எல்லாம் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் பூலானுக்கு வெற்றித் திலகமிட்டு வரவேற்றனர். 'பூலானுக்கு ஜே', 'பூலானுக்கு ஜே' என்ற கோஷங்கள் வானை உரசின.

பத்திரிகைகள், வானொலி, சுவரொட்டிகள் மூலம் பூலானை பயங்கர கொலைகாரியாகவும், கொள்ளைக்காரியாகவும் அரசாங்கம் கூறிக்கொண்டிருக்க, உத்தரப் பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் கிராமங்கள் பலவற்றில் பூலான் சுற்றுப் பயணம் நடத்திக் கொண்டிருந்தாள்.

"பூலான் சென்ற கிராமங்களுக்கு அவள் பின்னாலேயே பொலிசாரும் செல்கிறார்கள். ஆனால் பூலான்தேவி பொலிசாரின் கண்களில் எப்படியோ மண்ணைத் தூவிவிட்டு தப்பிச் சென்று விடுகிறாள்" பத்திரிகைகள் பொலிசாரை கேலி செய்தன.

பாபா முஸ்தக்குவீமுக்கு பூலான் அலட்சியமாக சுற்றித் திரிவது சரியாகப் படவில்லை. "பொலிசாரைக் கண்டு பயந்துவிடக் கூடாது என்பது சரிதான். அதற்காக பொலிசாரை ஆக மட்டமாக எடைபோடாதே, உன் குழுவினரை அநியாயமாகப் பலிகொடுக்காதே" என்றார்.

"இல்லை. நான் வீம்புக்காக அலைந்து திரியவில்லை. என்னைப் போல வேறு எவருக்கும் நேரக்கூடாது. என் ஜாதிக்காரர்கள் கோழையாக வாழக் கூடாது. அவர்களை உற்சாகப்படுத்தவும், தைரியம் கொடுக்கவும்தான் கிராமங்களுக்குச் செல்லுகிறேன்!"

பூலானின் கருத்தை பாபா மறுக்கவில்லை. அவரது விழிகள் அவளை பரிவோடு நோக்கின.

"நீ உயிரோடு இருந்தால்தானே தைரியம் கொடுக்கலாம். அதனால் உன் பாதுகாப்பையும் கவனித்துக்கொள்."

பாபாவைச் சந்தித்துவிட்டு அன்று மாலை இன்னொரு கிராமத்திற்குச் சென்றார்கள்.

பூலான் தங்கள் கிராமத்திற்கு வந்ததை ஒரு விழாபோலவே கிராம மக்கள் கொண்டாடினார்கள். பூலானையும், அவள் குழுவினரையும் தடபுடலாக விருந்து வைத்து திண்றடித்தனர்.

அங்கு நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சி பூலானை மெய்சிலிர்க்கச் செய்தது. தனக்கு இத்தனை மரியாதையா? தன்மேல் இத்தனை அன்பு வைத்திருக்கிறார்களா? என்று பிரமிப்பின் உச்சிக்கு சென்றாள் பூலான்.

கல்பி என்ற ஊரில் துணிக்கடை வைத்திருப்பவர் தேவிகுலாம். பொலிசாரின் அட்டூழியங்களை கண்டித்து பாடல்கள் இயற்றிப் பாடுவார்.

பூலான் தேவியைப் பற்றியும் தேவிகுலாம் ஒரு பாடல் எழுதியிருந்தார். பூலானைப் பற்றியும், பண்ணையார்களை அவள் சுட்டுப் பழி தீர்ப்பது பற்றியும் உத்தரப்பிரதேச தாழ்த்தப்பட்ட மக்கள் என்ன பேசிக்கொண்டனர்? என்ன நினைத்தனர்? என்பதை அந்தப் பாடல் எதிரொலித்தது.

அப்பாடலை தேவிகுலாம் பூலான் முன்பாக பாடிக் காட்டியபோதுதான் பூலான் மெய்சிலிர்த்துப் போனாள்.

*"எம்மைத் தாங்குவாள் பூலான்தேவி*
*என்றும் அவள்கை துப்பாக்கி தாங்கும்!*
*கடும் பழி தீர்த்தாள். கொடும்பகை அழித்தாள்.*
*துணிவுடன் நடக்கிறாள்– எம்*
*துயரம் துடைத்திட*
*துணிவுடன் நடக்கிறாள்.*
*துப்பாக்கி ஏந்தி*
*துணிவுடன் நடக்கிறாள்.*

*விக்கிரம் மல்லா மறைந்தபோதும்*
*உக்கிரமான உள் வெறியோடு*
*எங்கள் பூலான்*
*துணிவுடன் செல்கிறாள்!*
*அக்கிரமத்தை அடியோடழிக்க*
*ஆயுதம் ஏந்தி துணிவுடன் நடக்கிறாள்"*



பூலான்

பாடல் வரிகள் ஒவ்வொன்றும் பூலானின் இதயத்தில் உற்சாக விதைகளாக வீழ்ந்தன.

பெஹ்மாய் கிராமத்தில் பண்ணையார்களை பூலான் பழிதீர்த்ததையும் பாடல் வரிகள் பாராட்டியிருந்தன.

*"பெஹ்மாய்க் கிராமம்*
*ரவை மழை பொழிந்திட*
*புண்பட்டவர்கள்*
*பொத்தென வீழ்ந்திட*
*தப்பிப் பிழைத்தோர்*
*தொழுது அழுதிட*
*துப்பாக்கி ஏந்தி*
*பூலான் நடக்கிறாள்."*

கிராமமக்களுக்கு தங்களிடமுள்ள பணத்தை பிரித்துக் கொடுத்துவிட்டு பூலானும், குழுவினரும் புறப்பட்டுச் சென்றனர்.

அன்றிரவு முழுவதும் பூலான் தூங்கவில்லை. 'என்மீது இத்தனை பற்றும் பாசமும் வைத்திருக்கிறார்களே, இதற்கு நான் தகுதியானவள்தானா?' என்று நினைத்துக் கொண்டிருந்தாள் பூலான்.

'என்மீது அளவில்லாத பாசம் வைத்திருக்கிற என் ஜாதி மக்களுக்கு, நான் என்ன பெரிதாகச் செய்துவிட்டேன்?' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

அதிகாலையில் எழுந்துபோய், ஆற்றில் இறங்கி குளித்தாள். துப்பாக்கியை கரையில் கண்ணுக்கு தெரியக்கூடிய இடத்தில் வைத்துவிட்டுப் போயிருந்தாள்,

அந்தப் பக்கமாக வந்த மான் சிங்கின் கண்களில் தனியாகக் கிடந்த துப்பாக்கிதான் கண்ணில் பட்டது.

அது பூலானின் துப்பாக்கி என்பது அவனுக்கு தெரியவில்லை. சட்டென்று உஷாராகி சுற்றும் முற்றும் நோக்கினான். தன் இடுப்பில் இருந்த ரிவோல்வரை உருவிக் கொண்டு தயாரானான்.

ஆற்றுக்குள் சலசலப்பு மான் சிங்கின் காதில் விழுந்தது. பதுங்கி பதுங்கி அப்பக்கமாகச் சென்று, அங்கே பார்த்தபோது, தப்பு என்று மனம் கூறியும் கண்கள் மூட மறுத்தன. அக் காட்சியை ஆசையோடு கண்கள் பருகின.

குளித்துமுடித்துவிட்டு, கரைக்கு வந்த பூலான் மாற்றுடை அணிவதற்காக, ஈர உடையை களைந்து கொண்டிருந்தாள்.

அந்த அதிகாலையில் யாரும் அப்பக்கம் வரப்போவதில்லை என்ற துணிச்சலில், வெகு சுதந்திரமாக தன் உடம்பிலிருந்த ஆடையை நழுவவிட்டாள்.

மான் சிங் தன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அவனுக்கு பூலானின் முதுகுப் புறம்தான் தெரிந்தது. துலக்கி வைத்த பாத்திரம்போல பூலானின் உடம்பு மினுங்கியது. வைரம் பாய்ந்த உடல். தேவைக் கதிகமான தசைகள் இல்லாத உடம்பு. திட்டமிட்டு கலை நயத்துடன் செய்யப்பட்ட பானைபோல பின் எழில்கள், மான் சிங்குக்கு அவள் தன் தலைவி என்பது மறந்து போனது. தான் அவளது தளபதி என்பது மறந்து போனது.

பூலான் மாற்றுடைக்குள் புகுந்து கொண்டாள். உடை அணிய அவள் அசைந்தபோதும், குனிந்தபோதும் மான் சிங்கின் கண்கள் கண்ட காட்சிகள், அவனுக்குள் தூங்கிய பசிகொண்ட சிங்கத்தின் பிடரியை பிடித்து உலுப்பியது.

பூலான் தன் மேற்சட்டையை அணிந்து கொண்டு, தற்செயலாக திரும்பியபோது, தன்னை நோக்கி மான் சிங் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து முன்னேறி வருவதைக் கண்டாள்.

மான் சிங்கைக் கண்டதும் தன் மேற் சட்டைப் பொத்தான்களை போட்டது பாதி, போடாதது மீதியாக நின்றபடி உற்று நோக்கினாள்.

மான் சிங்கின் கண்களில் ஆசை நிரம்பி வழிந்தது. பசிகொண்ட காளை மாடு ஒன்று நடந்து வருவதுபோல இருந்தது பூலானுக்கு.

பூலானின் மனதிலும் போராட்டம் தான். அதிகாலைக் குளிரும், தொடரும் தனிமையும் அவள் உடலும் துணை தேடியது. குளிர்காயத் தீ கேட்டது.

மான் சிங் ஒவ்வோர் அடியாய் எடுத்து வைக்கையில் பூலானுக்குள் குளிர் விட்டுப் போய் தீ பரவத் தொடங்கியது. திக் திக் என்று நெஞ்சுக்குள் துடிப்புக் கேட்டது.

அவள் அருகே வந்ததும் மான் சிங் சட்டென்று அடங்கிப்போனான். அவள் தன்னை விழுங்கிவிடுவதைப் போன்று பார்ப்பதைக் கண்டதும் ஒடுங்கிப்போனான்.

தன் செயலுக்காக, தன் வரம்பு மீறலுக்கு மான் சிங் மனதில் சட்டென்று ஒரு சங்கடம் தலைதூக்கியது.

ஆனால் பூலானுக்கு அவன் போக்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் பெருமூச்சு ஒன்றை வெளியிட்டாள். நெஞ்சு பூகம்பமாய் விம்மியது.

"என்ன வேண்டும்?" என்று அவள்தான் கேட்டாள். திருட்டுப் பூனைமாதிரி திருதிருவென்று முழித்தான் மான் சிங்.

'பூலான் தன்னைப் பற்றி என்ன நினைப்பாளோ' என்று அவனுக்கு வெட்கமாகவும், அவமானமாகவும் இருந்தது. அவள் முகத்தை பார்க்க கூச்சமாக இருந் தது.

அவன் தயக்கம் பூலானிடம் ஏற்பட்டுவிட்ட தாபத்திற்கு தடையாக இருந்தது.

அவளே அவனை நெருங்கி தோளில் கைவைத்தாள். மான் சிங்கின் உடம்பில் மின்னல் அடித்தது.

"தைரியம் இல்லையா? மான் சிங் என்னைப் பாரய்யா" என்றாள். அவள் குரல் இடறியது. மான் சிங்கின் முகம் அருகே அவள் முகம் உரசுவதுபோல நெருங்கியிருக்க, அவளது வெப்பமான மூச்சு அவன் முகத்தை உரசிப்போனது.

அப்போதும்கூட அவள் முகத்தைப் பார்க்க அவனுக்கு துணிச்சல் இல்லை. பூலானால் அதற்கு மேல் தாங்கமுடியவில்லை.

சடாரென்று அவன் கழுத்தை சுற்றி தன்கைகளைக் கோர்த்து, அவன் முகத்தை தன் நெஞ்சுக்குள் புதைத்தாள்.

மான் சிங்கின் கைகள் தானாகத் துணிவு பெற்று பூலானை வளைத்தன. அவள் போடாமல் விட்டிருந்த பட்டன்கள் போக மீதிப் பட்டன்களை அகற்றி வியந்தன.

பூலான் தன்னை முழுவதுமாய் ஒப்படைத்தாள்.

ஆற்றங்கரையில் அவர்கள் தம்மை மறந்திருக்க, பூலானை தேடும் விசேஷ பொலிஸ் அணி, அந்தப் பகுதியை வளைத்துக் கொண்டிருந்தது.

மான்சிங்கின் கரங்களுக்குள் வளைந்தும் நெளிந்தும், அவனையும் பதிலுக்கு வளைத்தும் கொண்டிருந்த பூலானுக்கு சுற்றிவரும் ஆபத்து தெரியவந்தபோது நிலமை கட்டுமீறியிருந்தது.

(தொடர்ந்து வரும்)

---

கடந்த வாரம்

**பூலான் குழுவினரால் பெஹ்மாய் கிராமத்தில் பண்ணையார் ஜாதியினர் 20 பேர் கொல்லப்பட்டனர். குஜாலும், குசுமாவும் பூலானால் கொல்லப்பட்டனர். இந்தியா எங்கும் அதிர்ச்சி. தேடப்படுகிறார் என்று பூலானின் படத்துடன் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.**

இனி...



---

## 2410 வருட சிறை



அவனது பெயர் மோசஸ் சிதோல். இளம்பெண்களை காதலித்து ஏமாற்றுவது அவனது பொழுதுபோக்கு.

காதலிப்பது, பின்னர் தனியாக அழைத்துச்சென்று லீலைகளை முடித்துவிட்டு கைகழுவுவது என்பதுதான் அவனது ஸ்டைல்.

கைகழுவுவது என்றால் சாதாரணமாக நினைக்காதீர்கள், கொன்றுவிடுவான்!

1987 முதல் 1995 வரை பொழுதுபோக்காக காதலித்து, பொழுதுபோக்காக சுகம் கண்டு, பொழுதுபோக்காக அவன் செய்த கொலைகள் 38. தனது விருப்பத்திற்கு கடைசிநேர மறுப்பு தெரிவித்த 40 பெண்களை பலவந்தம் செய்தான் என்றும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இவனால் கொலை செய்யப்பட்ட பெண்கள் அனைவரும் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 1995ல் இவன் பொலிஸ் கையில் சிக்கினான்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவன் இந்தக் கொடூரன். அங்குதான் இவனது கொடூரங்களும் அரங்கேறின.

வழக்கை விசாரித்த நீதிபதிக்கே நெஞ்சு பொறுக்கவில்லை. ஒவ்வொரு கொலைக்கும் தலா 50 ஆண்டுகளும், பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்கு தலா 12 ஆண்டுகளும், மற்றும் வழிப்பறிகொள்ளை உட்பட பல குற்றங்களுக்குமாக மொத்தம் இரண்டாயிரத்தி நானூற்றி பத்து வருடத் தண்டனை விதித்திருக்கிறார் நீதிபதி.

இதனால் நன்னடத்தை; அப்படி இப்படி என்று தண்டனைக் காலம் குறைக்கப்பட்டாலும் புண்ணியமில்லை. சாகும் வரை சிறைக்குள்தான் இருக்க வேண்டும்.

"தென்னாபிரிக்காவில் மரணதண்டனை இல்லை. இருந்திருந்தால் அதனை வழங்கத் தயங்கமாட்டேன்." என்று தனது தீர்ப்பில் கூறியிருக்கிறார் நீதிபதி.

போலிச்சாமி பிரேமானந்தாவுக்கு நீதிபதி பத்மினி இரட்டை ஆயுள்தண்டனை விதித்ததும் தெரிந்ததுதான்.

---

## அஞ்சுகிறார் முன்னாள் இளவரசி



இங்கிலாந்து அரச குடும்பத்திற்கு இப்போதும் சவாலாக இருப்பவர் சாரா. இளவரசர் சாள்ஸ்ஸின் சகோதரர் ஆண்ட்ருவின் முன்னாள் மனைவியும், முன்னாள் இளவரசியுமான சாரா தடாலடியான ஆள்.

இங்கிலாந்து உட்பட பெரியநாடுகள் பலவற்றின் பெரிய கோடீஸ்வரர்கள் பலர் சாராவின் நண்பர்கள்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் விளம்பரப் படங்களுக்கு மொடலிங் செய்து வருகிறார் சாரா.

கோடீஸ்வரர்களின் பள்ளியறையில் தூங்கும் பெண் என்று சாராவைப் பற்றி பேச்சுக்கள் தொடர்கின்றன. தன் குடும்ப முன்னாள் மருமகளின் இந்நாள் நடவடிக்கைகளால் அரச குடும்பம் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது.

டயானாவின் மரணத்தில் சந்தேகம் தோன்றியிருப்பதால், சாராவும் உஷாராகியுள்ளார். சந்தேகம் உண்மை என்றால், அரச குடும்பத்தின் அடுத்த குறி தன்மீதுதான் திரும்பும் என்று அஞ்சுகிறார் சாரா.

ஆனாலும் களியாட்ட விளையாட்டுப் பிரியையான சாரா தனது வழக்கமான லீலைகளை மட்டும் குறைத்ததாகத் தெரியவில்லையாம்.

---

## சோனியா வருவாரா?

'ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி அரசியலுக்கு வருவாரா மாட்டாரா?' சலிப்பூட்டும் கேள்வி இதுதான்.

ஆரம்பத்தில் சோனியா அரசியலில் ஈடுபட மறுத்தபோது அவரை பலரும் பாராட்டினார்கள். ஆனால் பின்னர் அரசியலில் ஈடுபடுமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்களுக்கு நேரடியாக பதில் சொல்லாமல் மர்மப் புன்னகை ஒன்றை வீச ஆரம்பித்தார்.



போதாக்குறைக்கு காங்கிரஸ் மாநாட்டிலும் கலந்து கொண்டார். மேடையில் வைத்தே அவருக்கு அழைப்பு விடுத்தார்கள். அப்போதும் மர்மப் புன்னகைதான்.

'சரிதான், அரசியலுக்கு வரத்தான் போகிறார்' என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்தனர். அதனால்தான் ஜெயின் கமிஷன் அறிக்கையை பிடித்துத் தொங்கிக் கொண்டு, ஆட்சியையும் கவிழ்த்தனர்.

ஆனால் அதன் பின்னரும் சோனியாவிடம் இருந்து மர்மப் புன்னகைதான்! ஆரம்பத்தில் புதிராக இருந்த அந்தப் புன்னகை இப்போது சலிப்பானதாக மாறிவிட்டது.

'அரசியலுக்கு வருவீர்களா? இல்லையா?' இக் கேள்விக்கு 'ஆம், இல்லை' என்று இரண்டில் ஒன்றைக் கூறவேண்டியதுதானே. ஏன் தயக்கம்? எதிர்பார்க்க வைத்து ஏமாற்றுவது என்ன நியாயம்?

அடி மனதில் ஆசை இருக்கிறது. அரசியலில் ஈடுபட்டால் 'இத்தாயலிப் பெண்' என்று பிரசாரங்கள் எழுமே என்ற பயமும் இருக்கிறது. அதுதான் பின்னடிக்கிறார்.

மற்றப்படி ஆசை இல்லாதவர் என்றால் உடனே 'நோ' சொல்லியிருக்க வேண்டியதுதானே!

---

## ஜெயினுக்கு பைத்தியம்?

ராஜீவ் கொலை தொடர்பாக ஆராய்ந்த ஜெயின் கமிஷன் அறிக்கையில் உள்ள விடயங்கள் நகைப்பாக உள்ளன. ஆதாரம் இல்லாமல், தனது கருத்துக்களால் ஏற்படும் விளைவுகள் பற்றிய பொறுப்பே இல்லாமல் ஜெயின் அறிக்கை தயாரித்துள்ளார்.



கைபோன போக்கில் குற்றச்சாட்டுக்களை எழுதித் தள்ளியிருக்கிறார்." என்று இந்தியப் பத்திரிகைகளே எழுதத் துவங்கிவிட்டன.

நேபாள நாட்டு ராணிக்கும் ராஜீவ் கொலையுடன் சம்பந்தம் இருப்பதாக ஜெயின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நேபாளத்தில் அதனால் சர்ச்சைகள் கிளம்பின. நேபாளத்திற்கான இந்தியத்தூதர் 'ஜெயின் அறிக்கை ஆதரமில்லாத கட்டுக்கதைகள் கொண்டது' என்று கூறினார். அதனால் சர்ச்சைகள் தணிந்தன.

ஜெயின் யாருடைய தூண்டுதலால் அப்படி ஒரு அறிக்கையை தயாரித்தார்? அவ்வாறு தூண்டுதல் இல்லையானால் அவரது மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதா? என ஆராய்வது சாலச்சிறந்தது என்று அறிக்கையைப் படித்த பலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சி மட்டும் சோனியாவின் கடைக்கண் பார்வைக்காக அந்த அறிக்கையை தூக்கிக் கொண்டு அலைகிறது.

---

## சொக்கவைக்கும் டயானா

உலக அழகியாக தெரிவாகியுள்ள டயானாவுக்கு 24 வயது. சினிமாவில் நடிக்க அழைப்புக்கள் குவிகின்றன. சினிமாவில் சம்பாதிப்பதைவிட அதிகமாக சம்பாதிக்க வாய்ப்புக்கள் இருப்பதால், அழைப்புக்களை நிராகரித்துவிட்டார்.

உலகின் பெரும் புள்ளிகளது விருந்துபசாரங்கள், அழைப்புக்கள், கவனிப்புக்கள் என்று நிறைய நிகழ்ச்சிகள் இருக்கின்றன.



உலக அழகியாக இருக்கும் ஒருவருட காலத்திற்குள் சம்பாதித்தால்தான் உண்டு. பின்னர் சுஷ்மிதா, ஐஸ்வர்யாராய் போல சினிமாவில் கவர்ச்சி காட்ட வேண்டியதுதான்.

டயானா சினிமாவில் நடிக்கும்போது கதாநாயகன் பிடிப்பதுதான் கஷ்டம். டயானாவின் உயரம் நூற்றி எழுபது சென்டிமீட்டர்கள். தோதான நடிகரை தேடவேண்டும்.

கடந்த ஜனவரி மாதம் 'மிஸ் இந்தியா' பட்டம் கிடைத்தது. அன்று முதல் தீவிரப் பயிற்சி, முயற்சி செய்துதான் உலக அழகியாக முடிந்தது என்கிறார் டயானா.

டயானாவின் முயற்சிகளில், நடுவர்களை கைக்குள் போட்டுக் கொண்டதும் அடக்கம் என்றும் ஒரு பேச்சு. பணம் கொட்டும் சமாச்சாரங்களில் இவை சகஜம்தான்!




## மூன்று வயது அறிவாளி

→ இந்தச் சிறுமிக்கு மூன்றே மூன்று வயதுதான். பெயர் தினேஷி. பிரிட்டனில் வசிக்கிறார்கள். அப்பா பெயர்: நிருகானந்தன். அம்மா பெயர்: ராணி இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்குச் சென்று குடியேறியவர்கள்.

சரி, இந்தச் சிறுமியின் படம் தகவல் பெட்டியில் இடம்பெற யாது காரணம்? எந்தச் சிறுபிள்ளைகளிடமும் இல்லாத அசாத்திய திறமை இந்தச் சிறுமயிடம் இருக்கிறது.

இரண்டு வயதிலேயே சரளமாக ஃபிரெஞ்சு மொழி பேசக் கற்றுக் கொண்டாள். தங்கள் பிள்ளையிடம் அபூர்வ திறமை இருப்பதைக் கவனித்த பெற்றோர் உற்சாகம் கொடுத்தனர். நீச்சல், பியானோ இசைக்கருவி வாசிப்பது, பாலே நடனமாடுவது என்பவற்றை சர்வசாதாரணமாகச் செய் கிறாள். படிப்பிலும் படு சுட்டி. இவள் படித்து கரைத்த, அல்லது கரைத்து குடித்த புத்தகங்களை அடுக்கினால் இவள் உயரத்தையும் தாண்டி விடும். படித்தவற்றில் எந்தக் கேள்வி கேட்டாலும் டாண், டாண் என்று பதில் வரும்.

பிரிட்டனில் மகா மூளை படைத்த ஐ.கியூ அறிவாளிகள் என்று 156 பேர் பட்டியலில் இடப்பட்டுள்ளனர். அப் பட்டியலில் மிகவும் வயது குறைந்த சகலகலா வல்லவி இந்தச் சிறுமிதான்.




## காட்டு வாழ்க்கை

← பசுபிக் சமுத்திரத்தில் காணப்படும் இந்தோனேசியாவின் ஒரு பகுதிதான் இரியன் ஜாயா. இது ஒரு தீவு. இதன் மறுபாதி பப்புவா நியூகினியாவாகும். நிலப்பரப்பில் ஒன்றாக இருந்தாலும் பப்புவா நியூகினிய வேறொரு நாடு.

இரியன் ஜாயாவிலுள்ள கொம்பை மற்றும் கொறோவை எனப்படும் காட்டுவாசி இனத்தவர்களை மரமனிதர்கள் அல்லது கொம்பு மனிதர்கள் என்றே அழைப்பர். காரணம் இவர்களின் வீடுகள் அமைக்கப்பட்டிருப்பது உயரமான மரங்களின் உச்சிகளில்தான். 150 அடி உயரமான மரங்கள் என்றால் இவர்களுக்கு குஷிதான். உடனே அதன் உச்சியில் வீடு கட்டிவிடுவார்கள்.

அங்கிருந்தபடி பறவைகளையும் மலைகளையும் கண்காணித்தவாறிருப்பர். அவ்வீட்டில் தமது நாய், பற்றிக் குட்டிகள் எல்லாவற்றுடனும் சேர்ந்தே வாழ்வர். ஆனால் ஆண்களும் பெண்களும் ஒன்றாகத் தூங்க மாட்டார்கள். இடை நடுவே 'ஒருவருமற்ற பகுதி'யாக எல்லைபோட்டே நித்திரை செய்வர் (அது என்ன பாதுகாப்பு வலயமா?). தாம்பத்திய வாழ்க்கை அவ்வீட்டில் கிடையாது. அது வேறெங்காவது வைத்துக் கொள்ளல் வேண்டும் என்றொரு கட்டுப்பாடு.

ஒவ்வொரு நாளும் குடும்பமாக தமது சிறார்களுடன் வேட்டை நாயையும் கொண்டு சென்று வேட்டையாடுவர். பறவைகள், விலங்குகள் உணவுகள். குடும்பத் தலைவர் ஒருவர் தனது மர வீட்டிலிருந்து வேட்டை நாயுடன் இறங்கிவரும் காட்சியே இதுவாகும். அவர் இறங்கி வருவது ஏணியில்!

வித்தியாசமான ஏணி இது. இதில் ஏறுவதற்கு தனித்திறமை வேண்டும். துளைகள் போட்டிருக்கும். அதில் காலை வைத்து மளமளவென்று இலாகவமாக ஏறவேண்டும். நவீன கண்டுபிடிப்புக்கள் ஏதும் இல்லாமலேயே, அந்தக்கால கண்டுபிடிப்புக்களுடன் அசத்திக் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞான முன்னேற்றம் கண்ட நவீன மனிதனால் இந்த காட்டுவாசியுடன் போட்டிபோட்டு இந்த ஏணியில் ஏறமுடியுமா? ம்ஹூம் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கைக்கு ஈடு ஏது?!

## புலிகளின் தயாரிப்பு

↓ நீண்டதூரத்தில் இருந்தே தாக்குதல் நடத்த ஆட்டிலெறிகள் பீரங்கிகள் உகந்தவை. அதற்காக ஆட்டிலெறிகளால் மட்டும்தான் பாரிய மோட்டார் தாக்குதல்களை நடத்த முடியும் என்று நினைக்கக்கூடாது. மோட்டார்களாலும் நடத்தலாம். படத்தில் இருப்பது புலிகளின் சொந்தத் தயாரிப்பான 'பசிலான் 2000' என்றழைக்கப்படும் மோட்டார்.

யாழ் கோட்டை முகாம்மீதான தாக்குதலுக்கும், ஆனையிறவு படைத்தளம் மீதான தாக்குதலுக்கும் மிகப் பிரதான பாத்திரம் வகித்தது இந்த மோட்டார். ஆனால் நீண்டதூரம் செல்லாது. இதன் சுடுதூரம் ஒரு கிலோமீட்டர் மட்டுமே. எனினும் ஷெல் பாரியது. விழுந்து வெடித்தால் பெரும் சேதம் ஏற்படுத்த வல்லது. இவை சொந்தத் தயாரிப்பு என்பதால் புலிகள் அதிகம் பயன்படுத்தினர். இழந்தால்கூட புதியதை தயாரிக்கலாம். பசிலான் என்பது பலியான புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரது பெயராகும்.



## தேடுகிறார் கிடைப்பதில்லை

→ **சொ**ந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதுதான் எல்லோரது விருப்பமும். இன்னொருவர் காலில் நம்பி நின்றால் எப்போது விழுவோம் என்பது தெரியாது.

படத்தில் இருப்பவர் இலண்டனைச் சேர்ந்தவர். பெயர் ஸ்டான்லிரிச்சர். இவருக்கும் சொந்தக் காலில் நிற்கத்தான் ஆசை. ஆனால் வெறுங்காலுடன்தான் நிற்க வேண்டும். ஏன் தெரியுமா? இவரது காலுக்கு செருப்பு கிடைப்பது மகா கஷ்டம்.

இவரது வலது காலடி 10 அங்குலம். இடது காலடி 7 அங்குலம். எல்லோருக்கும் நடந்து நடந்து காலணிகள்தான் தேயும். இவருக்கோ, காலணிகள் தேடியே கால்கள் தேய்ந்துவிட்டதாம். இவரது காலணிப் பிரச்சனையும் நம் இனப்பிரச்சனை மாதிரி தீரப்போவதில்லையோ?!



↓ கிரிக்கெட் ஆட்டத்துக்கு தமிழ் அகராதியில் உள்ள பெயர் துடுப்பாட்டம். 'பேட்'டுக்கு தமிழில் துடுப்பு என்று பெயர். படகில் நீரைத் தள்ளிச் செல்ல பயன்படுவதும் துடுப்புத்தான்.

குறும்பாக சிந்தித்த படப்பிடிப்பாளர் ஒருவர் இந்திய அணியினரை படகு ஒன்றில் துடுப்பு வலிப்போருடன் சேர்த்து படம் எடுத்திருக்கிறார். துடுப்பாட்ட துடுப்புக்களால் நீரைத் துழாவுகிறார்கள்.

சௌகான், வெங்கட்பிரசாத், மொங்கியா, மஞ்ரேக்கர் ஆகியோர்தான் துடுப்பு வீசுகிறார்கள். மும்பாயில் ஒரு விழாவில் எடுக்கப்பட்ட படம் இது. தேவையான நேரங்களில் துடுப்பை தூக்கி விளையாட தவறும் இந்திய அணியினருக்கு, இதுவும் ஒரு பயிற்சியாக இருக்கட்டுமேன்!

தகவல் பெட்டி

## ஆஹா... துடுப்(பே)பாட்டம்!



# காதல் பரிசாக ஒரு பங்களா

## இளம் நடிகரின் பகிரங்க அறிவிப்பு!

தமிழ்ப்பட உலகில் உயரமான நடிகைகளில் ஒருவர் அவர். ஹீரோ என்ற வார்த்தையில் இடையே உள்ள கொம்பைத் தூக்கிவிட்டால் அவர் பெயர் வரும்.

அந்த நடிகைக்கும் 'சர' நடிகருக்கும் இடையே ஆழமான நட்பு மலர்ந்தது. அதனைக் காதல் என்று தப்பாக நினைத்தார் நடிகர். தயாரிப்பாளராக இருந்து, பின்னர் வில்லனாகி, இப்போது கதாநாயகனாக பவனி வருகிறார் அந்த நடிகர்.

நடிகையை அவர் காதலித்தபோது அத்தனை பெரிய நடிகரல்ல அப்படியிருந்தும் நடிகைக்கு பிரமாதமான பரிசில்களை வாரி வழங்கினார். நடிகையும் பதிலுக்கு தன்னால் முடிந்தவைக்கு வாரிவழங்கினார் நடிகருடன் நட்பாக இருந்த போதே வேறு சில தயாரிப்பாளர்களுடனும் நடிகைக்கு 'நட்பு' இருந்தது. அதுபற்றி நடிகரின் நண்பர்கள் சிலர் எடுத்துச் சொல்லியும் நடிகர் நம்பவில்லை. காதல் கண்ணை மறைத்தது.

நடிகரின் மனைவியும், பிள்ளைகளும் இந்தக் காதல் விவகாரத்தை அரசல்புரசலாக அறிந்தனர். மனைவி சண்டைபோட்டார். பதிலுக்கு கத்தி அவர் வாயை மூடிவிட்டார் நடிகர்.

நடிகையைப் பதிவுத் திருமணம் செய்து கொள்வது என்றும், திருமணப் பரிசாக பங்களா ஒன்றை பரிசளிப்பது என்றும் துரிதகதியில் ஒழுங்குகள் செய்து முடித்தார் 'சர' நடிகர்.

சென்னை புறநகரில் பல இலட்ச ரூபாய்களில் பங்களா ஒன்று வாங்கிப்போட்டிருந்தார். நடிகையிடம் தன் ஏற்பாடுகளை சொன்னபோது, நடிகை அதிர்ச்சியானார்.

நடிகரை திருமணம் செய்யும் எண்ணமே அவருக்கு இருக்கவில்லை. அதில் விருப்பமும் இல்லை. இந்திப் படவுலகில் முதல் இடத்தை பிடிக்க வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார் நடிகை.

நடிகரின் ஆசைக்கு உடனடியாகப் பதில் கூறாமல் தட்டிக்கழித்து வந்தார்.

ஆனால் தனிமையான சந்திப்புக்கள் மட்டும் தொடர்ந்தன. திடீரென்று ஒருநாள் நடிகரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மும்பாய்க்கு பறந்து விட்டார் நடிகை.

### பிரிவு

நடிகரால் பிரிவைத் தாங்க முடியவில்லை. நடிகை தங்கியிருந்த ஹோட்டல் தொலைபேசி இலக்கத்தை தேடிப்பிடித்து பேசினார். "நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம். எப்போது வேண்டுமானாலும் நீங்கள் என்னிடம் வந்து போகலாம். திருமண ஆசையெல்லாம் வேண்டாம்" என்று மும்பாயிலிருந்து உறுதியாகக் கூறிவிட்டார் நடிகை.

அதன்பின்னர் மும்பாயில் உள்ள பத்திரிகைகள் சிலவற்றுக்கு அதிரடியான 'போஸ்' எல்லாம் கொடுத்து கலக்கத் தொடங்கினார். மும்பாய் பட உலக பிரபலங்களுடனும் பகிரங்கமாகவே சுற்ற ஆரம்பித்தார் நடிகை. 'சர' நடிகருக்கும் இச் செய்திகள் எட்டின. படிப்படியாக நடிகையை மறந்துவிட்டு, புதிய ஜோடிகளை தேடத் தொடங்கினார். மும்பாயில் அந்த நடிகையை பலரும் ஆசை காட்டி மோசம் செய்தனர். அவரது தாராள குணத்தை தங்களுக்கு இலாபமாக்கிக் கொண்டனர். பெரிய நடிகையாகும் கனவில் இருந்த நடிகைக்கு கனவு கைகூடவில்லை.

### குமார நடிகருடன்

மீண்டும் தமிழ்ப் பட உலகுக்கு திரும்பி வந்தார். அப்போதுதான் பிரபலமாகிக் கொண்டிருந்தார் ஒரு இளம் நடிகர். அந்த குமார நடிகருக்கும் நடிகைக்கும் இடையே 'நட்பு' மலர்ந்தது.

முதலில் நடிகர் ஜூனியர் இல்லாமல் சீனியர் நடிகை என்ற ரீதியில்தான் பழகினார். நடிகைதான் நடிகரை ஆசையோடு அணுகினார். பாடல் காட்சி ஒன்றில் ஜோடியாக நடித்தபோது, நடிகை காட்டிய நெருக்கமும், இறுக்கமும் கண்டு குமார நடிகர் முதலில் பயந்துபோனார்.

பின்னர் படிப்படியாக நடிகையின் வசமானார் நடிகர். தனக்கும் அந்த நடிகைக்கும் இடையே நட்பு இருப்பதையும், அது காதல் என்றும் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டார் நடிகர்.

தற்போது 'குமார' நடிகரின் மார்க்கெட் வீழ்ச்சி கண்டுள்ளது. நடிகையுடனும் சிறு விரிசல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நடிகையின் முன்னாள் காதலரான 'சர' நடிகர் மூன்றெழுத்து நடிகையை காதலித்து வருகிறார். முன்னாள் காதலி நடிகைக்காக வாங்கிய பங்களாவை இந்நாள் காதலிக்கு பரிசளித்துள்ளார்.


அப்பாஸ்-சங்கவி
படம்: இனியெல்லாம் சுகமே

---

## மினி மினி

* கே.டி.குஞ்சுமோன் தயாரிப்பில் அவரது மகன் எபி கதாநாயகனாக நடிக்கும் 'கோடீஸ்வரன்' படத்திற்கு ஆகோஷ் என்பவர் இசையமைக்கிறார். இவர் முதலில் 'சக்தி' படத்திற்கு ஆனந்த் என்ற பெயரில் இசையமைத்தவர்.

* ராஜீவ் அஞ்சல் இயக்கத்தில் மோகன்லால்-சுரேஷ்கோபி இணைந்து நடித்த 'குரு' என்ற மலையாளப்படம் 'ஒஸ்கார்' விருதுக்காக அனுப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

* சி.சுந்தர் இயக்கும் 'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவா இரட்டை வேடத்தில் நடிக்கிறார். 'மிஸ்டர் ரோமியோ'வுக்குப் பின்னர் பிரபுதேவா இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் இது.

* 'மலை' படத்தை இயக்கியுள்ள ஒளிப்பதிவாளர் அப்துல்ரகுமான் அடுத்து 'காதல் வானிலே' என்ற படத்தை இயக்கவுள்ளார். அதற்கு முன்னர் முரளி-சுவலட்சுமி நடிக்கும் 'தினந்தோறும்' என்ற படத்திற்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

## சினி விசிட்



---

## கன்னட கீர்த்தி

'தேவதை' படத்தில் அறிமுகமான கீர்த்திரெட்டி 'மேக்அப்' இல்லாமலேயே அழகானவர்.

பிரபுவுடன் 'இனியவளே', விக்னேசுடன் 'வேலை' பார்த்திபனுடன் 'கல்யாண சுந்தரம்', லிவிங்ஸ்டனுடன் 'என் புருசன் குழந்தை மாதிரி' ஆகிய படங்களில் நடிக்கிறார்.

'தேவதை' படத்தில் நடித்தபோது வினீத்துடன் தாராளமாக பழகினார். அதனை அறிந்து வேறு சிலர் நெருங்கியபோது நெருப்பாக நடந்து கொண்டார். 'இனியவளே' படத்தில் நடிக்கும் போது பிரபுவுக்கும் சற்றுத் தாராள உரிமைகள் கொடுத்திருக்கிறார்.

கீர்த்திரெட்டி முதலில் நடித்த படம் கன்னாட்.. தெலுங்குப் படம். கன்னடப் பெண்ணான கீர்த்தி ரெட்டிக்கு கன்னடப் படங்களில் நடிக்க ஆசை இல்லையாம். 'தமிழில் நடித்தால்தான் இந்திப் பட வாய்ப்புக்களும் தேடி வரும்' என்கிறார். தமிழ்ப் படங்களில் நடித்தாலும் இதுவரை தமிழில் பேச வராது.

## மாதுரி மீன்

மாதுரி டிக்ஷித்தின் உடல் அமைப்பை ஓவியர் ஹுஸைன் பாராட்டிப் புகழ்ந்தது பழைய கதை. அதன் பின்னர் மாதுரி டிக்ஷித்தை கவித்துவமான கோணங்களில் படம் எடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தண்ணீருக்குள் போட்டு நனைத்து மீன்போல அவரை தாவ வைத்து எடுக்கப்பட்ட படம்தான் இங்கு பிரசுரமாகியுள்ளது. துள்ளும் மீன் கண்டால் யார் இதயம்தான் துடிக்காது!

## ஒற்றுமை

சில்க் சுமிதா, ரோஜா, ரம்பா, மந்த்ரா இவர்களுக்குள் ஒரு நெருங்கிய ஒற்றுமை உண்டு.

'கண்களா? உதடுகளா? கழுத்தா?' என்று ஆராய ஆரம்பிக்க வேண்டாம். மூவருக்கும் இயற்பெயர் விஜயலட்சுமி.

## காதல் ரம்பா

ரம்பாவை கதாநாயகியாக நடிக்க வைப்பவர்கள் அவரது கால் அழகை காண்பிப்பதில்தான் துல்லிய கவனம் செலுத்துகிறார்களாம். தொடை அழகி என்ற பட்டத்தை தக்கவைப்பதற்காக ரம்பாவும் கால்களுக்கான பயிற்சியில் விசேஷ அக்கறை காட்டுகிறார். "இளவரசி டயானாவும் தன் கால்களுக்கு தனியான தசைப் பயிற்சி செய்தார். தனியான பயிற்சியாளரே வைத்திருந்தார். நானும் டயானாவை பின்பற்றுகிறேன்" என்று பேட்டி கொடுத்துள்ளார் ரம்பா.

ரம்பாவின் பேட்டியை படித்த இயக்குநர்கள் ரம்பாவின் கால்களை வைத்தே கதை பண்ணப் போகிறார்கள்.

## உத்தரவு

கன்னடப் படம் ஒன்றில் நடிக்க நக்மாவுக்கு சான்ஸ் கிடைத்தது. எட்டு இலட்சம் ரூபாய் ஊதியமாகக் கொடுத்தார்கள். படத்தின் பெயர் 'ரப் அண்ட் டப்'.

எட்டு இலட்சம் என்றதும் லட்டு போல் இருந்தது நக்மாவுக்கு. ஆனால் பணம் கொடுத்தவர்கள் தாராளத்தை எதிர்பார்த்தனராம். காதலரான நடிகருக்கு தகவல் போனது. "வாங்கிய முற்பணத்தை முகத்தில் எறிந்துவிட்டு வந்துவிடு" என்று பறந்தது உத்தரவு. மனம் வருந்தியபடி திரும்பினாராம் நக்மா.

## நாவல் லட்சுமி

தற்போதைய நடிகைகளில் குள்ளமானவர் சுவலட்சுமி. இவர் போடுவது போன்ற ஹை ஹீல்ஸ் செருப்பை வேறு யாராலும் போட முடியாது. அவ்வளவு உயரம். (எங்காவது ஒருநாள் இசகு பிசகாக கவிழப்போகிறார்)

சுவலட்சுமிக்கு நாவல்கள் படிப்பது என்றால் பிரியம். படப்பிடிப்பு இடைவேளைகளில் நாவலும் கையுமாக இருந்துவிடுகிறார். சக நடிகர்கள் சிலர் சொல்லும் அந்தமாதிரியான ஜோக்குகளுக்கு காது கொடுப்பதில்லை.



## 'வந்தாங்க ஜெயிச்சாங்க'

சத்யராஜ் நடிக்க குருதனபால் இயக்கி ஹிட்டான படம் 'பெரிய மனுசன்'. ஏற்கனவே குருதனபால் இயக்கத்தில் 'தாய்மாமன்', 'மாமன் மகள்' ஆகிய படங்களிலும் நடித்தார் சத்யராஜ். மூன்று படங்களுமே ஹிட்.

அதனால் சத்யராஜ், குருதனபால் கூட்டணி நாலாவது படம் ஒன்றையும் தரப்போகிறது. படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'வந்தாங்க ஜெயிச்சாங்க.'

'பெரியமனுசன்' படத்தில் கவுண்டமணி இல்லை. மணிவண்ணன் இருந்தார். புதிய படத்தில் இருவருமே இருக்கின்றனர்.

'வந்தாங்க ஜெயிச்சாங்க' படத்தில் மீனாதான் சத்யராஜுக்கு ஜோடி. இதுவும் நகைச்சுவை கலந்த படம்தான். செந்தில், நாசர் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா.

## டைம் பாம்

அருண் குமார நாயகனாக நடிக்கும் படம் 'கொஞ்ச நாள் பொறு தலைவா'. இப்படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்று பின்வருமாறு ஆரம்பமாகிறது: "ஷாக் அடிக்குது, ஷாக் அடிக்குது... லவ் டைம் பாம் வெடிக்குது... லப் டப் டப் பீட்டிலே லவ் லவ் ஓட்டுதே..." என்று தொடர்கிறது பாடல். இந்த 'இலக்கியப் பாடலை' (?) பழனி பாரதி எழுதியுள்ளார். நம்நாட்டு வானொலியில் எப்படி ஒலிபரப்பப் போகிறார்கள்?

## உலக அதிசயங்கள்

'ஜென்டில்மேன்', 'இந்தியன்' படங்களை இயக்கியவர் சங்கர். ஆள் மகா புத்திசாலி. பிரமாண்டம் காட்டுவதுதான் சங்கரின் பலம்.

பிரசாந்த், ஐஸ்வர்யாராய் நடிக்கும் 'ஜீன்ஸ்' படத்தில் பிரமாதமாக பிரமாண்டம் காட்டப் போகிறார். உலகில் உள்ள ஏழு அதிசயங்களான தாஜ்மஹால், சுபீன்டவர், பிரமிட், சீனப் பெருஞ்சுவர், பைசா நகர கோபுரம், மற்றும் எம்பயர் கட்டடம், ரோம் நகர பழங்கால நினைவு சின்னங்கள் போன்றவற்றை பாடல் காட்சிகளில் காண்பிக்கப் போகிறார்.

இந்த உலக அதிசயங்கள் முன்பாக பிரசாந்தும், ஐஸ்வர்யாராயும் நவீன உடைகளில் தோன்றி ஆடிப்பாடியுள்ளனர்.

உலக அதிசயங்களைக் காண்பதற்காகவும் தியேட்டருக்கு ஆட்கள் வருவார்கள் என நினைக்கிறார் சங்கர். பிழைக்கத் தெரிந்த மனுசன்.

## இரு வேடங்களில் குஷ்பு

தமிழ்ப்பட உலகில் படைப்பாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே பிரச்சனைகள் தொடர்கின்றன. இந்த நேரம் பார்த்து தனது படம் ஒன்றுக்கு 'படைப்பாளி' என்று பெயர் சூட்டியுள்ளார் பாபு கணேஷ். ஏற்கனவே 'கடல்புறா' என்ற படத்தை இயக்கி நடித்தவர் பாபு கணேஷ். தற்போது, 'இத்தனை நாள் எங்கிருந்தாய்', 'காதல் சக்தி', 'நான் ஒரு இந்தியன்' ஆகிய படங்களில் நடித்துவருகிறார்.

பாபு கணேஷ் இயக்கி நடிக்கும் புதிய படம்தான் 'படைப்பாளி'. இதில் குஷ்பு இரட்டை வேடத்தில் தோன்றுகிறார். பணக்கார வீட்டுப் பெண்ணாகவும்,நடிகையாகவும் இரு வேடங்களாம்.


மாதுரி டிக்ஷித்

...கில் தயாராகும் 'சூரியவம்சம்' படத்திற்கு ...ாரி குடும்பம்' என்று பெயரிடப்பட்டுள் ... சரத்குமார், தேவயாணி, பிரியாராமன் ...ங்களில், தெலுங்கில் வெங்கடேஷ், ...ள் நடிக்கிறார்கள்.

...நர் எஸ்.ஏ.சந்திரசேகரன், தன் மகன் ...நடிகர் திலகத்தையும் இணைத்துப் பட ...போல், பாரதிராஜாவும் தன் மகன் ...நடிகர் திலகத்தோடு இணைத்து ஒரு ... திட்டமிட்டுள்ளார்.

...ல் அறிமுகமாகி, தெலுங்கில் பிரபல ...த்து, இந்தியில் நுழைந்துள்ள ரம்பா ...இந்தி சுப்பர் ஸ்டார் அமிதாப்பச்சனுடன் ...மியான் படே மியான்' என்ற படத்தில்

...ராதின் 'பூவிழிவாசலிலே', 'மந்திரப் ...ஆகிய படங்களில் குழந்தை நட்சத்திரமாக ...ி சுஜி இப்போது வளர்ந்துவிட்டார். ...' படத்தில் முரளியின் தங்கை வேடத்தில் ...ர்தான் நடிப்பதாக இருந்தது.

* சுரேஷ்கோபி- கௌசல்யா நடித்த 'லேலம்' என்ற மலையாளப்படம் தமிழில் 'ஏலம்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. 'ஏர்போர்ட்' படத்தை இயக்கிய ஜோஷி இப்படத்தை இயக்கியுள்ளார்.

* விஜயகுமார்-மஞ்சுளா நட்சத்திரத் தம்பதியின் இரண்டாவது மகள் பிரீதா, 'சந்திப்போமா' என்ற படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். இப்படத்தில் சிவகுமாரின் மகன் சூர்யா கதாநாயகனாக நடிக்கிறார்.

## 'சின்னப் பொண்ணு'

நடிகை ரவளிக்கு யோகம்தான். ஒரு புறம் பார்த்தி பனை கைக்குள்போட்டு வைத்திருக்கிறார். 'சீமைப்பசு' என்று உருகுகிறார் பார்த்திபன். இன்னொரு புறம் பெரிய மஞ்சளில் திறமை காட்டி சத்யராஜின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார். அதேநேரம் அப்பாசுடன் 'மனசுக்குள் வரலாமா' படத்தில் நடிக்கிறார். அப்பாசும் தட்டிக் கொடுத்து பாராட்டுகிறாராம்.

"நான் சின்னப் பொண்ணு அதுதான் யாருடனும் தோதாக நடிக்கவும், ஒத்துப்போகவும் முடிகிறது" என்கிறார் ரவளி.

## காதல் என்றால்?

"இப்போதெல்லாம் காதல் மலிவான வியாபாரமாகிவிட்டது. எதற்கு காதலிக்கிறோம், ஏன் காதலிக்கிறோம்? என்றுகூடப் பலருக்குத் தெரிவதில்லை. படிப்பை பாழ்படுத்தி, செய்யும் தொழிலை சீர்கெடாக்கி பலரையும் பகைத்துக் கொள்வதே காதலின் இலக்கணம் என்று நினைக்கிறார்கள். இப்படி தத்துவமழை பொழிந்திருப்பவர் கார்த்திக். பட்டறிந்த ஞானம் தானோ?

## மறுக்கும் சேரன்

'பொற்காலம்' பட இயக்குநர் சேரனுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். மீனாவுடன் காதல் என்ற வதந்தியை பலமாக மறுக்கிறார் சேரன்.

ஆனால், "மீனா சொந்தமாக ஒரு படம் தயாரிக்கப்போகிறாராம் அதனை இயக்கப் போவது நீங்கள் தானாமே" என்று கேட்டால், "அது என் தொழிலாச்சே. இயக்குவேன்" என்கிறார். இப்படி எத்தனை மறுப்புக்களை கண்டு விட்டோம்.

## கல்–யாணி

நடிகைகளைக் கண்டால் இரசிகர்கள் பலருக்கு என்ன செய்வது, ஏது செய்வது என்றே தெரிவதில்லை. தமிழ்நாட்டில் பழனியில் படப்பிடிப்பு ஒன்றுக்காக சென்றார் தேவயாணி. காரில் சென்ற தேவயாணியைக் கண்ட இரசிகர்கள் காரை நிறுத்து மாறு மறித்தனராம்.

சாரதி காரை நிறுத்தாமல் சென்றார். இரசிகர்களுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. கற்கள் பறந்தன. காரின் கண்ணாடிகள் டமால், டமால். தேவயாணிக்கும் சிறு காயம். சாரதியின் திறமையால் தேவயாணி தப்பினார்.

## சிரி கமல்

தீபாவளிக்கும் ரஜினி படம் இல்லை. பொங்கல் தித்திப்பும் இல்லை. ரஜினி இரசிகர்கள் அஜாக்குறையில் உள்ளனர். பழைய படங்களைத்தான் திரும்பப் பார்க்க வேண்டும்.

கமல் இரசிகர்களுக்கு பொங்கல் சிரித்துச் சிரித்து இனிக்கப் போகிறது. 'காதலா காதலா' பொங்கல் வெளியீடு. ஆரம்பம் முதல் முடிவுவரை வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதே கடன் என்று கதை பண்ணியுள்ளார்கள்.

கமல், சௌந்தர்யா, பிரபுதேவா, ரம்பா ஜோடிகள். இறுதியில் ஜோடிகள் மாறுவதுதான் கதை என்று ஒரு தகவல். அந்தக் கால சபாஷ்மீனாவின் தழுவலாம்.


## சம்பந்திகள்

இசையமைப்பாளர் தேவாவின் மகளுக்கும், இளையராஜாவின் அண்ணன் ஆர்.டி.பாஸ்கர் மகனுக்கும் விரைவில் திருமணம் நடக்க இருக்கிறது.

இசையமைப்பாளர்கள் சம்பந்திகளாகப் போகிறார்கள். ம்ம்ட்டும்.

## முகப்பில்

ரம்பா – ஷாக்ஸி – விஜய்





மீனா
படம்: பொற்காலம்

"கன்னி இதழில்
தேனிருக்கும்
கண்ணின் விழியில்
மீனிருக்கும்.
அன்புகூட நாளிருக்கும்
அழகைப் பார்த்தால்
ஏனிருக்கும்?
இமைகள் இரண்டும்
குடை பிடிக்கும்.
இருவிழி மெதுவாய்
நடை நடக்கும்.
பருவம் என்றும்
படை தொடுக்கும்!"



...ரகுமான்-ராஜஸ்ரீ
...படம்: பிரார்த்தனா

## காதோடு சொல்லுகிறோம்

'ராம்' என்று பெயர் தொடங்கும் மூன்றெழுத்து நடிகர் அடிதடி சாந்தி நடிகையின் அன்புக்கு அடிமையாக இருப்பது தெரிந்த சங்கதி. இந்த நடிகர் முன்னர் 'நிரோ' நடிகையை காதலித்ததும் அறிந்ததே. இவர்கள் இருவருக்கும் இடையே அடிக்கடி சமுசா வருவதும், பின்னர் ஊடல் கூடலாவதும் வாடிக்கை. இப்போது 'நிரோ' நடிகை மறுபடி நடிகரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறார். நடிகையின் சகோதரியான 'ரா' நடிகைதான் இதனால் கடும் கோபத்தில் இருக்கிறாராம்.

'பா' பிரிய நடிகைக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை பார்த்துவிட்டார்களாம். நடிகை வில்லங்கமான தொழில் விவகாரத்தில் மாட்டியதால் உள்ளூரில் மாப்பிள்ளை யாரும் மாட்டவில்லையாம். சமீபத்தில் நடித்து வெளியான படம் 'ஆஹா' என்று ஓடுவதால், நடிப்பதா? மாப்பிள்ளையின் கரம் பற்றுவதா? என்று கடைசி நேர குழப்பத்தில் இருக்கிறார் 'பா' பிரியநடிகை.

மீன் நடிகை சகலகலா வல்லவருடன் நடிக்க மறுத்தார். சகலகலா வல்லவரின் பக்கம் நிற்கும் சத்யமான நடிகருடன் மட்டும் அன்பாக இருக்கிறார். அவருடன் புதிய படம் ஒன்றிலும் ஜோடி சேர்ந்துள்ளார். மறுபுறம் 'பொற்கால' இயக்குநரும் மீன் நடிகையும் கரம்கோர்த்து 'டும் டும்' கொட்டும் செய்தி விரைவில் வரும் என்றும் கோடம்பாக்கம் வட்டாரம் ஜோசியம் கூறுகிறது.

ரட்சக நாயகனை ஓஹோவென்று புகழ்கிறார் உலக அழகி. இருவரும் ஜோடிப் பறவைகளாக ஹொங் கொங் போய் திரும்பியுள்ளனராம். ஒன்றாகவே சுற்றி, ஒன்றாகவே தங்கி ஹொங் கொங் அழகை இரசித்து அனுபவித்தார்களாம்.

'சிம்ம' நடிகையின் திறமையால் 'ரம்ப' நடிகைக்கு கிடைக்க இருந்த ஐந்து படங்கள் அவர்வசம் சென்றுள்ளன. முன்னர் 'ரம்ப' நடிகை ஏனைய நடிகைகளின் வாய்ப்புக்களை கவ்வினார். இப்போது சிம்ரான் அவரிடமிருந்து தட்டிப்பறிக்கிறார். இதுதான் காலம்!

## லண்டன் காதலி

தனது லண்டன் காதலியுடன் அடிக்கடி போனில் வழிகிறார் விஜய். போனில் இலங்கை, இந்திய விலைவாசிகள் போல மளமளவென்று ஏறிவிட்டதாம்.

சமீபகால படங்கள் ஹிட்டானதால் பயங்கர சந்தோசத்தில் இருக்கிறார் விஜய்.

இப்போதைக்கு திருமணம் கிடையாது. காதல் கீதல் எல்லாம் இல்லவே இல்லை. இன்னமும் சாதிக்க வேண்டிய சமாச்சாரங்கள் நிறைய இருக்கின்றன. அதன் பின்னர்தான் காதல்" என்கிறார். பொய்தானே.

## சுஷ்மிதாசென் குஷியில்

இந்திய பணமதிப்பில் பதினைந்து கோடி ரூபாயை சாப்பிட்டு உருவான படம் ரட்சகன். 'சோனியா சோனியா சொக்க வைக்கும் சோனியா...' பாடல் ஏ.ஆர்.ரகுமான் இசையில் சூப்பர் ஹிட்டாகி விட்டது.

படம் பெரியளவில் பாராட்டப்படாவிட்டாலும் வசூல் பாதகம் இல்லை. கதாநாயகி சுஷ்மிதா படு குஷியில் இருக்கிறார்.

மற்றொரு அழகி ஐஸ்வர்யாராய் தமிழில் முதல் நடித்த படம் 'இருவர்' படு தோல்வி. 'ரட்சகன்' படம் தமிழிலும் வெற்றி. சுஷ்மிதாவின் குஷிக்கு காரணம் அதுதான்.

வழக்கமாக நடிகைகளுக்குத்தான் அன்புப் பரிசுகள் கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால் 'ரட்சகன்' பட இயக்குநரான ப்ரவின் காந்திக்கு கார் ஒன்று பரிசளிப்பதாக கூறியிருக்கிறார் சுஷ்மிதா. படத்தில் நடிக்க சுஷ்மிதாவுக்கு குஞ்சுமோன் கொடுத்த ஊதியம் ஒரு கோடிக்கு மேல் என்பது தகவல்.

## மீனா–சீனா

மீனா உல்லாசமாக சீனா போய் வந்தார் அல்லவா. போன இடத்தில் அங்குள்ள பெரும் புள்ளிகள் சிலர் நன்கு பழக்கமானார்களாம். அதனால், சீனாவில் படப்பிடிப்பு நடத்துவதானால் தன்னால் உதவ முடியும் என்று மீனா கூறிவருகிறார். (அதற்கு தனியான ஊதியம்) அதனால் மீனாவைக் கண்டதுமே இயக்குநர்களுக்கு சீனா ஞாபகம்தான் வருகிறதாம்.

## அஜித்துடன் மோதலா

சூர்யா இயக்கத்தில் அஜித்குமார் இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் 'வாலி'. இப் படத்தில் கீர்த்தி ரெட்டி அஜித் ஜோடியாக நடித்தார். இரண்டு நாட்கள் காட்சிகள் படமாக்கப்பட்டன.

கீர்த்தி ரெட்டிக்கும் அஜித்குமாருக்கும் இடையே படப்பிடிப்பில் நடந்த உரசல் ஒன்றால் தகராறு. 'குட்பை' சொல்லி விட்டு விலகிக் கொண்டார் கீர்த்தி ரெட்டி. இப்போது சிம்ரான் நடிக்கிறார்.

## பெண் என்றால் மட்டும்....



அர்த்தமே இல்லாமல், ஒரு பக்கச்சார்பாக பெண்கள்மீது குறைகூறுவது வழக்கம்தானே. 'பெமீனா' பத்திரிகையில் பெண்கள் மீது கூறப்படும் ஒரு தலைப்பட்சமான பழிகள் பற்றி பட்டியலிட்டுள்ளார்கள் பாருங்கள்.

ஆண் சாரதி காரை மோதினால் 'அந்த ட்ரைவர்' மோசம். ஆனால் ஒரு பெண் சாரதி மோதினால், பெண்களே இப்படித்தான்.

நோயாளியான தன் மனைவியை வீட்டில் விட்டு விட்டு கணவன் அலுவலகம் போனால், கடமையில் கண்ணாக இருக்கிறான். நோயாளிக் கணவனை வீட்டில் விட்டு விட்டு மனைவி போனால், கணவன் மீது அக்கறை இல்லாதவள்.

ஓர் ஆண் பல பெண்களோடு ஜாலியாகப் பழகினால் 'ஜாலி' ஆசாமி. ஒரு பெண் ஆண்களோடு நட்பாகப் பழகினால், அவள் 'ஒரு மாதிரி'ப் பேர்வழி.

ஓர் ஆண் தன் தொழிலில் வெற்றி கண்டால் திறமைசாலி. ஒரு பெண் தொழில் நடத்தி வெற்றி பெற்றால் 'பெண் என்கிற அனுதாபத்தைப் பயன்படுத்திக் கொண்டாள்....'

குழந்தைகள் புத்திசாலியாக இருந்தால் அப்பா மாதிரி. சரியாக இல்லாவிட்டால் அம்மா வளர்ப்பு சரியில்லை!

ஒரு பெண் இன்ஜினியர், டாக்டர் போன்ற வேலைகள் செய்தால் பாராட்டுகின்றனர். ஆனால்...ஓர் ஆண் வீட்டில் சமையல், துணி துவைக்கும் வேலைகள் செய்தால் 'பொட்டப்பயல்'!

## கிலோக்கணக்கில் கவலையா?

### விரட்ட 5 வழிகள்



நீங்கள் தாளமுடியாத துயரில் மூழ்கி இருக்கிறீர்களா? உங்கள் கவலையை மறக்க இங்கே 5 வழிகள் கூறப்பட்டுள்ளன.

'மனமுண்டானால் இடமுண்டு' என்பதற்கேற்ப மனதைச் சீராக்கிக் கவலையை விரட்டியடியுங்கள்.

* கவலைப்படுவதால் எந்தக்காரியமும் கைகூடுவதில்லை. உங்களது கடந்த வாழ்க்கையைக் கவனித்துப் பார்த்தால், கவலையால் நீங்கள் எந்தக் காரியத்தையும் சாதித்திருக்க மாட்டீர்கள். கவலை என்பது உங்களது ஆற்றலின் வீண்செலவே.
* கவலைக்கான காரணத்தை ஆராயுங்கள். அந்தக் காரணத்தைக் கிள்ளி எறியுங்கள். இனி எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்துச் செயலாற்றுங்கள். வெற்றி நிச்சயம்.
* வாழ்க்கை என்பது ஒரு முறைதான். அதைச் சரியாகப் பயன்படுத்துவது உங்கள் மனதைப் பொறுத்தே அமைகிறது. உங்களைச் சுற்றியுள்ள நல்ல, மற்றும் இன்பமான விஷயங்களில் நாட்டம் செலுத்துங்கள் கவலை பறந்து போகும்.
* கவலையை விரட்டும் சிறந்த சாதனம் நம்பிக்கைதான். ஒரு தடவை முயற்சியில் தோல்வியடைந்தால் துவளாதீர்கள். அடுத்த முயற்சியில் நம்பிக்கை கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம் என்று பணியாற்ற, கவலை உங்களை விட்டு விலகும்.
* அறிஞர்கள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றை எண்ணிப்பாருங்கள். உன்னத நிலையை அடைய அவர்கள் எத்தனை பாடுபட்டிருப்பார்கள். அவர்கள் யாரேனும் கவலைக்கு இடமளித்திருந்தால், உயர்ந்த நிலையை அடைந்திருக்க முடியாது. எனவே அவர்களது வாழ்க்கையைப் பாடமாகக் கொண்டு, கவலையை விரட்டுங்கள். முயலுங்கள், வெற்றி பெறுங்கள்.

## குழந்தைக் குளிப்பு



குழந்தையைக் குளிப்பாட்டும்போது, முதல் ஆறு மாதம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

லேசான சுடுநீரில் குழந்தைகளைக் குளிப்பாட்டுவதே சிறந்தது. அது குழந்தைகளின் சருமத்தைச் சுத்தப்படுத்தி, நோய்க் கிருமிகளிடம் இருந்து காப்பாற்றச் செய்யும்.

பரந்த பிளாஸ்டிக் பாத்திரத்தில் பாதியளவு நீரை நிரப்பி, அதில் குழந்தையை வைத்து, தலையை உயர்த்திப் பிடித்த வண்ணம் குளிப்பாட்டுவதே பாதுகாப்பானது. ஒருபோதும் கொதிக்கவைத்து ஆறிய நீரில் குழந்தைகளைக் குளிப்பாட்ட வேண்டாம்.

சுத்தமான துவாயை நீரில் தோய்த்து, பிழிந்து மெதுவாகக் குழந்தையின் முகத்தைத் துடைக்க வேண்டும். குழந்தையின் தலையைச் சுத்தப்படுத்த 'பேபி ஷம்பூ' பாவியுங்கள்.

பின்பு முடி காயும்வரை மெதுவாக துவாயால் தலையைத் துவட்ட வேண்டும். கால், கை, விரல் இடுக்குகளைத் தண்ணீரில் தோய்த்து கழுவித் துடைக்க வேண்டும்.

குளிப்பாட்டிய பின்பு, கண், காது, மூக்குப் பகுதிகளை மெல்லிய துவாய் கொண்டு சுத்தப்படுத்துங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CW

பெயர்:......................
முகவரி:......................
..............................
தொழில்:......................
கையொப்பம்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.


கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-12-1997
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 14

புவனா

இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினரான ஹென்றிக்கு டயானாவை மறக்க முடியவில்லை.

சினிமாவில் தோன்றும் வில்லன்கள் போன்று, ஹென்றியும், 'எனக்கு கிடைக்காத டயானா, வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது' என்று மனதுக்குள் கறுவினார்.



விருந்து நிகழ்ச்சிகளில் டயானாவுடன் இணைந்து நின்று எடுத்துக் கொண்ட படங்களை இளவரசர் சார்ள்ஸுக்கு அனுப்பிவைத்தார்.

ஹென்றிக்கும் டயானாவுக்கும் இடையே இருந்த இரகசியத் தொடர்பை அறிந்த மூன்றாம் ஆள் ஒருவர் தகவல் தெரிவிப்பது போலவே, சார்ள்ஸுக்கு அந்தப் படங்களை அனுப்பியிருந்தார் ஹென்றி.

அந்தப் புகைப்படங்களை பார்வையிட்ட இளவரசர் சார்ள்ஸ், யார் கண்ணிலும் படாமல் அவற்றை ஒளித்துவிட்டார்.

மகாராணிக்கு தெரிந்தால் தங்கள் திருமணம் தடைப்பட்டுவிடுமோ என்று பயந்தே சார்ள்ஸ் அவற்றை ஒளித்து வைத்தார்.

எனினும் பிரிட்டிஷ் அரச குடும்ப மருமகள், தன் ஆண் நண்பர்களுடன் சுற்றுவதை தடுப்பது எப்படி? என்று சார்ள்ஸ் தன் காதலி கமீலாவுடன் கலந்தாலோசித்தார்.

இளவரசர் சார்ள்ஸ் சார்பாக டயானாவிடம் தூதுபோனார் கமீலா. டயானாவுடன் சகஜமாகப் பேசி, அரச குடும்ப மருமகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை சொல்லித் தரும் பொறுப்பை கமீலாவிடம் ஒப்படைத்திருந்தார் சார்ள்ஸ்.



டயான வீட்டு கிரிக்கெட்குழு

### கிரிக்கெட் ஆட்டம்

கமீலா சென்றபோது டயானா கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார். டயானாவின் ஆண் நண்பர்களும் குதூகலமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

கமீலாவுக்கு அதில் ஒன்றும் தப்பாக தெரியவில்லை. 'அரச குடும்பத்தின் கட்டுப்பாடுகளுக்குள் இந்தச் சின்னப் பெண் எப்படி சிக்கி இருக்கப் போகிறாள்?' என்றுதான் நினைத்தார் கமீலா.

கமீலாவைக் கண்டதும் டயானா வரவேற்றாள். தன் நண்பிகளுக்கும், நண்பர்களுக்கும் அறிமுகம் செய்தாள்.

'பிரிட்டிஷ் இளவரசரின் குடும்ப நண்பி' என்றே கமீலாவை அறிமுகம் செய்தாள் டயானா.

பின்னர் கமீலா பார்த்துக் கொண்டிருக்க, டயானாவும் ஏனையோரும் தங்கள் கிரிக்கெட் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஒரு கட்டத்தில் டயானா அடித்த பந்து தோட்டத்து பூஞ்செடிகளுக்குள் சென்றுவிட்டது.

பந்தை தேடிக்கொண்டிருந்தபோது டயானாவின் ஆண் நண்பர்களில் ஒருத்தன், "அந்தப் பந்து போனால் போகட்டும்....." என்று சொன்ன விஷமமான ஜோக்குக்காக டயானா விழுந்து விழுந்து சிரித்தாள்.

'இந்த விளையாட்டுப் பெண்ணா இங்கிலாந்தின் எதிர்கால இளவரசி?' என்று கமீலாவுக்கு திகைப்பாக இருந்ததாம். கமீலாவே டயானாபற்றிய தன் அபிப்பிராயத்தில் அச்சம்பவத்தை நினைவு கூர்ந்திருக்கிறார்.

கிரிக்கெட் ஆட்டம் முடிந்ததும் டயானாவுடன் கமீலா தனியாக பல விஷயங்களை பேசிக் கொண்டிருந்தார்.

சார்ள்ஸ்மீது அதிக உரிமை பாராட்டுபவர்போன்று கமீலாவின் பேச்சின் தொனி இருந்ததை டயானா கவனித்தாள்.

என்னதான் நவீன இளம்பெண்ணாக இருந்தாலும், தன் காதலரும், வருங்காலக் கணவருமான சார்ள்ஸ்மீது இன்னொரு பெண் அதிக உரிமை பாராட்டுவதை டயானாவால் ஜீரணிக்க முடியவில்லை.

கமீலாவை எப்போது முதன்முதலாக டயானா சந்தித்தாளோ, அந்த நேரம் முதல் கமீலா நம்பத்தகுந்த பெண்ணல்ல என்ற உறுத்தல் டயானாவின் மனதில் எழத் தொடங்கிவிட்டது.

தன் முன்பாக சார்ள்ஸை கமீலா பார்த்த பார்வையில் இருந்தே டயானாவின் மனதில் சந்தேகம் முளைவிடத் தொடங்கியிருந்தது.

இப்போது தனிமையில் கமீலாவுடன் பேசிக்கொண்டிருந்த போதும், முன்பிருந்த உறுத்தலும், சந்தேகமும் அதிகமாகின.

அரச குடும்ப எதிர்பார்ப்புக்கள், கட்டுப்பாடுகள், விதிமுறைகள் பற்றி கமீலா பேச்சோடு பேச்சாக கூறத் தலைப்பட்டபோது, டயானா கொட்டாவிவிடத் தொடங்கிவிட்டாள்.

அதற்கு மேலும் அங்கிருப்பது நாகரிகக் குறைவு என்பதால் கமீலா விடைபெற்றுச் சென்றுவிட்டாள்.

### நினைத்தது நடந்தது

பிரிட்டிஷ் குடும்ப மருமகளாக மாறப்போவதை நினைத்து டயானா ஒன்றும் வானத்தில் பறக்கவில்லை. மகிழ்ச்சியாகவும், அச்சமாகவும், சில சமயம் கவலையாகவும் மூன்றும் கலந்த கலவையான மனநிலையில் டயானா தடுமாறினாள்.

கமீலாதான் டயானாவின் கவலைக்கு காரணமான பெண். கமீலா தனக்கு வில்லியா? நண்பியா? தனது மனதின் உறுத்தல் சரிதானா? என்று ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தாள் டயானா.

இதற்கிடையே டயானாவின் தந்தையும், சிறிய தாயாரும் அரச குடும்ப திருமண ஏற்பாடுகளையும், தங்கள் சம்மதத்தையும் டயானாவிடம் கூறிவிட்டனர்.

டயானாவின் தம்பியான சார்ள்ஸ் ஸ்பென்சர் உட்பட, சகோதரிகளும் தோழிகளும் 'இளவரசி' என்றே டயானாவை அழைக்கத் தொடங்கினர்.

இளவரசர் சார்ள்ஸ் டயானாவை சந்திக்க விரும்புவதாக தகவல் கொடுத்திருந்தார்.

பிரிட்டிஷ் அரச குடும்ப திருமண விஷயத்தை பத்திரிகைகள் பரகசியமாக்கி விட்டதால், சார்ள்ஸும், டயானாவும் சேர்ந்து வெளியே சுற்ற முடியாமல் போனது. முன்னர்போல தனியான சந்திப்புக்கள் இல்லாமல் போயிற்று.

தனது குதிரைச் சவாரிப் பயிற்சியாளரான நிக் காஸ்லீ என்பவரது வீட்டுக்கு வருமாறு சார்ள்ஸ் தகவல் அனுப்பியிருந்தார்.

நீண்ட நாட்களின் பின்னர் டயானாவைக் கண்ட சார்ள்ஸ், அவளை கட்டியணைத்து இதமாக முத்தமிட்டார்.

தன் பிரியமான குதிரையை வருடிக் கொடுப்பதுபோல, டயானாவின் முதுகை வருடிவிட்டார்.

ஆனால் டயானாவால் மனம் கனிந்த நிலையில் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்ள முடியவில்லை.

'இப்படித்தானே கமீலாவுக்கும் முத்தமிட்டிருப்பார். இப்படித்தானே கமீலாவையும் வருடிவிட்டிருப்பார். இப்படித்தானே கமீலாவுடனும்...' டயானா கமீலாவை மறக்க முயன்றாள்.

சார்ள்ஸ் தன் பிரியமான குதிரையில் ஏறி சவாரி செய்து காட்ட விரும்பினார்.

அந்தக் குதிரையின் பெயர் 'அல்லிபார்'. குதிரையில் சார்ள்ஸ் தாவி ஏறியதுமே, டயானாவின் மனதில் விசித்திரமான எண்ணம் ஒன்று தோன்றியது.

"இந்தக் குதிரை இப்போது சாகப்போகிறது" என்று டயானா வாய்விட்டே சொல்லிவிட்டாள்.

சார்ள்ஸ் முதலில் டயானா கூறியதை ஜோக்காகவே எடுத்துக் கொண்டார். ஆனால் டயானா சொன்னது பலித்தபோது சார்ள்ஸ் மிரண்டு போனார்.

இளவரசர் சார்ள்ஸ் குதிரையைவிட்டு இறங்கியதும், அக் குதிரை சுருண்டு விழுந்து இறந்துபோனது.

சார்ள்ஸ்சால் நம்ப முடியவில்லை. பின்னர் ஒரு காலத்தில் தன் அனுபவங்களை நினைவு கூர்ந்த டயானாகூட, அச் சம்பவத்தை நினைத்து அதிசயப்பட்டிருந்தார்.

தன் பிரியமான குதிரை இறந்ததை சார்ள்ஸ்சால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

### நாள் குறித்தனர்

## திரும்ப வராத நாட்கள்



சார்ள்ஸ்- டயானா திருமணச் செய்தியை பிரிட்டிஷ் அரச குடும்பம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடிவு செய்தது.

உத்தியோக பூர்வமாக திருமண நாளை தெரிவிக்க முன்பாக அரசகுடும்ப பக்கிங்ஹாம் அரண்மனைக்கு டயானா அழைக்கப்பட்டாள்.

மூன்று மாதங்களின் பின்னரே திருமணம் நடைபெறும். அதுவரை பக்கிங்ஹாம் அரண்மனையில் டயானா தங்கியிருக்க வேண்டும்.

தனது பொருட்களுடன் பக்கிங்ஹாம் அரண்மனை நோக்கிப் புறப்பட்டாள் டயானா. தன் சிநேகிதிகளைப் பிரிந்து, அரச குடும்ப அரண்மனை நோக்கி செல்வதை நினைத்த டயானாவுக்கு சோகம் தாங்க முடியவில்லை.

தன் இளம்பருவ துள்ளல்கள், சுதந்திரமான சிறகடிப்புக்கள், சிரிப்பும், களிப்பும், சீண்டலுமான தினங்கள் எல்லாமே தன்னை விட்டு விலகிப் போய்விட்டன போன்று உணர்ந்தாள் டயானா.

தோழிகளை கட்டிப் பிடித்தபடி அழத் தொடங்கினாள். தோழிகள்தான் ஆறுதல் படுத்தினார்கள்.

"மீண்டும் சந்திக்கத்தானே போகிறோம். பக்கத்தில்தானே போகிறாய்" என்றனர் தோழிகள்.

மறுபடி சந்தித்தாலும், முன்னர் போன்று கைவீசி கவலைகள் இல்லாமல் கிரிக்கெட் ஆட முடியுமா?

பக்கத்து வீட்டு அழைப்பு மணியை அடித்துவிட்டு ஓடி ஒளிந்து வேடிக்கை காண்பிக்க முடியுமா?

திரும்ப வராத நாட்கள். மலரும் நினைவுகளாக இருந்து ஏங்கவைக்கப் போகும் நாட்கள்!

டயானா விடைபெற்றாள். அவளது அழகான கைக்குட்டை கண்ணீரில் குளித்திருந்தது.

டயானாவை அழைத்துச் செல்ல ஸ்கொட்லண்ட்யார்ட்டைச் சேர்ந்த ஓர் இன்ஸ்பெக்டர் வந்திருந்தார்.

டயானாவின் காதருகில் மிக இரகசியமாக அந்த இன்ஸ்பெக்டர் கூறினார்:

"உன்னுடைய வாழ்க்கையில் சுதந்திரமாக இருக்கும் கடைசிநாள் இன்றுடன் முடிவடைகிறது."

பக்கிங்ஹாம் மாளிகைக்கு அந்த இரவில் போய்ச் சேர்ந்தபோது இன்ஸ்பெக்டர் கூறியது பொய் அல்ல என்பது உறுதியானது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வத்தளை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | திருமதி.எஸ்.ஜெயரட்ணம், 21 பீ, குடாஏதண்ட வீதி, வத்தளை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அர்த்தம் சொல்

இருள் விளக்கு
அமைதியாக எரியும்
நீலமான இரவின் மடியில்
நீண்டநேரம்
விழித்துக் கிடக்கிறேன்!
**
வரப்போகும் வைகறையாவது
உன் மௌனத்துக்கு
விடை சொல்கிறதா என்று
கேட்க!
**
கனவுகள் உன்
பாதத்தை சுற்றத் தொடங்கிய
பௌர்ணமியில் இருந்து
என் கண்களோடு நீ
தினந்தோறும் விளையாடுகிறாய்!
**
பனியின் குளிரிலும்,
மலர்களின் மொழியிலும்,
வர்ணப் புகையாக உன்
நினைவுகள்
வந்து போகின்றன!
**
உன் புன்னகையின் பின்
எனக்கு எதுவும்,
எதைப்போலவும் இல்லை.
எல்லாம் அதைப்போலதான்
உன் புன்னகையைப் போல!
**
புரியவில்லையா உனக்கு?
உன் சமுத்திரக் கண்களுக்குள்
என்னை சமாதியாக்கிக் கொள்
என்கிறேன்- ஒரு
கண்ணீர் துளியைப்போல!
**
பெண்ணே!
உன்
விழிகளின் வசனங்களுக்கு
அச்சப் படாமல்
அர்த்தம் சொல்!
காதலின் அகராதியில்
நான்
எழுத்து மட்டும்தான்
நீதான் கருத்து!

பர்ஸான்-நிககொள்ள, யடவத்த.

## பிரித்தல்

நடந்தால்
உடல் வலிக்கும்
எப்போதும்
வாகனப் பயணம்!
●□
உடலை குறைக்க
கடற்கரையில்
காலை மாலை
காற்றாடல் பயணம்.
●□
வெம்மை தணிக்க
குளிர்பானம்
முகத்திற்கு
குளிர் பூச்சு.
●□
பசித்தாலும்
பசிக்காது போனாலும்
உணவு.
●□
உடல் களைப்பு
போக்க
பகல் தூக்கம்.
●□
சூரியனின்
அந்திச் சாயலை
இரசித்தபடி
சிற்றுண்டி.
●□
'உடலை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேன்'
தினம்
உண்டு கொழுத்து....
●□
ஆனால்
தினமும்
வன்னி மண்ணோ
'கூட்டல் கழித்தல்'
கணக்குகளோடு
இரத்த குளியல்
செய்யும்.

சுபா வரன்- கண்டி.

## எங்கள் பயணம்

ஆத்துக் காத்தில் அசையும் தோணியாய்
அது என்ன சிவப்பு..?

பொல்லெறிப்பட்ட பெட்டை நாய்போல
கெந்திக் கெந்தியும்,
அந்த நாளில்
குனிந்தும் நிமிர்ந்தும்
கேள்விக்குறி போல் பிச்சைக்கு வந்து
எங்களைப் பயமூட்டும்
ராணிக் கிழவனைப் போலும்,

அடடே.. அது எங்கட பஸ்.

சீனியை அள்ளித் தின்ற
கடும் சக்கரை வியாதிக்காரனைப் போல
அங்கே பாருங்கள் அவதிப்படுகுது.

நாள் பட்ட காச நோய்க்காரன் மாதிரி
இருமிச் செருமி
கர்...புர்...பண்ணும்
தீராத நோய்: பாவம்!

இப்படித்தான்.
எண்ணெய்ப் பொரியலுக்கு ஆசைப்படும்
அல்சர் காரன் மாதிரி
அடிக்கடி வேகமாய் ஓடி
மண்ணப்பி, துடைத்துக் கொள்ளும்
அதன் வெள்ளை மீசையை.

நாட்டுக்குச் சோறு போடும்
விவசாயி கிராமத்தானுக்கு
எதுக்கு சார் புதுசு...?
எதுக்கு சார் சொகுசு...?

வாகன வெள்ளோட்டம் விடவந்த
அரசியல் வாதிக்கு
ஆளுயர மாலை போட்டுக் குதித்தது
நேற்றுப் போல
நினைவில் கிடக்குது!

இந்த ஆக்கினைக்குள்ளும்
சோதனை முகாம்களில் இறங்கி
அஞ்சலி செலுத்தும் சங்கதி வேறு!

எஸ். புஸ்பானந்தன்- மண்டூர்.

## கா(சா)வோலை



அகதிக்
கொட்டில்களின்
இற்ற
கிடுகின்
இடுக்குகலூடே
மரணத்தின்
வரவைப்
பார்த்துக்கொண்டிருந்த
சந்தர்ப்பம் அது!
*
காலடிச் சத்தங்கள்
மட்டும்
காதுக்குத் தெரிந்தது.
கண்ணுக்குக்
கேட்கவில்லை
*
இதில்
முதல்
வெட்கப்படுவது
எது?
பல
கிழட்டோலைகளும்
ஒரு
குருத்தோலையும்
குத்தியிருந்தது.
*
பாதாதி
கேசமா?
கேசாதி
பாதமா?
*
ஒருவருக்குந்தான்
புரியவில்லை
*
கதவிடுக்கால்
புகுந்த கத்தி
குருத்தோலையை
வெட்டியது...
பல
இழைத்தோலைகளைக்
கட்டுவதற்காக!

மாரிமுத்து யோகராஜன்- அக்கரைப்பற்று-08.

## 'லயன்'

இம்முறை
எங்கள்
வீட்டில்தான்
இயேசு
பிறப்பாராம்;
••
ஒப்பிட்டுப்
பார்த்ததில்-
தொழுவம்
தோற்றுவிட்டதாம்!

எஸ். பிரபா

## தேன் கிண்ணம்

### க(வ)லையும் வலையும்

முத்தமிழை
முயன்று நாமும்
வளர்ப்போமென்று
சங்கமாய் ஒன்றுகூடி
அரங்கு மமைத்தார்
நன்றாய் யன்று!
••
மாரியில்
இடியுடன் கூடிய
பெரு மழையால்
புல்லுடனங்கு
பூண்டும் வளர்ந்து
பூத்துக் காய்த்து

புன்னகை புரிவதும்
வேதனை தான்!

க. நாகராசா, யாழ்ப்பாணம்.

## வெள்ளையனே வா!

வெளியேறிய
வெள்ளையன்
கை கொட்டி
நகைக்கிறான்.
செத்துப் போன
சுதந்திரத்தை
பெற்றுக் கொண்டதாய்
இவர்கள் கொண்டாட
-o-
சுதந்திரம் சுவீகரித்து
ஐம்பது ஆண்டுகள்
சொந்தமாய்
செலவு செய்து
ஆங்கிலம் கற்பதுவும்
-o-
சுதந்திரம்
இழந்தபின்னர்
எஞ்சுவது
சுதந்திர தினம் மட்டும்.
-o-
நாங்கள்
சுதந்திர தினம்
தெரிந்து கொள்வது
சந்தேகத்தில் கைதாகி
சிறைக் கம்பிகளின்
பின்னால் நின்றுதான்!
-o-
சுதந்திர முன்னோடிகள்
நேற்றைய
கனவில் வந்தார்கள்
தங்களையே மோசமாய்
ஏசிக்கொண்டார்கள்.
-o-
கனவில்
யாரோ கோஷமிட்டார்
வெள்ளையனே வா!
சுதந்திரம் தா!

ஐ.எல். ஜலால்டீன், கல்முனை-04.

## யார் இவர்கள்?





← இது வேசமல்ல பாசம். தனது தங்கையுடன் காணப்படும் இந்த நடிகை யார்? ஞாபக மின்சாரம் பாய்கிறதா?!

↑ இந்திப் படவுலகின் இளநாயகன். அடிக்கடி நம்நாட்டு தொலைக்காட்சிகளில் இவர் நடித்த படங்களை பார்த்திருப்பீர்கள். 'ஷா' இவர் பெயருக்குள் அடக்கம்.

↓ தமிழில் நடிக்க ஆரம்பித்துள்ளார். இந்தியில் கலக்கிக்கொண்டிருக்கிறார். இவர் பெயரின் பின்னால் ஒரு ஆண் பெயர் உண்டு. (விடைகள் உதவி 18ம் பக்கம்)





↑ தந்தை பெரியாருடன் ஜெயலலிதா.

அந்தநாள் ஞாபகம்



"அதோ .....! தலைவர் அவர்கள் வந்து விட்டார்கள்..... தயவு செய்து கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்கள் அவர் மேடைக்கு வர வழி விடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.....!"

## இந்த வாரம் உங்கள் பலன்

(21.12.1997 தொடக்கம் 27.12.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன். |
| மகரம் | - வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |
| விருட்சிகம் | - புதன். |

★ சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பகல் | 11 | மணி |
| சனி- கடன் சுமை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- வீண் விரயம், கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் மந்தம், உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், இனசனப் பேறு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- கடன் சுமை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- இனசனப் பேறு, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்துயர், பொருள் நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பயனுள்ள செயல். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன் நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- கடன்சுமை, வீண் விரயம். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- மறைமுக எதிர்ப்பு, பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| புதன்- புதிய முயற்சி, கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் மந்தம். | பகல் | 11 | மணி |
| சனி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் அதிகம், வெளியிட வாழ்க்கை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சுகம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கௌரவ மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- இனசனநன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| புதன் - வெளியிடவாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், கடன்சுமை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| சனி- காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் விரோதம், மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- வீண் முயற்சி, பிரயாண கஷ்டம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5


### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4





> சீரவிரிஞ்சுடர் மீனொடு வானத்துத்
> திங்களையும் சமைத்தே
> ஒரழ காக விழுங்கிடும் உள்ளத்தை
> ஒப்பதோர் செல்வ முண்டோ?
>
> –சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# வியாபாரி புகட்டிய பாடம்

ஒர் ஊரில் வியாபாரி இருந்தான். அவன் தனது ஊரில் இருந்து உப்பு வாங்கி அடுத்த ஊருக்குச் சென்று விற்று வருவான்.

அவன் உப்பைச் சுமந்து செல்வதற்கு ஒரு கழுதையை வைத்திருந்தான். அந்தக் கழுதை சரியான சோம்பேறி. ஒழுங்காக வேலை செய்யாது.

உப்பு வியாபாரி அடுத்த ஊருக்குச் செல்லும்போது ஓர் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

வியாபாரி, கழுதைமேல் உப்பு மூட்டையை ஏற்றிக்கொண்டு செல்லும் போது ஒவ்வொரு முறையும், கால் வழுக்கி ஆற்றில் விழுந்து வந்தது கழுதை.

முதலில், கழுதை ஓரிரு முறை ஆற்றில் விழுந்ததைக் கண்ட வியாபாரி உண்மையிலேயே கால் வழுக்கித்தான் விழுந்து விட்டது என்று நினைத்தான்.

தினமும் இப்படிக் கழுதை ஆற்றில் விழுவதைக் கண்ட வியாபாரி சிந்திக்கத் தொடங்கினான்.

'உப்பு மூட்டையோடு கழுதை ஆற்றில் விழுவதால், உப்பு ஆற்று நீரில் கரையும். அதனால் உப்பு மூட்டையின் சுமை குறையும். அதற்காகத்தான் கழுதை அடிக்கடி ஆற்றில் விழுகிறது.' என்று உப்பு வியாபாரிக்குப் புரிந்தது.

தன்னை ஏமாற்ற நினைக்கும் கழுதைக்குச் சரியான பாடம் புகட்டத் தீர்மானித்தான் உப்பு வியாபாரி.

மறுநாள் தன்னிடமிருந்த கம்பளித் துணியை உப்புமூட்டையப் போன்று கட்டி, கழுதை மேல் ஏற்றிக்கொண்டு சென்றான்.

ஆற்றில் இறங்கியதும், வழமை போல் கழுதை தண்ணீரில் விழுந்தது. தண்ணீரில் விழுந்தவுடன் கம்பளித்துணி தண்ணீரில் நனைந்து பாரம் அதிகரித்தது.

இதனால் கழுதை ஆற்றைக் கடந்து கரைக்கு வர போதும் போதுமென்றாகி விட்டது. தான் செய்யும் திருட்டுத்தனம் வியாபாரிக்குப் புரிந்துவிட்டது என்று நினைத்த கழுதை, இனிமேல் இப்படித் திருட்டுத்தனம் செய்யக்கூடாது என்று எண்ணியது.

இதன்பின்னர் உப்பு மூட்டையைச் சுமந்துகொண்டு ஆற்றைக் கடக்கும்போது கழுதை ஒருபோதும் ஆற்றில் விழுவதே இல்லை.

தான் புகட்டிய பாடத்தால் கழுதை திருந்திவிட்டதை நினைத்துச் சந்தோஷப்பட்டான் உப்பு வியாபாரி.



# அதிசயம் – ஆனால் உண்மை!

### 'S' மரம்




← ஆங்கில 'S' போல இயற்கையிலேயே அமைந்த பைன் மரமொன்று அமெரிக்காவில் உள்ளது.

### கியூலே மாட்



→ கியூலே மாட் எனப்படும் இந்தப்பறவை ஒரே ஒரு முட்டைதான் இடும். தனது இனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான முட்டைகளுக்கிடையே தனது முட்டையை இது தனியாக அடையாளம் கண்டு கொள்ளும். எப்படியென்றால், இம்முட்டைகள் ஒவ்வொன்றும் தனித்தனி நிறமும், தனிரகப் புள்ளிகளும் கொண்டது.

### விஞ்ஞானியின் நாற்காலி



↙ அமெரிக்க விஞ்ஞானியான பெஞ்சமின் பிராங்கிளின் தனது நூலகத்தில் ஒரு நாற்காலியை வைத்திருந்தார். அமர்ந்திருந்து படிக்கலாம். தேவையானபோது ஏணி போல் உயர்த்திப் புத்தகங்களை எடுக்கலாம்.

### பெரிய நாணயம்



→ ஜெர்மனியில் ப்ரௌன் ஸ்வேக் ஸெலி டியூக் என்பவர் 1639ம் ஆண்டு அடித்த நாணயம் தான் இதுவரை அடித்த நாணயங்களில் மிகப் பெரிய நாணயமாகும். இதன் விட்டம் 5 அங்குலம்.

# வாரம் ஒரு நாடு

## கௌதமாலா


தலைநகர்– கௌதமாலா நகரம்
பரப்பு– 1,01,889 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை– 1.06 கோடி
மொழி– ஸ்பானிஷ் மற்றும் இந்திய கிளைமொழிகள்
எழுத்தறிவு– 48%
சமயம்– கிறிஸ்தவம்
நாணயம்– குவெட்சால்
தனிநபர் வருமானம்– 1260 டொலர்.

**அமைவிடம்:**

மத்திய அமெரிக்க நாடு. இதன் கிழக்கே கரீபியன் கடலும், பெலிசும்; மேற்கில் பசிபிக் கடலும்; வடக்கில் மெக்ஸிகோவும்; தென் கிழக்கில் ஹொண்டுராசும், எல்சல்வடோரும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**


மூன்று நூற்றாண்டுகளாக ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்தது. 1939ல் குடியரசானது. இராணுவக் கலவரத்தை அடுத்து அதிகாரம் ஏற்ற பிரிகேடியர் ஜெனரல் ஒஸ்கார் விக்டோரஸ், 1984ல் பொதுத் தேர்தலை நடத்தினார். 1986 முதல் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று வருகிறது.



**பொருளாதாரம்:**

நல்ல வளமுடைய மண். விவசாயம் முக்கிய தொழில். கோப்பி அதிகளவில் பயிராகின்றது. பழங்கள், பருத்தி, சீனி, கோப்பி போன்றவை ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.12.1997.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 224**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 222

**பரிசுக்குரியவர்:**
**கே. ஷனாஸ் மொஹமட்,**
**இ/தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். சுசான் பவ்ஸான், ரோயல் சர்வதேச பாடசாலை, கேகாலை. | .:.பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்.:.போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | தீபா சித்திரவேல், மெதடிஸ் பெண்கள் கல்லூரி, திருகோணமலை. |
| டி. கிர்ஸ்சாந்தன், புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன். | பி. ஸ்ரீபன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| கே. ஸ்ரீ கிருஸ்ணா, மட்/ செங்கலடி மகா வித்தியாலயம், செங்கலடி. | ஆர். மரியம், பாத்திமா மு.ம.வி, புத்தளம். |
| எஸ். கேசாந்தரனி, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | எஸ். சாமில் பௌஸாத், ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை, கல்முனை. |

# சாம்சன்

**★ சாம்சன் என்பவர் யார்?**

பழங்கால இஸ்ரேல் நாட்டு புகழ்பெற்ற வீரர்தான் சாம்சன்.

**★ சாம்சன் எதனால் புகழ்பெற்றார்?**

இவர் மிகவும் பலசாலியாக இருந்ததால் புகழ்பெற்றார்.



**★ சாம்சனின் பலம் அவரது உடலின் எந்தப்பகுதியில் இருந்தது?**

அவருடைய முடியில் இருந்தது. பிறந்ததில் இருந்து அவரது தலையில் சவரக் கத்தி படவில்லை. அதாவது அவரை மொட்டை அடித்து விட்டால் அவரது பலம் அவரை விட்டு அகன்று விடும்.

**★ சாம்சனின் எதிரிகள் எவ்வாறு அவரைப் பிடித்தனர்?**

எதிரி இனப் பெண்மீது சாம்சன் மயங்கி இருந்த வேளையில், இவரது பலத்தின் இரகசியத்தை அறிந்து, சாம்சனை தன் மடியில் நித்திரை செய்யப் பண்ணி, அவரது தலை மயிரை மொட்டையடிக்கச் செய்தாள் அந்தப் பெண். அதனால் சாம்சனின் பலம் அவனை விட்டு நீங்கிற்று. அதன் பின் சாம்சனைப் பிடித்தனர்.

**★ பின், தன் எதிரியினரை சாம்சன் எப்படிப் பழிவாங்கினான்.**

எதிரி இனத்தவர், தங்கள் கடவுளுக்கு திருவிழா கொண்டாடி, சாம்சனின் கண்களைப் பிடுங்கி, அவனை விலங்கிட்டு அடித்துத் துன்புறுத்தினர். அப்போது சாம்சன், கோபம் கொண்டு அந்த அரண்மனையின் இரண்டு தூண்களையும் பிடித்து இழுக்க மண்டபம் இடிந்து வீழ்ந்தது. இதனால் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அத்துடன் சாம்சனும் இறந்தான்.

# ஏன் தெரியுமா?

ஐஸ் தண்ணீர் வைத்திருக்கும் டம்ளர் அல்லது போத்தலின் வெளிப்பக்கம் நீர்த்திவலைகள் படிந்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். உள்ளே இருக்கும் தண்ணீர் வெளியே கசிவதற்கு டம்ளரில் ஓட்டை இல்லை. ஆனால் டம்ளருக்கு வெளியே தண்ணீர் வந்திருக்கிறதே. ஏன்?



டம்ளருக்கு உள்ளே இருக்கும் தண்ணீருக்கும் வெளியில் படிந்திருக்கும் நீர்த்திவலைகளுக்கும் சம்பந்தம் இல்லை.

டம்ளருக்குள் இருக்கும் ஐஸ் தண்ணீர் வெளிப்புறத்தை விடக் குளிர்ச்சியாக இருப்பதால் டம்ளருக்கும், டம்ளரைச் சுற்றியுள்ள பகுதிக்கும் அந்தக் குளிர்ச்சி பரவுது. இதனால் அந்தப் பகுதியில் காற்றில் கலந்திருக்கும் ஈரப்பதன் குளிர்வடைந்து நீர்த்திவலைகளாக மாறுகிறது. இந்த நீர்த்திவலைகள்தான் டம்ளரின் வெளிப்பக்கம் படிந்திருக்கிறது.

# கற்பூரமரம்




கற்பூர மரங்களில் இருந்து எடுக்கப்படும் கற்பூரம் இந்துக் கோவில்களில் தீபாரதனையின்போது பயன்படுத்தப்படுகின்றது. இந்த மரத்தின் தாயகம் கிழக்கு ஆசியாவாகும்.

ஜப்பான், சீனா ஆகிய நாடுகளில் செழித்து வளருகின்றது. தற்போது இது இந்தியா, இத்தாலி, ஆபிரிக்கா, புளொரிடா ஆகிய நாடுகளிலும் பயிரிடப்படுகின்றது. வருடத்திற்கு இரு முறை இந்த மரத்தின் இலைகள் பறிக்கப்பட்டு கற்பூரம் தயாரிக்கப்படுகின்றது.

இதைவிட பிளாஸ்டிக் உற்பத்தி, புகைப் படச் சுருள், மருந்துகள், வாசனைத் திரவியம், பூச்சி மருந்துகள் ஆகியவையும் கற்பூர மரத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

# செஞ்சிலுவைச் சங்கம்

செஞ்சிலுவைச் சங்கம் எப்படித் தோன்றியது என்று உங்களுக்குத் தெரியுமா? 1858ல் ஒஸ்ரியாவிற்கும் சர்டீனியாவிற்கும் சாஸ்பெரினோவில் நடந்த போரின் போது சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜீன் ஹென்றி



டொனான்ட் என்ற வங்கியாளர் இதைக் கண்டார்.

சுமார் 40 ஆயிரம் ஒஸ்ரிய, ஃபிரெஞ்சு வீரர்கள் இப்போர்க்களத்தில் கையிழந்து, காலிழந்து, காயப்பட்டுக் குற்றுயிராகத் துடிப்பதைக் கண்டு கண்கலங்கினார்.

1862ம் ஆண்டு 'சாஸ்பெரினோ நினைவுகள்' என்ற நூலை வெளியிட்டு அந்த நூலில் போர்க்களத்தில் குற்றுயிராகத் துடிக்கும் வீரர்களுக்கு உதவ சர்வதேச ரீதியில் ஓர் அமைப்பு நிறுவப்பட வேண்டும் என்று பல நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இதன் விளைவாக 16 நாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் ஜெனீவாவில் 1863ல் ஒன்று கூடினர். 1864ல் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதாவது போர்க்களத்தில் எந்தப்பகுதி வீரர் தாக்கப்பட்டுக் கிடந்தாலும், அவருக்குச் சிகிச்சையளிப்பதை செஞ்சிலுவைச் சின்னம் அணிந்த மருத்துவர்களும், செவிலியர்களும் மேற்கொள்ளலாம் என்பதாகும்.


இந்த இயக்கம்தான் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாக மாறியுள்ளது.

# இனி என் முறை

## புதிய தொடர் 2

**எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல்.**





எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

"அப்படி வாங்கின லேபிளை ஒட்டி வெளிய அனுப்பணும். எல்லா பாட்டில்லயும் லேபிள் இருக்கு. அவர் விக்கிற இடத்துலயும் செக் பண்ணினோம். அங்கயும் பாட்டில்ல லேபிள் இருக்கு. ஆனா மூணு ஷிஃப்ட் ஃபாக்டரி ஓடுது. நிறைய கறுப்பஞ்சாறு வருது. சக்கை, சக்கைன்னு கணக்கு அதிகம் காட்டறார். எங்கயோ ஏமாத்து வேலைன்னு ஒரு டவுட் இருக்கு. எங்கன்னு தெரியலை.

நாலு நாளில்ல கவர்மெண்ட் லேபிளை தானே அச்சடித்து பண்டில் பண்டிலாய் ஒரு பீரோவில் சுருட்டி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்து விட்டான். வாசலில் உள்ள ஸ்க்வாடுக்கு கை காட்ட நாற்பது பேர் நுழைந்து விட்டார்கள்.

பீரோவை பிரஸ்ஸை, ப்ளாக்கை கௌவிக் கொண்டார்கள்.

"என் இடத்திலயா. இப்படி ஒரு சூதா...? இல்லவே இல்லை" என்று சாதித்தார். "என்னை மீறி நடந்திருக்குது" என்று கைவிரித்தார்.

அரஸ்ட் வாரண்டை காட்டியதும் அடங்கி, ஒரு நாள் உள்ளே இருந்துவிட்டு மறுநாள் ஜாமினில் வந்தார்.

"சரி, என் தவறு. ஒத்துக்கறேன். எட்டாயிரம் பண்டில் காட்டாதே... எண்பது பண்டில் காட்டு." பேரம் பேசினார்.

புலனாய்வுக்குழு சிரித்தது.

தனித்தனியே எல்லார் வீட்டுக்கும் ஆள் அனுப்பினார். இங்கேயும் வந்தார்கள்.

வாசல் வராந்தாவில் உட்கார்ந்து பேசினார்கள். இருபது வயசுப் பையன். கனத்த சங்கிலி வைர மோதிரம். புஸுவென்று ஒரு இம்போர்ட்டட் போட்ட படி நிதானமாய் பேசினான்.

"மொத்த பேருக்கும் பிரிச்சு கொடுத்துர்லாங்க. பெரிய நஷ்டம். அரசாங்கத்துக்கு கொடுக்கிறத உங்களுக்கு செய்யறோம். சொல்லுங்க. எத்தினி?" பெட்டி திறந்தான். கத்தை கத்தையாக நோட்டுகள்.

"எவ்வளோ இருக்கு இதுல?"

"எல்லாருக்கும் தரணுமேன்னு ஒண்ணு முழுசா வச்சிருக்கேன்."

"ப்ளாக் மணியா?"

"இல்லீங்க. நகை வச்சு துட்டு வாங்கினோம். இதோ ரஸீது. உங்கக்கிட்ட ப்ளாக் மணியோட வர முடியுங்களா?"

"விஜிலென்ஸ் ஸெல்ன்னு ஒன்னு இங்க இருக்கு தெரியுமா? அதுல எஸ்.பி, இன்ஸ்பெக்டர் உண்டு, கரப்ஷன் தடுக்கறதுக்கு."

"தெரியுங்க."

"அவருக்கும் தரணும்."

"தரலாம்."

"அப்ப இரு. அவருக்கு ஃபோன் போட்டு வரவழைக்கிறேன்."

"சார்."

"இருப்பா. அவர் வரட்டும். அவர்கிட்டேயும் பேசு."

"மாட்டிவுட்ராதீங்க சார்."

"ஏன் பயப்படறே? உட்கார்."

பையன் எழுந்து வெளியே பெட்டியுடன் ஓடினான். அவன்போன இருபது நிமிடத்திற்குப் பிறகு மணியடித்தது.

"செல்வராஜ்."

"சொல்லுங்க. வணக்கம்." எதிர்முனை பேச கேட்டுக் கொண்டான். கேட்டுக் கொண்டிருந்தான்.

"கந்தசாமி, அவன் சின்ன பையன் விவரம் தெரியாம நுழையறான்னு வுட்டுட்டேன். நீங்க வந்திருந்தா முட்டிக்கு முட்டி அடிச்சு பேத்திருப்பேன். விளையாடறியா என்கிட்ட? உன் காசு என்னடா மயிரு காசு!"

மொத்த பாட்டில்களையும் தொழிற்சாலை பெயருக்கு முன் அடுக்கி அதிகாரிகள் போட்டோ எடுத்து கொண்டார்கள். செல்வராஜ் அதில் முதல் வரிசையில் கைகட்டி உட்கார்ந்திருந்தான். பேப்பரெல்லாம் சிரித்தது. அடங்கிப் போயிற்று.

இப்போது அபராத சூடு போட்டிருக்கிறார்கள்.

"அப்புறம் ஒன்னுமே வரலை. அந்த கேஸ் பத்தி?" அமுதா வியப்புடன் கேட்டாள்.

"தமிழ் பேப்பர்ல வராது. இன்னிக்கு 'ஹின்டு'ல பார். சின்னதா எட்டாம் பக்கம் ஊர் பேர் இல்லாத அநாமதேய நியூஸ் போட்டிருக்கான்."

"ஏன் தமிழ் பேப்பர்ல வரலை?"

"போட வேண்டாம்னு கேட்டிருப்பார் கந்தசாமி. சரிங்க ஐயான்னு கைகட்டி சொல்லியிருப்பாங்க."

"பயமா?"

"உபயோகம். சோப்பு கம்பெனி விளம்பரம், புடவைக் கடை விளம்பரம் கிடைக்கும் அவர் கிட்ட."

"ரொம்ப பணக்காரரா?"

"ம்.ம்."

"பிறகு ஏன் இப்படி ஏமாத்தணும்?"

"இன்னும் பணக்காரனாகணுன்னு ஆசை"

"அத்தினி காசு வச்சிக்கிட்டு என்ன செய்வான்?"

"என்ன செய்ய முடியாது அமுதா?"

"தங்கமாவா திங்க முடியும்?"

"கந்தசாமி பழையதுதான் சாப்பிடுவார்."

"பிறகு...?"

"பவர். ஒரு கட்சியைக் கவக்கற பவர். ஒரு கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வர்ற பவர். அரசாங்கத்தையே பைல போட்டுக்கற பவர். கூப்பிட்டா ஓடி வர எம்.எல்.ஏ., கும்பிடு போட மந்திரி. வீட்டு வேலைக்கு ஐ.ஏ.எஸ். ஆபீஸர். பெரிய பட்டாளம் அது."

"உங்களுக்கு பயமில்லையா, இத்தனை பெரிய பணக்காரனை பகைச்சுக்கறதுக்கு?"

"யார் அனுப்பறது நம்மை! சென்ட்ரல் கவர்ன்மெண்ட. சென்ட்ரல்ல வேற கட்சி. இங்க வேற கட்சி. லோகல் கட்சிக்கு யார் முதுகெலும்பு, கந்தசாமியா, அவரை ஒடின்னு அனுப்பின காரியம்தான் இது."

"அப்ப சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கட்சியா இருந்தா விட்டிருப்பாங்களா?"

"சிரிச்சுக்கிட்டே மடக்கி இருப்பாங்க. இவ்வளவு வெளிச்சம் போட்டிருக்க மாட்டாங்க. இதைவிட பெரிய கொள்ளை நடக்கிறதில்லையா? உண்டு. ஆள் யார்ன்னு பார்த்து உடைக்கறதுதான் முக்கியம்."

"இந்த வேலை வேண்டாம். விட்டிருங்களேன்."

"விட்டுட்டு வேற என்ன வேலை தெரியும் சொல்லு. மளிகைக் கடைல உட்கார முடியுமா? குமாஸ்தா வேலை செய்ய முடியுமா? ஓடி ஓடி பழகிட்டோம். நாலு நாள் வீட்ல உட்கார்ந்தா ஏன் ஹெட் க்வார்ட்டஸ் கார் வரலைன்னு கவலையா இருக்கும். நம்ம இடத்தை வேற எவனோ புடிச்சுட்டானோன்னு பயம் வரும்."

"............"

"யேய்......பக்கத்துல வந்து படேன்."

"பையன் வாசல்லதான் இருக்கான். பகல் நேரத்துல கூப்பிடறீங்களே. நீங்க படுங்க. நான்வேலையெல்லாம் முடிச்சுட்டு குளிச்சிட்டு எழுப்பறேன். எங்கயாவது வெளிய போலாம்."

கால் விறைத்து சோம்பல் நெறித்தான். கண் மூடினான். அமுதா துள்ளலுடன் உள்ளே சென்றாள்.

"இரண்டு நாள் வண்டி எங்கிட்ட இருக்கட்டும், மாணிக்கம். நான் ஐ.ஜி.கிட்ட சொல்லிக்கிறேன்." – வயர்லெஸ் பொருத்திய வெள்ளை அம்பாஸிடர் வீட்டுக்கெதிரே வந்து நின்றதும் பிள்ளை கதவு திறந்து உள்ளே குதித்து ஆடிற்று.

"அப்ப நான் வேணாமா சார்?"

"வேணாம். போய் சினிமா பார்." இருபது ரூபாய் தாள் நீட்ட, டிரைவரின் சல்யூட் விரைப்பாய் இருந்தது.

அரை நிக்கரும், டீ ஷர்ட்டும் ஹவாய் செருப்புமாய் செல்வா வண்டி ஸ்டியரிங் பிடிக்க அமுதா கதவு பூட்டிக் கொண்டு இறங்கினாள்.

சென்னை பிரிவு சிபிஐ வண்டி அது.

"ரொம்ப தூரம் போயிடாதே செல்வா. லோக்கல் டிரிப்புக்கு வச்சுக்க." சொல்லி அனுப்பப்பட்டது. கச்சேரி ரோட் வழியே கடற்கரைக்குத் திருப்பி, உள் பக்க சாலையில் இறங்கி மணல் ஓரம் நிறுத்தினான்.

"இதுக்குத் தான் அரை நிக்கர் போட்டு வந்தீங்களா?"

"யூனிஃபார்ம் போர். பேண்ட் அதைவிட படுபோர். மெட்ராஸ் கசகசப்புக்கு இது தான் சரியான டிரஸ். பிள்ளையும் தகப்பனும் அலை இறங்கினார்கள். இடுப்பு ஜலத்தில் குதித்தார்கள். திலீபனுக்கு மார் உயரம் அலை வந்து மோதிற்று. நீரின் இழுப்புக்குப் பயந்து பிள்ளை அலறினான்.

"திலீபா, நல்லா நில்லு. காலு பிரிச்சு மணல்ல ஊனி நில்லு."

"வேணாம்பா. என்னை வுட்டுரு."

"ச்சு. பயப்படாதடா. நான் நிக்கறேன்ல?"

"வேணாம். நீ பொலிஸ். நீ நிப்ப. என்னை வுட்டுரு. நான் சின்ன பையன் தானே."

"முட்டாள். பொலிஸ்காரன்னா அலை பின் வாங்கி ஓடுமா? காத்து முடி கலைக்காம இருக்குமா? தாங்கணும்டா. உரம்மா நிக்கனும். நில்லு."

பிள்ளை ஒவ்வொரு அலைக்கும் பின் வாங்கினான். கால் ஊன்றாமல் மல்லாக்கக் கவிழ்ந்தான். இழுபட்டபோது தகப்பன் கை பிடித்துச் சுழன்றான்.

"பயப்படற திலீபா. பயத்தை விடு."

"பயமாதாம்பா இருக்கு."

"என்ன பயம்?"

"இழுத்துக்கிட்டு போச்சுன்னா?"

"எகிறி கரைக்கு வர வேண்டியது தானே."

"எனக்கு நீச்சல் தெரியாது."

"கத்துக்க. நான் எட்டு வயசுல எங்கப்பாவுக்குத் தெரியாம கத்துக்கிட்டேன்."

"குளமா இருந்தா கத்துக்கலாம். இது கடல்பா. பயமா இருக்கு. என்னை விட்டுருங்க." ஓடி அம்மாவின் பின் ஒளிந்து கொண்டான்.

"என்ன அமுதா, இப்படி பயப்படறான் தண்ணிக்கு."

"சின்ன பையன்ங்க."

"ம்ஹும். நான் இல்லாம வளர்ற புள்ளை. எல்லாத்துலயும் தடுமாறது பார். பொம்பளை மாதிரி. பேசறானே தவிர... எலே இங்க வா."

"நான் வரலே... நான் வரலே."

பாய்ந்து பிள்ளையைப் பிடித்து செல்வராஜ் நெஞ்சு ஆழத்துக்குக் கடலில் இறக்கிய போது பிள்ளை தகப்பனை குரங்காய் பிடித்துக் கொண்டது.

"பயப்படாதே. நான் இருக்கேன். எங்க போனாலும் புடிச்சுக்கிட்டு வந்துருவேன். அடுத்த பெரிய அலை வர்றபோது என் கையைவிட்டு கரைக்குப் போயிடணும். அலை அடிக்கிற வாட்டத்திலேயே போயிடணும். என்ன... ரெடி.... ரெடி... பெரிய அலை வருது. பயப்படாத போ. நான் இருக்கேன்."

பிள்ளை கைவிட்டு நீரில் குதித்தான். அவன் குதிக்கும் முன், அலை கடந்து விட்டது. கரைக்குப் போன அலை முழுவேகத்தில் பின்னடைய பையன் முற்றிலும் மூழ்கித் தத்தளித்து முன்னேற முடியாமல் புரண்டு "யப்பா யப்பா" என்று அலற, செல்வா தூக்கிக் கொண்டான்.

"என்னடா?"

"வேணாம்பா."

"ஏன்?"

"பயமா இருக்கு. ப்ளீஸ் வேணாம்பா."

"அலை தாண்டி குதிச்சா எப்படி கரைக்குப் போவ?"

"என்னை விட்டுருப்பா."

"நெசமா?"

"நெசமா."

"வேணாமா?"

"வேணாம்."

"சரி, போ."

நாலடி பின்னடைந்து பிள்ளையைக் கரையில் இறக்கினான். பிள்ளை ஓடி, மழையில் நனைந்த காகம் போல தாயிடம் ஒன்றிற்று.

"அப்பா இருக்காங்க இல்லை.... எதுக்கு பயப்படற திலீபா?"

"குளிருதும்மா."

"ஓடி வா. காருக்குப் போலாம்." பிள்ளை காருக்கு ஓடிற்று டவலால் உடம்பு துடைத்து வேறு உடை போட்டுக் கொண்டது. உங்களுக்கு சட்டை கொண்டு வந்திருக்கேன். மாத்திக்கிறீங்களா?"

"வேணாம். வீட்டுக்குப் போய் குளிச்சிட்டு மாத்திக்கலாம்."

(தொடர்ந்து வரும்)

## கடித இலக்கியம்

# ஒரு கெரில்லாவீரனின் கடிதங்கள்

**அர்ஜென்டினாவில் பிறந்தார், கியூபா புரட்சியில் பங்கேற்றார். கெரில்லா போர் தளபதியானார். கியூபாவில் கிடைத்த அமைச்சர் பதவியை துறந்துவிட்டு பொலிவியா நாட்டில் போராடப் புறப்பட்டார். அவர்தான் சேகுவேரா. (சொந்தப்பெயர் எர்னஸ்டோ.)**

*கியூபாவின் கெரில்லாப் போர் முனையில் இருந்து, 'சே' தன் தந்தைக்கு எழுதிய கடிதம். அவரது கடிதத்தில் எப்போதும் ஒரு நகைச்சுவை கலந்திருக்கும்.*

*அன்பான டான் எர்னஸ்டோ அவர்களுக்கு;*

*என்னைத் துரத்திவரும் எதிரிவீரர்கள்மீது எனது ஈட்டியைப் பாய்ச்சுவதற்காக, ரோஸினன் டோலின் குளம்புகள் எழுப்பும் தூசிப்படலத்தின் வழியே குறி பார்த்துக்கொண்டிருந்தபோது, இந்த இதயத்தின் செய்தியை உங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், வழக்கமான புத்தாண்டு வாழ்த்துக்களைச் சொல்வதற்கும், உங்கள் எல்லோருக்கும் என் அன்பைத் தெரிவிப்பதற்கும் நான் துடிதுடிக்கிறேன்.*

*உங்களது சகோதரி செனேரிடாவின் பதினைந்தாவது பிறந்தநாளில் அவளது உறவினர்களின் அன்பு என்றென்றும் அவளை விட்டு விலகாதிருக்கட்டும்.*

*அவள் இந்த நிமிடத்தில் அங்கே இராத இந்த உணர்ச்சிமயமான வீரனை நினைவு கூரட்டும் என்றும் வாழ்த்துகிறேன். அவன் கடந்த முறையைப் போலன்றி இம்முறை விரைவாக உங்களைச் சந்திக்க விரும்புகிறான். இவை தான் எனது குறிப்பான விருப்பங்கள்.*

*நான் பயணம் செய்கிற நாட்களில் மந்திர ஆணைப்படி என்னைச் சந்தித்த கால நட்சத்திரத்தின் முன் இந்தக் கோரிக்கைகளை வைக்கிறேன்.*

*உங்களை விரைவிலேயே பார்க்கிறேன். நான் இனி உங்களை பார்க்க முடியாது போனால்....*

*உங்கள் மகன்*
*'சே'*

*தன் நண்பனுக்கு 'சே' எழுதிய கடிதம். ('சே' ஒரு மருத்துவரும் கூட. ஆனால் அவருக்கு ஆஸ்துமா நோய் இருந்தது)*

*அன்பார்ந்த .:.பெர்னாண்டோ:*

*நீங்கள் அறிந்த மனிதனில் இருந்து முற்றிலும் மாறுபட்ட மனிதனாக, நான் இப்போது இருந்தபோதும், நான் ஒரு தனிப்பட்ட மனிதன் என்பது பற்றி உங்களுக்கு சில சந்தேகங்கள் இருப்பதாக அறிந்தேன். நான் கூறுவது சரிதானே? இல்லையா?*

*ஆஸ்துமா பிடித்தவனாகவும், தனி மனிதவாதியாகவும் முன்னாட்களில் நான் இருந்த காலத்தில் இருந்து, ஆற்றில் ஏராளமான வெள்ளம் பாய்நதோடி இருக்கிறது. இப்போது ஆஸ்துமா மட்டுமே எஞ்சி இருக்கிறது.*

*நீங்கள் திருமணம் செய்து கொண்டு விட்டதாக கூறப்பட்டது. எனக்கும் திருமணம் ஆகிவிட்டது. நான் இன்னமும் சாகசப்பிரியனாகவே இருக்கிறேன். ஆனால் இன்று எனது சாகசங்கள் சரியான இலக்கு நோக்கி முன்னேறுகின்றன.*

*கடந்த காலத்தின் நினைவுச் சின்னமாக விளங்கும் எனது வாழ்த்துக்களை உங்கள் குடும்பத்தாருக்கு தெரிவியுங்கள். சேகுவேராவின் சகோதர அரவணைப்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். 'சே' அதுதான் எனது புதிய பெயர்!*

*உங்கள்*
*'சே'*

*கியூபாவைவிட்டு பொலிவியாவுக்கு புறப்பட முன்னர் தன் பெற்றோர்களுக்கு எழுதிய கடிதம்.*

*எனது பெற்றோர்களுக்கு;*
*அன்பான முதியோர்களே!*

*மீண்டும் ஒருமுறை நான் ரொஸினென்ட்டின்மீது ஆரோகணித்துவிட்டேன். எனது கவசத்தை அணிந்து கொண்டுவிட்டேன்.*

*சுமார் பத்தாண்டுகளுக்கு முன் உங்களுக்கு நான் விடை வேண்டும் கடிதம் ஒன்று எழுதினேன்.*

*நான் ஒரு சிறந்த போர் வீரனாகவும் இல்லை, அல்லது மருத்துவனாகவும் இல்லை என்று அந்தக் கடிதத்தில் வருந்தியிருந்தது இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது.*

*மருத்துவத்துறையில் எனது ஈடுபாடு குறைந்து நீண்டகாலம் ஆகிறது. ஆனால் நான் இப்போது அவ்வளவு மோசமான போர் வீரன் அல்ல. கொஞ்சம் தேறியிருக்கிறேன்.*

*நான் பல விஷயங்களைப் பற்றி அறிந்திருக்கிறேன். எனது மாக்சிய அறிவு நன்கு வேரூன்றித் தெளிவு பெற்றிருக்கிறது.*

*தங்களது விடுதலைக்காகப் போராடும் மக்களின் ஒரே வழி ஆயுதம் தாங்கிய போராட்டம்தான் என்று நான் நம்புகிறேன்.*

*எனது கருத்துக்களில் நான், உறுதியிலும் உறுதியாய் இருக்கிறேன்.*



*என்னைச் சாகச விரும்பி என்று அழைப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் என்னை அப்படி அழைப்பது சரிதான்.*

*ஆனால் நான் வேறு வகையான சாகசம் புரிய விரும்புகிறேன். தாங்கள் சரியானவர்கள் என்று நிரூபிப்பதற்காக அக்கினிப்பிரவேசம் செய்கிற வகையைச் சேர்ந்தவன் நான்.*

*இது எனது இறுதி முயற்சியாக இருக்கலாம். நான் அப்படி ஒரு முடிவை விரும்பவில்லை. ஆனால் காரண காரியங்களோடு யோசிக்கிறபோது அப்படி ஒரு முடிவுக்கு வாய்ப்பு இருக்கிறது.*

*அப்படி ஏதாவது நடந்துவிடுமானால் இதை இறுதித் தழுவலாக ஏற்றுக் கொள்ளுங்கள்.*

*நான் உங்கள் மேல் ஆழமான அன்பு வைத்திருந்தேன். ஆனால் நான் ஒரு போதும் அந்த அன்பை வெளிப்படுத்தியதில்லை. நான் மிகச் சரியாகச் செயற்படுகிறேன். சில நேரங்களில் மக்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன்.*

*என்னை எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் இந்த முறை நான்கூறுவதை நம்புங்கள். ஆகவே ஒரு கலைஞனுக்கு உரிய அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு ஏற்றுக் கொண்டு கருத்துக்களும், இலட்சியங்களும் எனது பலவீனமான கால்களையும், களைப்புற்ற நுரையீரல்களையும் இயங்குமாறு நிர்ப்பந்திக்கிறது. நான் எனது திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.*

*இந்த இருபதாம் நூற்றாண்டின் புரட்சிக்காரனை ஒவ்வொரு முறையும் நினைத்துக் கொள்ளுங்கள்.*

*'திருத்தவே முடியாத, ஊதாரித்தனமான' உங்கள் பிள்ளை உங்களை ஆரத்தழுவுகிறான்.*

*–எர்னஸ்டோ–*

# மேக்கப் புன்னகை



மதுமிதா பங்களாவின் வாசலுக்கு வர, டிரைவர் பீடியை வீசிவிட்டு ஓட்டமாக வந்தான்.

"வேணாம். நீ வர வேணாம்."

மஞ்சள்நிற மாருதி ஜென்னை தானே ஓட்டிக்கொண்டு புறப்பட்டாள்.

ஈஸ்வர் ஆம்பாசிடர் அருகில் வந்தார். டிரைவர் அவரிடம் வந்தான். "வேணாம் நீ வர வேணாம். சாவி கொடு." சாவி கொடுத்துவிட்டு, விலகி நின்றான்.

ஈஸ்வர் ஸ்டார்ட்செய்து சீறினார். அவசரப்பட்டு அணைத்து வீணானதற்கு வருத்தப்பட்ட டிரைவர் அடுத்த பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான்.

காரை வழக்கத்திற்கு விட சற்று வேகமாகவே ஓட்டினாள் மதுமிதா. டேப்பில் இசையைப் போட்டு, மனம் லயிக்காமல் இரண்டே நிமிடங்களில் அணைத்தாள்.

அம்மா பேச விரும்பியது என் பத்திரிகைப் பேட்டியைப் பற்றித்தான். முகத்திலேயே அதிர்ச்சி எழுதி ஒட்டியிருக்கிறதே...

"அது சும்மா... ஒரு பரபரப்புக்காகச் சொன்னதும்மா" என்று நான் சொல்லிவிட்டால் முகமெல்லாம் பல்லாகச் சிரித்திருப்பாள்.

"எங்க வேணும்னாலும் போய்ட்டு வாம்மா.. எப்ப வேணும்னாலும் திரும்பி வாம்மா" என்று சொல்லியிருப்பாள்.

பத்திரிகை பேட்டி உண்மைதான் என்பதுபோல 'நான் என்னைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறவரைத்தான் பார்க்கப் போறேன்' என்று வெடுக்கென்று சொல்லிவிட்டு வந்ததில், அடிவயிற்றில் அமிலம் பரவியிருக்கும்.

இனியா வேறு, நான் அவளிடம் பேசியதை எல்லாம் ஒரு எழுத்து மாறாமல் அம்மாவிடம் ஒப்பித்திருப்பாள்.

ஹோட்டலுக்குப் போய்த் திரும்பியதும் வீட்டில் இன்றைக்கு ஒருமிகப் பெரிய யுத்தம் இருக்கிறது.

நிகழட்டும் அந்த யுத்தம்!

எந்த யுத்தமும் அநீதிக்குத் துணை போனதில்லை. இராமாயணத்திலும் சரி, மகாபாரதத்திலும் சரி அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்ற நல்ல முடிவைத்தான் யுத்தம் தந்திருக்கிறது.

காரை அந்த நட்சத்திர ஹோட்டலின் போர்ட்டிகோவில் நிறுத்தி, இறங்கி சாவியை அங்கே நின்ற பொறுப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு உள்ளே நடக்க, அந்தச் சீருடை நபர் காரை பார்க் செய்ய எடுத்துச் சென்றான்.

ஈஸ்வர் காரை ஹொட்டலுக்குள்ளே எடுத்துச் செல்லவில்லை. காம்பௌண்டுக்கு வெளியே சாலை ஓரமாக நிறுத்தினார். கண்ணாடிகளை ஏற்றிப் பூட்டி, இரண்டு பாக்கெட்டுக்களிலும் கைகளை நுழைத்துக்கொண்டு ஹோட்டலின் முகப்பை நோக்கி மெதுவாக நடந்தார்.

போட்டியில் புறப்படப்போவது போல வரிசை வரிசையாகக் கார்கள் நின்றிருந்தன. கண்ணாடிக் கதவுகள் தாண்டி மெத்தென்ற கம்பளத்தை மிதித்ததும் குளிர்வரவேற்றது.

குளிருக்காகவும், எங்கிருந்தாவது மதுமிதா தன்னை பார்த்துவிடக் கூடாதென்பதற்காகவும் தோளில் கிடந்த மப்ளரை தலையில் சுற்றி தாடையில் முடிச்சுப் போட்டுக் கொண்டார்.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டார்.

மதுமிதா இந்த ஹோட்டலுக்குள் எந்தப் பகுதிக்குள் சென்றிருப்பாள்?

சைவ உணவகம், அசைவ உணவகம், நீச்சல் குளம், ஹெல்த் சென்டர், பியூட்டி ஹால், டிஸ்கொதே ஹால், பார், மினி கான்ஃபெரன்ஸ் ஹால், பார்ட்டி ஹால் என்று எத்தனை பகுதிகள்.

அசைவ உணவகப் பகுதிக்கு வந்தார். உள்ளே நுழைந்து, அரையிருட்டில் கதவுக்கு அருகிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு வேறு மேஜைகளில் மதுமிதாவை தேடினார்.

அவள் அங்கு இல்லை.

அங்கிருந்தபடியே கண்ணாடிச் சுவர் வழியே நீச்சல் குளத்தைப் பார்க்க முடிந்தது. கண்களை அங்கே மேயவிட்டார். சிகரெட் புகையை ஆழமாக உள்வாங்கி வெளியேற்றினார்.

ஸ்டுவர்ட் வந்து வெல்வெட் துணியில் தைத்த மெனு புத்தகம் வைத்துக்காத்திருக்க.

"வெய்ட்டிங் எ ஃபிரெண்ட். ஆர்டர் யூ லேட்டர்" என்று சொல்லி அவனை அனுப்பினார்.

அவன் தலை மறைந்ததும் அவசரமாக வெளியே வந்து பார்பகுதியை நோக்கி மார்பிள் தரையில் நடந்தார்.

இந்த ஈஸ்வர் துர்க்காவின் கணவன் இருந்தபோதே துர்க்காவுக்கு அறிமுகமானவர்.

சென்னையில் மட்டுமே வெளிவந்த 'BIG SCREEN' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை பார்த்தவர். அதை நடத்தின சர்மா ஒரு காலத்தில் படம் எடுத்து மஞ்சள் நோட்டீஸ் கொடுத்தவர். அனுதாபத்தில் சினிமா உலகம் அவருக்கு ஆதரவு அளித்துப் பட விளம்பரங்களைக் கொடுத்தது.

அந்த விளம்பர வருமானத்திற்காக நடத்தப்பட்ட பத்திரிகை, பதினாறே பக்கங்கள். விளம்பரம் போக நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குத்தான் சினிமாச் செய்திகள், விமர்சனங்கள், பேட்டிகள் இருக்கும்.

சர்மாதான் பப்ளிஷர் கம் எடிட்டர். ஆனால் அவர் பேனாவைத் தொட்டதே இல்லை. எல்லாம் ஈஸ்வர்தான் பார்த்துக் கொண்டார்.

பத்திரிகைக்கென்று ஆபீஸ் எல்லாம் எதுவும் கிடையாது. சர்மா வீட்டின் மொட்டை மாடியில் ஒரு ஓரத்தில் கீற்றுக் கொட்டகைக்கு அடியில் ஒரு மேஜை, இரு நாற்காலிகள். அவ்வளவுதான் ஆபீஸ்.

ஈஸ்வர்தான் பேட்டிக்குப் போக வேண்டும். சினிமாச் செய்திகளுக்காக ஸ்ரூடியோக்களில் அலைய வேண்டும். பத்திரிகையாளர்களின் காட்சிகளுக்குப் போய் விமர்சனம் எழுத வேண்டும்.

தவிர சினிமா நிறுவன அலுவலகங்களுக்கு நாய் மாதிரி அலைந்து கெஞ்சிக் கூத்தாடி விளம்பரமும், மூன்று மாசம் கழித்து அதற்குப் பணமும் வசூலித்து வரவேண்டும். (அந்தப் படம் பிரமாதமாக ஓடியிருந்தால் விளம்பரத் தொகையில் பாதியாவது தேறும். படம் ஃப்ளாப் என்றால் ஒரு காபி கூட கிடைக்காது.)

மேலும் கம்போசிங்கிற்குக் கொடுத்த புரூஃப் திருத்தி, லே-அவுட் செய்து, அச்சகத்திற்குச் சென்று பேப்பர் வாங்கிக் கொடுத்து, அச்சான பிரதிகளை ஆட்டோவில் எடுத்து வந்து கடைகள் பெயர் எழுதி பார்சல் கட்டி, எடுத்துப்போய் போட்டு விற்காத பிரதிகளும், போன இதழுக்கான பணமும் வசூலித்து வந்து... பைசா சுத்தமாக கணக்கும் எழுதித் தரவேண்டும்.

இத்தனை வேலைகளுக்கும் சேர்த்து சர்மா அப்போது ஈஸ்வருக்குக் கொடுத்தது இருநூறு ரூபாய்.

ஆனால் புதிய நடிகைகளிடம் அவர்களின் புகைப்படங்களை வெளியிட காசு வாங்குவார். மோசமான படங்களைத் தூக்கி எழுத சிலரிடம் கவர் வாங்குவார் ஈஸ்வர்.

ஒரு பேட்டிக்காக துர்க்காவிடம் வந்தபோதுதான் முதல் அறிமுகம். இவர் போன சமயம் துர்க்காவின் பி.ஆர்.ஓ. செய்த ஒரு முட்டாள்தனத்தால் ஒரு மணி நேரத்தில் ஹைதராபாத்திற்குப் பறக்க வேண்டிய விமானத்தில் டிக்கெட் கிடைக்காமல், அவனை துர்க்கா கண்டபடி திட்டிக் கொண்டிருந்தாள்.

ஈஸ்வர் உடனே அங்கேயே ஃபோன் எடுத்து ஒரு பெரிய டிராவல்சின் பெரிய நபரைப் பிடித்துப் பேசி அந்த டிக்கெட்டை ஏற்பாடு செய்து கொடுத்ததற்கு துர்க்கா பத்து முறை நன்றி சொல்லிப் புறப்பட்டுப்போனாள்.

ஏர்போர்ட்டுக்குப் போகிற வழியிலேயே பேட்டி தருவதாக ஈஸ்வரையும் தன்னுடன் காரில் ஏற்றிக் கொண்டாள்.

ஐந்தே நிமிடத்தில் பேட்டி முடிந்து போக, ஈஸ்வர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று விசாரித்தாள்.

"தினம் உங்க பத்திரிகை ஆபீஸ்ல மூணு மணி நேர வேலை இருக்குன்னு சொல்றீங்க. நீங்க ஏன் எனக்கு செகரட்டரியா வேலை பார்க்கக்கூடாது. நல்லா இங்கிலீஷ் பேசறீங்க. சாமர்த்தியம் தெரியுது. இப்படி ஒருத்தரைத்தான் நான் தேடிக்கிட்டு இருக்கேன்" என்றாள் துர்க்கா.

மறுநாளே சர்மாவிடம் சொல்லிவிட்டு வந்து துர்க்காவிடம் சேர்ந்தார் ஈஸ்வர்.

அவளது பயண ஏற்பாடுகள், நிகழ்ச்சிகள், பேட்டிகள், கால்ஷீட் விவகாரங்கள், வங்கிக் கணக்குகள் என்று சகல விதமான காரியங்களையும் கவனிக்கத் துவங்கிய ஈஸ்வர் துர்க்காவின் மனதிலும் இடம் பிடித்து விட்டார்.

கணவனோடு கசப்பான அனுபவங்கள் ஏற்பட்ட நேரம் அது! கணவன் பாம்பேக்குச் சென்றுவிட... ஈஸ்வரை அவர் தங்கியிருந்த அறையைக் காலி செய்து விட்டு தன் பங்களாவிலேயே தங்கிக் கொள்ளச் செய்துவிட்டாள் துர்க்கா.

அவரை 'சித்தப்பா' என்றழைக்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு உத்தரவிட்டாள். துர்க்கா உச்சியிலிருந்தவரை ஈஸ்வரின் ராஜ்யம் கொடி கட்டிப்பறந்தது.

அவள் மார்க்கெட் விழுந்து.... மதுமிதா பெரியவளாகி, விபரங்கள் புரிந்து கேள்விகள் கேட்கத் துவங்க.... ஈஸ்வர் அடங்கிவிட்டார்.

மதுமிதா நடிகையான பிறகு, ஈஸ்வரை சுத்தமாக மதிப்பதில்லை. துர்க்காவும் அவரை ஒரு வேலைக்காரனைப் போல நடத்தினாலும், ஈஸ்வர் அதற்கெல்லாம் கவலைப்படுவதில்லை.

தாலி கட்டாத ஒரு கணவனாக, பெறாத இரண்டு பெண்களுக்கு அப்பாவாக, சம்பளம் இல்லாத வேலைக்காரனாக ஆனால் சகல வசதிகளும் அனுபவிக்கிற உரிமையோடு அந்த வீட்டில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஈஸ்வரின் உள் மனதிலும் சில எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன.

ஈஸ்வர் பாரில் மதுமிதாவைத் தேடிவிட்டு டிஸ்கோ ஹாலுக்குள் நுழைய.... தூரத்தில் ஒரு அரையிருட்டு மூலையில் ஒரு உயரமான இளைஞனுடன் நடனமாடிக் கொண்டிருந்த மதுமிதாவைப் பார்த்துவிட்டார் ஈஸ்வர். அவளோடு ஆடியவன், அவருக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



பட்டுக்கோட்டை பிரபாகர்

> **ஹிந்தி சந்திரலேகா 35 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டது என்று ஜெமினிகாரர்கள் கல்கத்தாவில் விளம்பரம் செய்தபோது, ஒரு வங்காளப் படத்திற்கான விளம்பரத்தில் 'தயாரிப்புச் செலவு 35 இலட்சம் என்று நாங்கள் மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் எங்கள் படம் 35 இலட்சம் ஜனங்களைக் கவரக்கூடியது' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.**
>
> *—'கலை' ஏப்ரல் 1949—இதழில்*

---

## அனுபவம் புதுமை புதிய பகுதி

**கவியரசு கண்ணதாசன் ஈடு இணையில்லாத கவிச் சுரங்கம். அவர் பக்கத்திலேயே இருந்த உதவியாளர் இராம. கண்ணப்பன். கவியரசு பற்றி அவர் எழுதிய சுவையான அனுபவங்கள் இவை.**

கவிஞர், கவியரசரான பிற்காலத்தில் 'கற்பூரம்' என்ற பெயரில் தயாராகிக் கொண்டிருந்த படத்திற்கு பாட்டெழுதச் சென்றார்.

பாடலுக்கான சூழ்நிலை மது அருந்துவதனால் உண்டாகும் தீமைகளை விளக்குவது.

"சரியாகத்தான் என்னை தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள்!" என்று சிலாகித்துக் கொண்டு பல்லவி சொன்னார்:

*"ஆண்டவனே நீயிருந்தால்*
*சொல்லு—சிலர்*
*அறிவை எல்லாம் கெடுக்கும்*
*தடா கள்ளு*
*மாண்டவனும், குடித்தவனும்*
*ஒன்று—சிலர்*
*மண்டையிலே ஏறலையே*
*இன்று!"*

இதைக் கேட்டுக்கொண்டிருந்த படத்தின் தயாரிப்பாளரும், நடிகருமான ராஜனுக்கு சந்தோஷம் பொங்கியது.

தொடர்ந்து இரண்டு சரணங்களைச் சொன்ன கவிஞர், பாட்டின் முத்திரை வரிகளாக மூன்றாவது சரணத்தைச் சொன்னார்:

*"நானும் குடித்திருக்கேன்*
*குடித்தாரைப்*
*பார்த்திருக்கேன்*
*நல்ல புத்தி வருவதில்லை முடிவிலே—ஒரு*
*நாய்கூட மதிப்பதில்லை*
*தெருவிலே!"*

எழுதி முடிந்ததும், ஒரு முறை பாடச் சொல்லி கேட்டு விட்டு வீட்டுக்கு புறப்பட்டார் கவிஞர்.

தொடர்ந்து வந்த ராஜன், "அண்ணே! வீட்டுக்குத்தானே போறீங்க.... இன்னும் ஒரு மணிநேரத்திலே பணத்தோட வருகிறேன்!" என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

சரியாக ஒரு மணிநேரத்தில் ராஜன் கையில் ஒரு உயர்ரக மது பாட்டிலோடு வந்தார்.

பகல் நேரம். கவிஞர் மது அருந்திக் கொண்டிருந்தார். ராஜன் அவர் முன்னால் பணத்தையும், மதுக் குப்பியையும் வைத்து விட்டு, எதிரிலிருந்த சேரில் அமர்ந்து கொண்டார்.

ராஜன் பாட்டை சிலாகித்து புகழ்ந்து கொண்டே இருந்தார். 'ம்...ம்...' என்று குழந்தை போல் 'உம்' கொட்டிக் கொண்டிருந்த கவிஞர், ஒரு கட்டத்தில், "அப்புறம் வேறென்ன? நேரமாச்சு," என்றார். அவரை போகச்சொல்லும் தொனியில்.

"அதில்ல அண்ணே, உங்களோட சேர்ந்து நானும் கொஞ்சம்..." என்று மதுக் குப்பியைக் காட்டி இழுத்தார் ராஜன்.

கவிஞருக்கு கோபம் வந்துவிட்டது.

"இந்தா, மரியாதை கெட்டுப் போகும்! யாரு என்னஙகற விவஸ்தை வேண்டாம்? முதல்ல. இந்த பாட்டிலை எடுத்துக்கிட்டு வெளியே போ!" என்று கூறி அவரை வெளியே அனுப்பிவிட்டார்.

புகழ் என்னும் போதைக்கு மயங்கினால், இகழ் என்னும் பள்ளத்தில் தள்ளப்படுவோம் என்பதை அவர் ஒரு பாடமாகவே கைக் கொண்டிருந்தார்.

இதுபோன்ற விஷயங்களில் எல்லாம் தன் பெயரைக் காப்பாற்றிக் கொள்வதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்.

காலையிலோ, மாலையிலோ, யார் யாரை சந்திக்க வேண்டும், எதை எழுதி முடிக்க வேண்டும், புதிதாக அடுத்த வேலை என்ன என்றெல்லாம் யோசித்துத் திட்டமிடுவார்.

மறுநாள் அவ்வாறே செயல்படுவார்.

மது அருந்திவிட்டு, எவரையும் சந்திக்கச் செல்லமாட்டார். யாருடைய வீட்டிற்கும் செல்ல மாட்டார்.

தானுண்டு, தன்போதையுண்டு என்றிருப்பாரே தவிர, எனக்குத் தெரிந்தவரை கவிஞர் தவறு செய்தார் என்றோ, தவறுதலாக நடந்து கொண்டாரென்றோ நான் கேள்விப் பட்டதுமில்லை, கண்ணால் கண்டதுமில்லை.

கவிஞர் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வரும்போதே, அவரது நடை உடை பாவனைகளில் இருந்து பார்வதி அம்மையார் புரிந்து கொண்டு விடுவார்.

## "நாய் கூட மதிப்பதில்லை தெருவிலே!"

கணவரோடு அதிகம் பேசமாட்டார். பேச ஆரம்பித்தால் அது வளரும்; பிறகு அது எங்கு போய் நிற்கும் என்பதைச் சொல்ல முடியாததாகையால் சீக்கிரம் உணவு பரிமாறி உறங்க வைப்பதில் கருத்தாக அவசரம் காட்டுவார்.

இப்படிச் சமயங்களில் தன் அன்பு மனையாளிடம் உரண்டை செய்வார் கவிஞர்.

"ஏன் அவசரப்படுகிறாய்? நான் சாப்பிட நேரமாகும். நீ வேண்டுமானால் போய்ச்சாப்பிடு" என்பார்.

"மத்தியானம் வைத்த கோழிக் குழம்பு இருக்கிறதா?" என்பார். அன்று கோழி சமைத்திருக்க மாட்டார்கள். மீன் சமைத்திருப்பார்கள்.

'சுண்டக் குழம்பு இருக்கிறதா?' என்று கேட்பார். மதியம்தான் அதைக் குப்பையில் கொட்டச் சொல்லியிருப்பார்.

இல்லாததை எல்லாம் வேண்டுமென்றே இருக்கிறதா என்று கேட்கும் கணவருக்கு பதில் கூறாது மவுனமாகவே இருப்பார்கள்.

"ஒரு எழவும் இல்லாமல் எப்படிச் சாப்பிடுவது? உருளைக்கிழங்கும், கத்தரிக்காயும் போட்டு கோஸ்மல்லி செய்து கொண்டா சீக்கிரம்," என்று சத்தம் போடுவார்.

திடீரென்று கட்டிலில் எழுந்து உட்காருவார். ஜன்னலில் ஏதாவது நிழல் தட்டுப்படும். தங்கள் நடவடிக்கைகளை யாரோ ஒளிந்திருந்து நோட்டமிடுகிறார்கள் என்ற சந்தேகம் வந்து விடும்.

"யாரது? யாரது?" என்று சத்தமிட்டபடி ஜன்னல் வழியாக பார்ப்பார். ஒன்றுமிருக்காது. பின் வேகமாக கதவைத் திறந்து கொண்டு வாசலுக்கு வந்து சுற்றும் முற்றும் பார்ப்பார். யாரும் இருக்க மாட்டார்கள்.



சிறிது நேரத்திற்கு பிறகு வீட்டிற்குள் வருவார்.

இந்தநாடகம் இரவு ஒரு மணிவரை, கவிஞர் மது அருந்திய நாட்களில் நடப்பது பார்வதி அம்மையாருக்கு பழகிப்போன ஒன்று. எனவே, பொறுமையாக இருந்து விடுவார்கள்.

ஒருநாள் இரவு தோளில் சட்டையை கழற்றிப் போட்டவாறு காரிலிருந்து இறங்கி, தள்ளாடி நடந்து வரும் கணவனைக் கண்டார் பார்வதி அம்மையார்.

அன்று, ஏதோவொரு மகிழ்ச்சியில் மது அருந்திவிட்டார் கவிஞர்.

அதிகமான போதையினால் சாப்பிடாமல் வந்ததும், கட்டிலில் படுத்துவிட்ட கணவனைக் கண்டு கண் கலங்கி நின்றார் பார்வதி அம்மையார்.

மறுநாள் காலையில் கவிஞர் எழுந்ததும், இரவு அவர் தள்ளாடி வந்ததையும், தடுமாறிப் படுத்ததையும் இரவெல்லாம் தான் கண்விழித்துக் கலங்கி நின்றதையும் எடுத்துக்கூறி,

"நீங்கள் எவ்வளவு சம்பாதித்தும் என்ன,என்னை நிம்மதி இழக்கச் செய்து விடுகிறீர்களே! இது உங்களுக்குத் தெரியாதா? இது தேவைதானா?" என்று கேட்டுவிட்டார் பார்வதி அம்மையார்.

மனதுக்குள் பதறிப் போய்விட்டார் கவிஞர். 'தான் வேடிக்கை என்று நினைத்தது மனைவிக்கு எவ்வளவு வேதனையைத் தந்திருக்கிறது,' என்று நினைத்துப் பார்த்தபோது கவிஞருக்கே வெட்கமாக போய்விட்டது.

சில நாட்களுக்குப் பிறகு 'அன்பு எங்கே?' என்ற படத்திற்கு பாட்டெழுத கவிஞர் அழைத்துச் செல்லப்பட்டார்.

பாட்டுக்கான சூழல் சொல்லப் பட்டது.

தன் மனையாள், தனது எந்த நிலை கண்டு வேதனைப்பட்டு வருந்தினாளோ அதே சூழ்நிலை 'அன்பு எங்கே' கதையில் விவரிக்கப்பட்டிருந்தது.

கண்ணீர் வடித்த மனைவியின் முகம் கவிஞருக்கு தரிசனமாகிறது. சுலபமாகப் பல்லவி பிறந்து பாட்டு வளர்ந்தது.

அது:

***"எத்தனை கோடி பணமிருந்தாலும்***
***நிம்மதி வேண்டும் வீட்டிலே!***
***நிம்மதி வேண்டும் வீட்டிலே!***
***உத்தமமான மனிதர்களைத்தான்***
***உலகம் புகழுது ஏட்டிலே***
***—இந்த***
***உலகம் புகழுது ஏட்டிலே!***
***அர்த்த ராத்திரி பனிரெண்டு மணிக்கு***
***ஆடிக்கொண்டே நுழைவதை***
***அகப்பட்டதெல்லாம் தூக்கி எறிந்து***
***ஆர்ப்பாட்டங்கள் செய்வதை***
***அடுத்த நாளில் நினைத்துப் பார்த்தால்***
***வெட்கம் வருவது இல்லையா...***
***சின்னையா நீ சொல்லையா!"***

# அவள் வருவாளா?

**ஆத்மராஜா றூத் சந்திரிக்கா**

**கனவுகளைத் தேக்கித் துலங்கும் அவளது விழிகளும். புன்சிரிப்பும் தொலைந்து போய் விட்டன**



ஒப்பும் மந்தாரமுமான இளங் காலைப் பொழுது. அவளது மனதைப் போலவே இப்பிரதேசத்தின் இன்றைய வானிலையும். சாவித்ரீ என்னெதிரே ஒரு தொன் சோகத்தோடு அமர்ந்திருந்தாள். இந்த மகா பெரிய உலகிலே தான் மட்டும் தனித்து விடப்பட்டதான உணர்வு அவளுள்.

எங்குமே கும்மிருட்டாய் வழியே புலப்படாத தடுமாற்றமும் தவிப்பும், தான் நினைத்து வாழ்ந்ததென்ன? நேர்ந்து விட்டிருப்பதென்ன? சாவித்ரீ உள்ளத்தாலும் உடலாலும் சோர்ந்து போய் கட்டில் விளிம்பில் சட்டென அமர்ந்தாள். இருவரிடையேயும் மௌன இறுக்கம். யார் முதலில் பேசுவது என்கின்ற தடுமாற்றம்?

கனவுகளைத் தேக்கித் துலங்கும் அவளது விழிகளும், புன்சிரிப்பும் தொலைந்து போய் விட்டதற்கான காரணத்தை என்னால் உணரமுடியவில்லை. சாவீத்ரீ-இந்த சமுதாயச் சாபக்கேடுகளில் ஒருத்தி. அவள்-அவளது குடும்பம் என்னும் விருட்சத்தின் ஆணிவேர். கட்டிளமைப்பருவத்திலே தன் குடும்பப் பொருளாதார நிறைவுக்காக உழைக்கப்புறப்பட்ட பெண்.

ஒரு சங்கீத ஆசிரியையாய் அவள் நியமனம் பெற்று, ஒரு தசாப்தம் ஓடிவிட்டிருக்கிறது. இந்த ஒரு தசாப்தத்திலே அவளின் இளமையும் எழிலும் எங்கோ தொலைந்து போய்... ஒரு முதிர்ச்சியும் விரக்தியும் உருவாகிவிட்டிருக்கின்றன.

பாடசாலை, பாடசாலைவிட்ட பின் பிரத்தியேக வகுப்புக்கள் என்று அவளது ஒவ்வற்ற வாழ்வும், சோகம் கலந்த புன்னகையும் என்னால் ஜீரணித்துக்கொள்ள முடியாத அம்சங்கள்தான்.

இளமையின் விளிம்பிலே நின்ற போது- இயல்பாக உருவாகி, நிறைவேறாது போன அவளது காதல் வாழ்வு, சுமைகளற்ற ஒரு பறவையாய் வாழ வேண்டிய வயதில் திணிக்கப்பட்ட கடமைகள், பொறுப புணர்வுகள், எதிர்பார்ப்பற்ற எதிர் காலம்... இப்படியாக வேதனைகளே வாழ்வின் விழுமியங்க ளாகிப் போன சாவித்ரீ ரீச்சர் தலைகவிழ்ந்து மௌனமாய் இருக்கிறாள்.

எனக்கும் அவளுக்குமிடையே வயது வேறுபாடும், ஆசிரியை-மாணவி உறவும் இருப்பதாக இருவருமே காட்டிக்கொண்டதில்லை.

"சந்ரீ நான் இன்றைக்கு பார்த்திபனைத் தற்செயலாகக் கண்டனான்" சிலீரிட்டுத் தாக்கிய உணர்வோடு நிமிர்ந்தேன்.

சாவீத்ரீ விழிகள் கலங்க, உதடுகள் துடிக்க எதையோ சொல்லத் தயங்கினாள். "ஐந்து வருஷத்துக்கப்புறம் இப்பிடியொரு நிர்ப்பந்தமான சந்திப்பு ஏற்படும்னு நான் கனவிலயும் நினைக்கல்ல."

"ஓ..."

"பார்த்திபனும் இன்னம் தனியாளாய்த் தான் இருக்கிறான்"

"ஓ... அப்பிடியா"

"கம்பஸால வெளிக்கிட்டப் பிறகு இன்டன்ஸிப் பீரியட்டை அங்கு முடிச்சுப் போட்டு, இப்ப பிறைவேற் நேஸிங்ஹோம் ஒன்று திறந்திருக்கிறான்'

"இதெல்லாம் எப்பிடித் தெரியும்- பார்த்திபன் சொன்னதோ சாவித்ரீ"

"அதுதான் சொல்றனே இப்பிடியொரு சந்திப்பு, இது அதிஷ்டவசமானதோ துரதிஷ்டவசமானதோ எண்டு தீர்மானிக்க முடியல்ல சந்ரீ"

"ஏன்?"

"பார்த்திபன் இன்னும் இறந்த காலத்திலையிருந்து மீளல்ல."

"அப்பிடியெண்டால்?" நான் ஆச்சரியமானேன்.

"இப்பவாவது உன்னைப் பற்றி நீ சிந்திக்கத் தொடங்கியிருக்கிறாயா சாவித்ரீ. இந்தச் சந்திப்புக்குப் பிறகாவது சிந்திக்க முயற்சிப்பாயா சாவித்ரீ? என்று கேட்டு ஒரு வாரகாலம் அவகாசம் தந்து விட்டிருக்கிறான்" என்றாள் சாவித்ரீ ரீச்சர்.

"ஓகோ- றாட் கிளியர்- ஓல் தி பெஸ்ட் மை டியர் ரீச்சர்" என்றேன். "கிண்டலா பண்ற?" என்றாள்.

"நோ யதார்த்தம்!"

"சாத்தியமில்லை சந்ரீ. இந்த விடுபட்ட உறவு மீண்டும் வாழ்வாகப் பரிணமிக்கிறது சிம்மசொப்பனம்"

"ஏன் நீதான் இப்போ ரிலீஸாகிற்றியே- இன்னுமேன் கண்ணம்மா தயக்கம்?" என்றேன்.

"எனக்கு எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிறதுக்கு முடியல்ல" என்றாள் தன் விரல்களைப் பார்த்துக்கொண்டு.

"ஏன் அவ்வளவு வயசு போய்ட்டதா எண்ணமா- முப்பத்திரெண்டு அவ்வளவு முதிர்வயதா சே பைத்தியம்"

"அதில்ல-எனக்கு வாழப்பிடிக்கல்ல!"

"அப்போ செத்துரு!" சரேலென நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தெரிந்தது கோபமா, வேதனையா, அழுகையா, இயலாமையா என்று புரிந்து கொள்ள முடியாது ஒரு கணம் தடுமாறிப் போனேன். குற்ற உணர்வோடு தலை கவிழ்ந்தேன்.

என் முகவாய் நிமிர்த்தி என்னை ஆழமாய் ஒரு பார்வைப் பார்த்தாள். "வாழப்பிடிக் காட்டில் செத்துப் போயிடென்று சொன்னியே- நான் செத்துப் போய்ட்டா தாங்காமப் பதறுவாயெண்டுதான் எண்ணிப் பயந்திட்டிருந்தேன் சந்ரீ- அந்தப் பயம் இப்போ எனக்கில்ல- நீ பக்குவப்பட்டு ஜீரணிச்சிடு வாய்"

"எதை?"

"என் மரணத்தை!"

விறுவிறென்று அலுமாரியில் இருந்து வெள்ளைத் துணிகள், தலையணையுறை படுக்கை விரிப்பு, பிளாஸ்க் எல்லாம் எடுத்து ஒரு பெரிய சூட்கேஸினுள் திணித்தாள்.

என்ன நிகழ்கிறது எனப் புரியாமலே பார்த்துக் கொண்டிருந்தேன். சட்டென என்னருகே வந்து என் தோள்களைப் பற்றிச் சொன்னாள். "நாளை காலைல கொழும்புக்கு போகணும். எனக்கு முன்றாவது ஒப்பரேஷன்-" என்றவளிடம் அதிர்ச்சியுடன் "எ...ன்...ன...து"

"மை டியர் சந்ரீ தாங்கிக்கோ- இது இப்போ சாதாரணம்- வெறும் வூம் கன்ஸர் தான் - நான் இப்போ தைரியமாயிருக்கேன்' விதிர்விதித்தேன்.

"கடமைகளெல்லாம் முடிஞ்சுது என்கிற மனநிறைவு- நல்லவேளை தனியாளாக இருக்கிறேனே என்கிற திருப்தி, வாழ்ந்தது போதும்கிற நிம்மதி- இறுதியா பார்த்திபனைச் சந்திச்சிட்டேன்கிற சந்தோஷம்- நீயும் இழப்பு வந்தாலும் தாங்கிக் கொள்வேங்கிற திருப்தி!"

செய்வதறியாது திகைத்து, விழிநீர் சொரிய நின்றேன். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது போல, ஒரு ஒப்பற்ற ஓவியம் கனலிலிட்டு கரியாகி அழிவது போல... சாவித்ரீயின் வாழ்வும். என்னோடு எத்தனை அன்பாய் நடந்தாளே, ஆதரவாய் வாழ்ந்தாளே- இவள் மீண்டு(ம்) வருவாளா- இவளை நான் மீண்டும் சந்திப்பேனா? அல்லது...???

# கருங்கூந்தலும் கடுக்கனும்

**வீரமுனை வானவர்கோன்**



சிறந்த விவசாயிக்கான பரிசாக ஒரு இலட்ச ரூபா பணத்தினை வழங்க வங்கியொன்று முன்வந்தது, விவசாயத்தை ஊக்குவித்து, அதில் தன்நிறைவு காண வேண்டுமென்பதில் அவ்வங்கி திடமாக உழைத்தது. இதற்காக மாவட்டந்தோறும் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, அதில் முதற்தரமான விவசாயிக்கு "விவசாய மன்னன்" பட்டமும், ஒரு வார காலத்துக்கு கொழும்பு உல்லாச விடுதியில் தங்க வசதியினையும் அந்நிறுவனம் செய்து கொடுத்திருந்தது.

ஒரு இலட்ச ரூபா பணமும், விவசாய மன்னன் பட்டமும், ஒரு வார கால உல்லாச விடுதியில் தங்கும் அதிஷ்டமும் கிராமத்து வாசனையை முகர்ந்த கந்தசாமிக்கே கிடைத்திருந்தது. பணமும் பட்டமும் பெரிதாக கந்தசாமிக்குத் தெரியவில்லை. மாநகரில் சிறப்பாக ஒருவார காலத்தை, அதுவும் தாஜ்சமுத்ராவில்களிக்கப் போகின்றோமே எனும் சந்தோசமே அவரிடம் மேலோங்கி நின்றது.

நிறுவனத்தாரின் அழைப்பை ஏற்று கொழும்பு வந்து, ஹொட்டல் தாஜ்சமுத்ராவில் தங்கினார் கந்தசாமி. அங்கும் அவருக்கு அமோக வரவேற்பு. பாடசாலைக் கற்றலை சரிவரப் புசித்தமையினால் ஆங்கிலத்தில் தடங்கலன்றி பழக முடிந்தது, என்றாலும் கொழும்பு நாகரிகம் தெரியாத ஒன்றாகவே 'விவசாய மன்னன்' கந்தசாமிக்குத் தென்பட்டது. கந்தசாமியின் கண்களுக்கு தாஜ் சமுத்ராவில் இருந்த அனைவரும் விசித்திர மானவர்களாகவே தென்பட்டனர்.

விடுதியின் முற்றத்தில் இருந்த வண்ணம் இயற்கையின் இரசனையை சுவைக்கலானார் கந்தசாமி. அவ்வேளையில் சூ... கழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால், அருகில் இருந்த சலகூடத்தை நாடினார்,

அங்கேயுள்ள அறிவிப்புப் பலகையில் 'பெண்கள்' எனக் காட்டப்பட்டிருந்தது, மறுபக்க வாசலில் எந்தப் பிரிவினருக்கானது என்று எந்த அறிவித்தலும் காணப்படவில்லை, கந்தசாமியின் நிலை தர்மசங்கடமாகிவிட்டது. 'இதுவும் பெண்கள் பகுதியாக இருக்குமோ...' என்றாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். பாவம் அங்கேயும் பெண்கள் கூட்டம்.

நீளமாக வளர்ந்த கூந்தல், சிவப்பு நிறக் கவுண், காதிலே தோடு... கந்தசாமிக்கு அதிர்ச்சி, மன்னிப்புக் கோரிவிட்டு பின் வாங்கினார். வந்த வழியே சென்று வாயில் காவலனிடம், "ஆண்களுக்கான சலகூடம் எங்குள்ளது" எனக் கேட்டார், காவலன் காட்டிய திசை, முன்னர் சென்று திரும்பிய சலகூடத்தையே காட்டியது. கௌரவப் பிரச்சனை காரணமாக எதுவும் திருப்பிப் பேச முடியாமல் அத் திக்கை நோக்கி நடந்தார் கந்தசாமி.

சலகூட வாசலில் சிவத்த அங்கியணிந்த குழுவினர் இசைக் கருவிகளை கையில் ஏந்திய வண்ணம் கூடி நின்றனர். அவர்களுக்கு அருகில் சென்று, சலகூட வாயிலை எட்டும்போதுதான் கந்தசாமிக்குப் புரிந்தது இவர்கள் பெண்களல்ல கூந்தல் வளர்த்த, கடுக்கன் பூண்ட நாகரிகமான ஆண்கள் என்பது, பாவம் நாகரிகம்.

# வசதி

**நிந்தவூர் எம். ஹிதாயத்**



அந்த பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த ரிஸானாவிற்கு கால் வலித்தது. கால் மணி நேரமாக பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டு நின்றவளுக்கு பஸ்வரத் தாமதமானது எரிச்சலை மூட்டியது. நடந்தே போய் விடலாமென்று வெளியே வந்தாள். தூரத்தே பஸ் வருவது தெரிந்தது. கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே பஸ்ஸை நெருங்கியபோது, ஒரு வெள்ளை நிற மாருதி அருகில் வந்து நின்றது.

"ஹாய் ரிஸானா! எங்கே இந்தப் பக்கம்?"

அவளுடைய தோழி நஸீஹா உள்ளே இருந்து குரல் கொடுத்தாள்.

"சும்மா 'சொபிங்' போகலாமென்று வந்தேன். நீ எங்கே இந்தப் பக்கம்?"

"என் ப்ரண்ட் ஒருத்திக்கு இன்னிக்கு பேர்த்டே. அதான்... போய் வரலாமென்று வந்தேன். அது சரி... நீ எங்கே போகப் போறே?"

நஸீஹா ஆவலோடு கேட்டாள்.

"வீட்டுக்குத்தான்!"

"அப்படியா? அப்படீன்னா என் கூடவே வரலாமே! ட்ராப் பண்ணி விடுகிறேன்."

ரிஸானா ஏறிக் கொண்டாள். கார் நகர்ந்தது.

"ரிஸான்ா! நான் அமெரிக்காவுக்குப் போயிருந்ததால் உன் கல்யாணத்திற்குக் கூட என்னால வர முடியல்ல. இங்கே வந்தாவது வரலாமென்று பார்த்தால், என் கணவருக்கு நேரமில்லை. அது சரி... உன் கணவர் என்ன பண்ணிக் கிட்டிருக்கிறார்?"

"சாதாரண வேலைதான்!"-ரிஸானா அமைதியாகச் சொன்னாள்.

"என்னால் நம்பவே முடியல்லியே! உன் அழகிற்கும், அந்தஸ்த்திற்கும் என்னைப் போல பெரிய கோடீஸ்வரர் ஒருவரைக் கல்யாணம் செய்திருப்பாய் என்றுதான் நினைத்தேன். இப்படி ஒருவரைக் கல்யாணம் செய்திருப்பாய் என்று கனவில்கூட நினைக்கல்ல. என்ன செய்வது? எல்லோருக்குமே அந்தப் பாக்கியம் கிடைத்து விடுமா? நீ கொடுத்து வைக்கல்ல அவ்வளவுதான்!"

"இல்லே நஸீஹா! நானாக யோசிச்சுத்தான் அவரைக் கல்யாணம் செய்துக் கிறதிற்குச் சம்மதித்தேன். நான் வசதியோடு வாழ்வதற்கு ஆசைப்பட்டிருந்தேன் என்றால், எத்தனையோ கோடீஸ்வரர்களுக்கு மனைவியாகியிருப்பேன். நான் சுயநலக்காரியாக வாழ விரும்பல்ல. நான் என்னோட எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டுதான் இப்படியொரு முடிவை எடுத்தேன். என் கணவர் வசதிக்காரராக, பண்பாடுள்ளவராக இருந்தால்தான் தன்னோட பிள்ளைகள் மீதும் அக்கறையுள்ளவராக இருப்பார். தன்னைப்போலவே தன் பிள்ளைகளும் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுவார். அவர்களையும் பண்பாடுள்ளவர்களாக வளர்ப்பதற்கு முயற்சி செய்வார். அப்போதுதான் அந்தப் பிள்ளைகளையும் பெற்றோருக்குப் பெயர் சொல்லும் பிள்ளைகளாக வளர்த்து ஆளாக்க முடியும். அதனால்தான் இப்படியொரு முடிவை எடுத்தேன்."

"வாழ்க்கையில் நீ ரொம்பக் கஷ்டப் படுகிறாய் என நினைக்கிறேன்." நஸீஹா கிண்டலாகக் கேட்டாள்.

"அப்படியொன்றுமில்லை. நாங்க எப்போவுமே சந்தோசமாகத்தான் இருக்கிறோம். போதுமென்ற மனம் இருக்கும் போது எதற்காகக் கஷ்டப்படவேண்டும்?"

ரிஸானா அழுத்தமாகச் சொன்னாள்.

"உன் பிள்ளைகள் எந்த ஸ்கூல்ல படிக்கிறாங்க?"

"சாதாரண ஸ்கூல்லதான்!"

"என் பிள்ளைகள் பெரிய பெரிய ஸ்கூல்ல படிக்கிறாங்க. தெரியுமா?"

"அப்படியா? ரொம்ப சந்தோசம்!"

"நீயும் வசதிக்காரர் ஒருவரைக் கல்யாணம் செய்திருந்தால் உன் ஆசையும் நிறைவேறாப் போல பெரிய ஸ்கூல்ல படிப்பித்திருக்கலாம்."

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரிஸானாவின் வீடு வந்தது.

காரிலிருந்து இறங்கினாள் ரிஸானா.

"இதுதான் எங்க வீடு. உள்ளே வாயேன். ஒரு நிமிஷம் இருந்துட்டுப் போகலாம்."

"இல்லே ரிஸானா. எனக்கு நேரமாயிட்டுது. இன்னொரு நாளைக்கு என் கணவரோடக் கட்டாயம் வருகிறேன்."

நஸீஹா காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தபோது, அவள் கணவர் வெளியே செல்வதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

"எங்கே போகப் போறீங்க?"- நஸீஹா அவரைக் கேட்டாள்.

"இன்றைக்கு எனக்கொரு முக்கியமான பிஸ்னஸ் ப்ரோக்கிராம் இருக்குது. நான் போகாவிட்டால் இரண்டு கோடி ரூபாய் வருமானத்தை நம்ம கம்பனி இழக்க வேண்டி வரும் அதான் புறப்பட்டுக்கிட்டிருக்கேன்."

"அப்போ...நம்ம பையனோட ஸ்கூல்ல பேரண்ஸ் மீட்டிங் இருக்கிறதாய்ச் சொன்னானே போகல்லையா?"

"அங்கெல்லாம் போக முடியாது நஸீஹா! பையன் வந்தால் சொல்லிடு!"

கூறிவிட்டுக் காரில் ஏறிப் புறப்பட்டார். கார் நகர்ந்ததும் உள்ளே வந்தாள். டெலிஃபோன் மணி ஒலித்தது. ரிஸீவரைக் கையில் எடுத்தாள்.

"ஹலோ! நான் மிஸிஸ் அஷ்ரப் பேசுறேன்."

"மெடம்! உங்க பையன் நண்பர்களோட சேர்ந்து போதை மாத்திரை சாப்பிட்டதால ரொம்ப ஆபத்தான நிலையில ஹொஸ்பிடல்ல அட்மிட் பண்ணப்பட்டிருக்கிறார். உடனே வந்து பாருங்க!"

டெலிஃபோன் குரலைக் கேட்டதும் நஸீஹாவிற்குத் தலையைச் சுற்றுவது போலிருந்தது. தலையில் கைவைத்தவாறே கீழே சரிந்தாள்.

# அந்த "ரவுண்டப்"பில்...!

**பஹீரா முஹைதீன்**

"உங்கள் பிரதேசம் பொலிசாராலும் பாதுகாப்புப் படையினராலும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. எனவே வயது முதிர்ந்தோர் ஒருவர் வீட்டிலிருக்க, ஏனையோர் தங்கள் அடையாள அட்டைகளுடன் அருகிலுள்ள 'வாட்டர்டேங்' மைதானத்துக்கு செல்லுமாறு கேட்கப்படுகிறார்கள்."

ஜீப்வண்டியில் ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினர் சொல்லிக் கொண்டு போனார்கள். அந்தப் பிரதேசம் முழுவதும் ஒலிக்கும் படியாக;



காலை நேரம். தங்கள் அலுவல்களுக்காக வெளியில் செல்ல இருந்தவர்களும், வேலைகளுக்கு புறப்படத் தயாராய் இருந்தவர்களும் ஒரு கணம் ஸ்தம்பித்து நிற்க.. சூழ்நிலை அவசரமாகியது.

"டேய் ரவுண்டப்டா..." ரவிக்குமார் தன் அடையாள அட்டையை கையிலெடுத்த படி பாலாவைப் பார்த்தான்.

பாலா அலுத்துக் கொண்டான். போச் சுடா... அடிக்கடி இந்த ரவுண்டப்.. சொல்லிக் கொண்டிருக்கையில்; ஆமிபஸ் வந்து வீட்டின் முன்னால் நின்றது. அதைத் தொடர்ந்து இராணுவ வாகனங்களில் துப்பாக்கிகள் சகிதம் வீதியில் வந்து இறங்கிய இராணுவத்தினர், குழுக்களாகப் பிரிந்து வீடு வீடாக சோதனை நடத்த ஆயத்தமாகினர்.

பிரதேசம் அமைதியானது... தெரு நாய்கள் மட்டும் படையினரைக் கண்டு குரைக்கத் தொடங்கின. படையினரில் ஒரு பகுதியினர் மைதானத்திலும், மறு பகுதியினர் வீடுகளிலும் சோதனைகளை ஆரம்பித்தனர். மைதானத்தில் பஸ், ஜீப் சகிதம் சுற்றியுள்ள இராணுவத்தினர் அங்கு நின்றவர்களை அடையாள அட்டைகளைப் பார்த்து, விசா ரித்து தங்கள் சோதனைகளைத் தொடர்ந்தபோது....

"பெயரென்ன? (சிங்களத்தில் கேட்கப் பட்டது)

"ரவிக்குமார்."

"இது... என்ன.. நீ மட்டக்களப்பு.. இங்கே திருகோணமலையில் உனக்கு என்ன வேலை?"

"சேர்.. நான் மட்டக்களப்பில்தான் வசிக்கிறேன். இங்கு மாமி வீட்டில் கல்யாணத்துக்காக ஒரு கிழமை தங்கிவிட்டுப் போகத்தான் இங்கு வந்தேன்."

ரவிக்குமார் அடக்கமாக பதில் சொன்னான்.

"மட்டக்களப்பில் என்ன செய்கிறாய்"?

"அச்சகத்தில் வேலை செய்கிறேன்"

"சரி ஜீப்பில் ஏறு..." அவனுடன் சேர்த்து ஐந்து இளவயதினர் ஜீப்பில் ஏற்றப்பட்டு, முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஒவ்வொருவரும் தனித்தனி யாக விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

ரவிக்குமார் விசாரணைக்காக அழைக்கப்பட்டான்.

"நீ... இங்கு வந்திருப்பதாக எங்களுக்கு உடனே வந்து அறிவிக்கவில்லை; இந்த கார்ட்டில் உன் பெயர் இல்லை. நீ புலிகளின் உளவுப் பிரிவில் இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது!!"

"சேர்... நான்... வந்து..."

ஏதோ சொல்ல வாயெடுத்த அவனது அடிவயிற்றில் பலமான அடிகள் வீழ்ந்தன. துப்பாக்கிப் பிடி அவன்மேல் சுழன்றது. பூட்ஸ் கால்களால் உதைகள். கன்னம் வீங்கியது.

இராணுவத்தினருக்கு அவன் மேலிருந்த சந்தேகம் தீரவில்லை. உறவினர்கள் யாரோ பெரியவரின் கால்களைப் பிடித்து கெஞ்சி மன்றாடி.. அவன் ஒரு குற்றமுமற்றவன் என்று நிரூபிக்கும்வரை அந்த மூன்று நாட்களும் முகாம் சிறை.

மூன்று நாட்களின் பின்னர் வீடு வந்து சேர்ந்தான். காரணமின்றி கிடைத்த தண்டனையின் வேதனை தீரவில்லை. உடலெங்கும் ரணமாக... ஆத்திரம் ஒரு புறம், அவமானம் ஒரு புறம். அவன் விதியை நொந்தான். தலை சுற்றியது. அப்படியே வெறும் தரையில் படுத்துவிட்டான். மாமி வெந்நீர் ஒத்தடம் கொடுத்தாள். உடம்பின் வேதனை சற்று குறைவதுபோல் இருந்தது. உள்ளம்... அது இன்னும் எரிந்து கொண்டிருந்தது.

# இலக்கிய நயம்

# அவர் வருவாரா?



அழகிதான்-அழகிதான்
சொப்பன சுந்தரிதான்!
பழகு தமிழ் போல் இனிமை
உலவும் தென்றல்போல் குளிர்மை!

நாடாளும் மன்னன் மகள்
நாட்டியத்தில் பெரிய புகழ்!
மணியரசி என்றழைப்பர்
கனியிதழால் புன்னகைப்பாள்!

என்ன குறை அவளுக்கு?
என்போர்-அவள்
உள்ளக் குறை அறிவாரோ?

கிளி தோற்கும்
தன் குரலால்
கிளியோடு பேசிடுவாள்!

வியப்போடு
அவள் உதடுகளை
கிளி நோக்கும்!

'கொய்யாக்கனி
இவள் உதட்டில்
வந்ததெப்படி?'

'கொத்தலாமோ?'
என நினைக்கும்!

வில் என வளைந்த
புருவத்தில் நின்று
குறிபார்க்கும் இரண்டு
விழி அம்புகள்!
பாய்ந்துவிட்டால்
என்னாகும்?

அச்சத்தில் கிளி
கொத்தும் ஆசையை
துறக்கும்!
சுவைக்கும் ஆசையை
மறக்கும்!

விஷம் பூசிய அம்பும்
மை தீட்டிய விழியும்
கொல்லும், கொல்லும்
வெல்லும், வெல்லும்!

ஆடவரே அஞ்சும்போது
பாவம் கிளி
என்ன செய்யும்?

கிளியின் ஆசையை
அவள் அறியாள்.
கொஞ்சிக் கொஞ்சி
பேசிடுவாள்!

"கிளியே! கிளியே!
களிப்பில்லையே
மனதில் களிப்பில்லையே!"

தோழியாய் கிளியை
நினைத்திடுவாள்!
துயரங்கள் பகிர்ந்து
உரைத்திடுவாள்!

"தோட்டத்தில் கண்டேனடி
அடி கிளியே
தோட்டத்தில் கண்டேனடி!

வீரர் கூட்டத்தில் கண்டவரை
நேரில் தோட்டத்தில் கண்டேனடி!
ஒளிமிகுந்த விழிகளும்
துளியும் அஞ்சா நோக்கும்
கொண்டவரைக் கண்டேனடி!"

கூறும்போதே
மனதில் காட்சி விரிந்தது.

தோட்டத்து தென்றல்
தேகம் தழுவ
தோட்டத்து பூவுக்குள் பூவாக
மணியரசி நின்றிருந்தாள்!

காற்று வாங்க
தளபதி வந்தான்!
மணியரசியைக் கண்டவன்
"நீங்களா?" என்றான்!

"நானேதான்-ஏன்
காண விருப்பம் இல்லையா?"
குரலால் கொஞ்சினாள்!

புதர் மீசைக்குள்
தளபதி சிரித்தான்!

"மன்னன் மகள் நீங்கள்
காணமுடிந்தது பாக்கியம்"

"நீங்கள் என்பது பன்மை
என்னை ஒருமையிலேயே
நீ என்று அழைக்கலாம்
நீங்கள்!"

தளபதி புருவம் உயர்த்தி
புதிராய் நோக்கினான்.

"மன்னன் மகளிடம்
மரியாதைக் குறைவு!
வேந்தனின் மகளே
விளையாடுகிறீர்களா?"

"உங்களோடு
விளையாட ஆசைதான்!
வேந்தனின் மகள்
வீரனை விரும்புகிறாள்!"

வெட்கத்தைவிட்டு
சொல்லிவிட்டாள் மணியரசி.

இடிவந்து
இலக்குத் தவறாமல்
தலையில் வீழ்ந்துவிட்டதா?

திகைத்துப்போனான்
வீரத் தளபதி!

"ஏற்றத் தாழ்வு
எதுவும் இல்லை!
நாடாளும் மன்னன்
என் தந்தை!

நாட்டைக் காக்கும்
தளபதி நீங்கள்!"

நெருங்கி நின்றாள்
கூந்தல் மலர்கள்
ஏந்திய வாசனை
தளபதியை தழுவியது

குத்தி நின்ற
இரு கணைகள்
தளபதியின்
புத்தியை மயக்கப் பார்த்தன!

கைக் கெட்டும் கனி
கை நீட்ட ஆளில்லை
படரத்துடிக்கும் கொடி
படரவிட மரமில்லை
சூடவரும் பூமாலை
சூடத்தான் தோளில்லை!

தளபதி பதில் சொல்லாமல்
விறு விறு என நடந்தான்!

அலட்சிய நடை
அது என்றாலும்
அவனை அடைவதே
இலட்சியம் என
மணியரசி முடிவு செய்தாள்!

மணியரசிக்கு
மாலை சூட்ட
மன்னர் குலத்திலா
ஆளில்லை?

ஆளிருந்தார்கள்-ஆயிரமாய்
ஆளிருந்தார்கள்!

இலைமறைக் காய்க்கே
மதிப்பு அதிகம்!
எட்டாத கனிக்கே
மதிப்பு அதிகம்!

மறுக்க மறுக்கத்தான்
விருப்பம் வரும்!
தடுக்கத் தடுக்கத்தான்
மோகம் வரும்!

தளபதியின் மறுப்பால்
காதல் நெருப்பானது!
தினம் தினம்
தீயென வளர்ந்தது!

தேகம் நூலாச்சு
மாதம் பலவாச்சு
காதல் வெல்லாமல்
யோகம் தீராது!

காதல் தவம் செய்தாள்
கனவில் வரம் கேட்டாள்

கிளிக்கு முன்னாலும்
தன் மனதை
திறந்து வாசித்தாள்!

"மன்னன் மகள் என்பர்
மாபெரும் அழகி என்பர்
நிலவு முகம் என்பர்
அழகு முறுவல் என்பர்
அறிவு பெரிது என்பர்
கலையின் ஊற்று என்பர்

எப்படித்தான் என்னை
எவர் புகழ்ந்தும் என்னபயன்?



**தருவது ரசிகன்**

காதல் கொண்ட வீரமகன்
கடும் விருப்பம் கொண்டு
கைப்பிடிக்க வருவாரா?
கையணைக்க வருவாரா?
காதல் மன்னன் வராவிட்டால்
யார் புகழ்ந்து என்ன பயன்?"

உலகத்தாரால் விரும்பப்பட்டும்-தன்
உள்ளத்தாரான காதலரால்
விரும்பப்படாத காதலியின்
பெரும் கவலையை கூறும்
திருக்குறள் பாடல் இதோ:

**"வீழப் படுவார் கெழீ**
**-இயிலர் தாம் வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்"**

குறள்-1194 அதிகாரம்-120

## ஸ்போர்ட்ஸ்

## முதலிடத்தில் கேரி

பெப்ஸி சர்வதேச கிரிக்கெட் பேட்டிங் வரிசையில் தென் ஆபிரிக்காவின் கேரி கேர்ஸ்டன் முதலிடம் பெற்றுள்ளார்.

பாகிஸ்தானில் சமீபத்தில் நடந்து முடிவடைந்த தென் ஆபிரிக்கா-பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் தென் ஆபிரிக்கா தொடரை வெல்லக் காரணமாக இருந்தவர் கேரி கேர்ஸ்டன். இதுவே அவரை முதலிடத்திற்கு உயர்த்தக் காரணமாக இருந்தது.



கேரி கேர்ஸ்டன்

பாகிஸ்தானின் இன்ஸமாம்-உல்-ஹக் 2ம் இடத்தில் இருக்கிறார்.

3ம் இடத்தில் இருந்த இலங்கை வீரர் ஜயசூரிய இந்தியாவுக்கு எதிராக சமீபத்தில் முடிவடைந்த டெஸ்ட் தொடரில் சோபிக்காததால் 5ம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

3ம் இடத்தில் இலங்கையின் அரவிந்த டி சில்வா உள்ளார்.

ஸிம்பாப்வேயின் கிராண்ட் பிளவர் முதன் முறையாக முதல் 10 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். இவர் 4ம் இடத்தில் உள்ளார்.

ஸிம்பாப்வேயின் கை விட்டோல் 6ம் இடத்திலும், இந்திய வீரர் செளரவ் கங்குலி 7ம் இடத்திலும் உள்ளனர்.

இங்கிலாந்தின் கிரஹாம் தோர்ப், அவுஸ்திரேலியாவின் மத்தியூ எலியட், போல் றீபிள் ஆகியோர் முறையே 8ம், 9ம், 10ம் இடங்களில் உள்ளனர்.

இந்திய வீரர்களான டெண்டுல்கர் 13ம் இடத்திலும், சித்து 15ம் இடத்திலும், அசாருதீன் 16ம் இடத்திலும் உள்ளனர்.

இம்மாதம் 8ம் திகதி இந்த தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

## ஒருநாள் போட்டிகள்

இலங்கை கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவிட்டு இலங்கை வந்துள்ளது. 3 ஒருநாள் போட்டிகளில் விளையாட மறுபடி இம்மாதம் 20ம் திகதி இந்தியா செல்கிறது.

முதல் ஒருநாள் போட்டி 22ம் திகதி கவுகாத்தியிலும், 2வது போட்டி 25ம் திகதி இந்தூரிலும், 3வது போட்டி 28ம் திகதி கோவாவிலும் நடக்கிறது.

இந்தப் போட்டிக்கான இலங்கை அணி விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன. இதில், வேகப்பந்து வீச்சாளர் ரவீந்திர புஷ்பகுமார நீக்கப்பட்டுள்ளார். இந்திய சுற்றுப் பயணத்தின்போது, டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இருப்பினும், இவரது பெயர், அணி வீரர்கள் பட்டியலில் இல்லை.

மும்பாய் டெஸ்ட் போட்டியில் காயமடைந்த விக்கெட் கீப்பர் லங்கா டி சில்வாவும் நீக்கப்பட்டுள்ளார். நீக்கப்பட்ட இவ்விரு வீரர்களுக்குப் பதிலாக உபுல் சந்தனவும், ரொமேஷ் கலுவித்தாரனவும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.


இலங்கை அணி வீரர்கள் விபரம் வருமாறு:

அர்ஜுன ரணதுங்க (கப்டன்) அரவிந்த டி சில்வா, றொஷான் மகாநாம, சனத் ஜயசூரிய, மார்வன் அத்தபத்து, ஹஸான் திலகரட்ன, ரொமேஷ் கலுவித்தாரன, மகேல ஜயவர்த்தன, சஜீவ டி சில்வா, சமிந்தவாஸ், பிரமோதய விக்கிரமசிங்க, குமார தர்மசேன, முத்தையா முரளீதரன், உபுல் சந்தன.

## இவர்கள்தான் அவர்கள்



கஜோல்



ஷாருக்கான்



கரிஷ்மா கபூர்

## சிந்தியா பதில்கள்

★ ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகள் தாம் என்று ரெலோ இயக்கத்தினர் (ரூபவாஹினிப் பேட்டியில்) கூறுகின்றனர். அது சரியா?

கி. முருகானந்தன், கொழும்பு-06.

தவறுதான், சரிதான்! என்னங்க, குழப்பமாக இருக்கிறதா? புலிகள் முதன்முதலில் தடைசெய்தது ரெலோ இயக்கத்தை. ரெலோ உறுப்பினர்கள் பலர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். அதை ஓட்டமாக அவர்கள் கருதுவார்களேயானால், ஆயுதப் போராட்டத்தில் முதன் முதலில் ஓடியவர்கள், அதாவது 'முன்னோடிகள்' அவர்கள்தான்!

★ முன்னர் இருந்த அரசாங்கங்கள் செய்த தவறுகள்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தக் காரணம் என்று இன்றைய அமைச்சர்கள் பலரும் ஒப்புக்கொள்கின்றனரே?

ஆர். தம்பிராசா, திருமலை.

அப்படி தெளிவாகத் தெரிந்த பின்னரும் அதே தவறுகளைத் தொடர்கிறார்கள் என்றால், தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் ஆயுதம் ஏந்துவதை விரும்புகிறார்கள் என்றா அர்த்தம்?! சமீபத்திய உதாரணம்: மீண்டும் ஒரு வெலிக்கடையாக களுத்துறைப் படுகொலை.

★ கூட்டணி வேட்பாளராக திருமதி சரோஜினி யோகேஸ்வரன் யாழ் மாநகரசபையில் போட்டியிடுகிறார்? இவர் எப்போது கூட்டணியில் சேர்ந்தார்?

பி. ஞானப்பிரகாசம், நீர்கொழும்பு.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கொழும்பில் போட்டியிட கூட்டணியினர் ஆள் தேடியபோது!

★ யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட கட்சி ஒன்றுக்கு 300 வேட்பாளர்களாவது வேண்டுமாம். எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள்? யார் வெற்றி பெறப் போகிறார்கள்?

இ. சபாலிங்கன், வவுனியா.

கழுதை இல 1: என்ன உன்னை வெளியே பார்க்கவே முடியவில்லையே? எங்கே போயிருந்தாய்?

கழுதை இல 2: யாழ்ப்பாணம் போயிருந்தேன். வேட்பாளராக்கி விட்டார்கள். இப்போதுதான் தப்பி வந்தேன். அது சரி நீ எப்படி தப்பிக்கொண்டாய்?

கழுதை இல 1: (பெருமூச்சுடன்) நீயாவது வேட்பாளராக மட்டும்தான் இருந்தாய். என்னை வெற்றிபெறவும் வைத்துவிட்டார்களே!

★ சினிமா மோகம் என்று தீரும் சிந்தியா?

சா. மங்களா, மூதூர்.

தீர்ந்துதான் என்னாகப்போகிறது மங்களா?!

★ மக்களை முட்டாளாக நினைக்கும் அரசியல்வாதிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

உ. லோகநாதன், நல்லூர்.

இந்தியக் கதை ஒன்று:

வகுப்பிலே பாடம் நடந்து கொண்டிருந்தது.

"இந்தியாவில் மொத்தம் எத்தனை மொட்டை மரங்கள் இருக்கின்றன?" என்று கேட்டார் ஆசிரியர்.

மாணவர்கள் திகைத்தனர்.

ஒரேயொரு மாணவன் திடீரென்று எழுந்து "தொண்ணூற்றி ஐந்து கோடி ஐயா" என்றான்.

"எப்படி உன்னால் அத்தனை திட்டவட்டமாகச் சொல்ல முடிந்தது?" என்று கேட்டார் ஆசிரியர்.

மாணவன் சொன்னான்: "நேற்றுத்தான் நம் ஜனத்தொகை பற்றிய புள்ளி விபரம் வந்திருக்கிறது!"

இவ்வாறான மாணவர்கள்தான் அரசியல்வாதிகளாகிறார்கள் என்று நினைக்கிறேன்.

★ விஞ்ஞான யுகத்திலும் கடவுள் நம்பிக்கை வளர என்ன காரணம்?

எம். பஷீர், புத்தளம்.

"வேதாந்தம் பெரிதா? விஞ்ஞானம் பெரிதா?" என்று இருவருக்குள் சர்ச்சை எழுந்தது.

"வேதாந்தமே பெரிது" என்றார் ஒரு வேதாந்தி.

"விஞ்ஞானமே பெரிது" என்றார் விஞ்ஞானி.



இரண்டு மின்சாரக் கம்பிகளைப் பொருத்தி பல்பை எரிய வைத்துக் காட்டினார் விஞ்ஞானி.

"சக்தியும் சிவனும் சரசமாடுகிறார்கள்" என்றார் வேதாந்தி.

பல்பை அணைத்துக் காட்டினார் விஞ்ஞானி.

"அவர்கள் தூங்குகிறார்கள், தொல்லை செய்யாமல் வீட்டுக்குப்போம்" என்றார் வேதாந்தி.

★ அடுத்தவர் நலனில் அக்கறை இல்லாதவர்கள் பற்றி என்ன கூறுகிறீர் சிந்தியா?

செல்வி க. தனலட்சுமி, மட்டக்களப்பு.

நாம்தான் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

பணக்காரர் ஒருவர் கிளப்பில் பணம் வைத்து சீட்டாடிவிட்டு வெளியே வந்தார். அவர் முகம் சுண்டிப்போயிருந்தது. தம்முடைய காரில் ஏறிக் கொண்டார். "எங்கே ஐயா காரை ஓட்டுவது?" என்று கேட்டார் சாரதி.

"ஏதாவது ஒரு மலைமேல் ஏறித் தலைகீழாய் இறங்கு. நான் தற்கொலை செய்யத் தீர்மானித்துவிட்டேன்." என்றார் பணக்காரர். சாரதியின் கதி என்னாகும் என நினைத்தாரா மனிதர்?!

★ கிழக்கிலும் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கப்போகிறதாமே?

கே. லீனஸ், செங்கலடி.

அப்படியா! இனி கிழக்கு மக்களுக்காகவும் தமிழ்க் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு அறிக்கைவிடப்போகின்றன. என்கிறீர்களா? பத்திரிகைகளுக்குத்தான் இடப் பற்றாக்குறை தோன்றப்போகிறது.

★ சிந்தியா! சந்தன கடத்தல் வீரப்பன் என்னாகினான்?

எச். பாரூக், கற்பிட்டி.

ஜெயின் கமிஷன் அறிக்கை கிளப்பிய புழுதிப் படலத்துக்குள் வீரப்பன் மறைந்து போனான்.

★ உலகில் சிறந்தது மனிதப் பிறவிதானே?

திருமதி ஜெ. சரோஜினி, கனடா.

உடைந்துபோன ஒரு மண் பானையின் கழுத்து பூமியில் கிடந்தது. வழிப்போக்கன் ஒருவன் அதைக் கவனிக்காமல் மிதிக்கப் போனான்.

"மிதிக்காதே! மிதிக்காதே. நான் ஒரு பானையின் கழுத்து" என்று சத்தம் போட்டது அது.

வழிப்போக்கன் சிரித்தான்.

"இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மித்தால் என்ன? உடைத் தாலென்ன? நீ இப்பொழுது பானையல்ல. உடைந்துபோன அதன் கழுத்து."

கழுத்து அதனைக் கேட்டுச் சிரித்தது.

"முன்பு நான் பானை. இப்பொழுது கழுத்து. நாளை மீண்டும் களிமண். பிறகு ஒரு புதிய பானை. ஆனால் நீ...?"

வழிப்போக்கன் யோசித்தான். அதைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு தன் வழியே போனான்.

★ டியர் சிந்தியா! மரணத்தைக் கண்டு பயப்படாத மனிதன் உண்டா?

எம்.என். அஷ்வர், ஜா-எல.

தெளிந்தவர் கலங்கார்.

மகன் தாயைப் பார்த்துக் கேட்டான்:
"தாயே! சாவு என்பது என்ன?"
தாய் சொன்னாள்:
"வாழ்வின் முடிவு!"
மகன் கேட்டான்:
"வாழ்வு என்பது என்ன?"
தாய் சொன்னாள்:
"சாவின் தொடக்கம்!"

# இராமாயணம் அங்கம் 113

இராமபிரான் வீசிய கணையானது அரக்கர் கோன்- இலங்காதிபதி- இராவணேசனின் உடலில் எண்ணற்ற ரணங்களை ஏற்படுத்தி, குருதிக்கடல் பெருக்கெடுத்தோட அவனைத் தரையில் சாய்த்தது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தை எண்ணித் தவமிருந்த தேவர்களின் உள்ளத்தில் பெருமகிழ்ச்சிப் புயலை உருவாக்கியது. இராவணனின் கொடுமைகளால் பல்லாண்டுகள் துன்புற்றுத் தவித்த தவசிகளின் சிந்தையையும் மகிழ்ச்சி வெள்ளத்தால் குளிப்பாட்டியது. மூவுலகிலும் இராவணனுடைய ஆணை இல்லாமல் இது காலவரை காலமும் மூச்சு விடக்கூட முடியாது தவித்த மாந்தர் அனைவரும், இராவணன் வீழ்ந்த தகவல் அறிந்து துள்ளிக்கூத்தாடினர்.

இளைய பெருமாளாகிய இலக்குவன் ஆஞ்சநேயரின் தோளில் இருந்து துள்ளிக் குதித்தார். வானரர்க்கு அரசனான சுக்கிரீவன் வான்முட்டப் பாய்ந்து, மேகத்தைத் தாவி மீண்டும் தரையில் குதித்தான். வாலி மகன் அங்கதன் ஆடிப்பாடி ஆகாயத்தில் தாவிப் பாய்ந்தான். ஆஞ்சநேயர் அடக்க ஒடுக்கமாக இராமமந்திரத்தை ஜெபித்த வண்ணம் இராமபிரானை நோக்கி நடக்கலானார். விபீடணர் ஆஞ்சநேயரை பின்தொடர ஏனையோரும் இராமபிரானை நோக்கி நடந்தனர். தேவர்கள் வானிலிருந்து பொழிந்த பூ மழையில் மிதந்தவராக இராமபிரான் இருகைகளையும் கூப்பிய வண்ணம் கதிரவனை நோக்கிப் பிரார்த்தித்து நின்றிருந்தார். அவரை நோக்கி சகலரும் விரைந்து வந்து பணிந்து நின்றனர். கண்களைத் திறந்த இராமபிரான் தனது வலது கரத்தை உயர்த்தி அனைவரையும் அமைதியைக் கடைப்பிடிக்குமாறு சைகை செய்தார்.

இராவணன், தன்னை எவரும் அழிக்கக் கூடாது என்ற வரத்தை- படைத்தற் கடவுளான பிரம்மதேவனிடம் பெற்றிருந்தான். அதன்படி மூன்று கோடி வாழ் நாட்களை மகிழ்ச்சியுடனே கழித்தவன், ஆனால் இன்று மானிடனாக அவதரித்த இராமபிரானின் வாளியால் வீழ்ந்து மடிந்தான்.

இராவணன் வீழ்ந்து மடிந்த தன்மையை, கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வார் இவ்வாறு காட்டுகின்றார்.

**முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய**
**பெருந் தவமும் முதல்வன் முன் நாள்**
**எக்கோடி யாராலும் வெலப்படாய்**
**எனக் கொடுத்த வரமும் ஏனைத்**
**திக்கோடும் உலகு அனைத்தும் செருக்**
**கடந்த**
**புய வலியும் தின்று மார்பில்**
**புக்கு ஓடி உயிர் பருகிப் புறம் போயிற்று**
**இராகவன் தன் புனித வாளி.**

*(யுத்த காண்டம்)*

பொருள்:-

*இராமபிரான் எய்த புனிதத் தன்மை வாய்ந்த அம்பானது இராவணனுடைய உடலில் புகுந்து அவனுடைய உயிரைப் பறித்துச் சென்றது. இதனால் இராவணன் செய்த பெருமை மிக்க தவத்தினால், "தேவர்களின் எத்தகைய புகழ் பூத்தவர்களாலும் உன்னை வெல்ல முடியாது," என்று பிரம்ம தேவன் முன்னாளில் கொடுத்த வரத்தையும் மூன்று கோடி நாட்கள் வாழ்ந்த பெருமை பொருந்திய வாழ்க்கையையும், திசைகளைத் தாங்கும் யானைகளுடன் பொருதி வென்ற பெருமை மிக்க தோள்களையும் ஒன்றாகவே சிதைத்தொழிக்கும் தன்மையினதாக இராம பிரானின் கணையானது இராவணனுடைய உடலில் புகுந்து உயிரைக் குடித்தது.*

## இராஜகுமாரன்

### வீடணரின் துயரம்

இராமபிரான், இராவணன் வீழ்ந்து கிடந்த இடத்தை நெருங்கி வந்தார். மேரு மலையானது செங்கடலில் வீழ்ந்து கிடப்பது போல் குருதிக் கடலில் இராவணனுடைய உடல் வீழ்ந்து கிடந்தது. ஒரு கணநேரம் அச்சடலத்தின் அருகில்.நின்று, தன் கண்களை மூடி இராவணனுக்காக மௌனாஞ்சலி செலுத்தினார். எத்தகைய நிலையிலும் தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்காத மாவீரன் இவன்; தனக்குப் பேரழிவு வரப்போகிறது என்பதனை நன்றாக உணர்ந்திருந்தும் பின்வாங்காமல் நின்று போரிட்டு மார்பிலே விழுப்புண் தாங்கி வீழ்ந்து கிடக்கிறான், என்று வியந்து பாராட்டியது அவருடைய உள்ளம்.

அப்போதுதான் அவர் அருகில் விம்மல் சத்தம் கேட்டது. தனது வலப்புரத்தில் விபீடணர் சிறுகுழந்தைபோல் நின்று தேம்பித் தேம்பி அழுவதைப்பார்த்தார். அவரை அரவணைத்து முதுகைத் தடவி ஆறுதலளித்தார் இராமபிரான்.

"விபீடணா! மண்ணில் பிறந்தவர் எவரும் ஒருநாள் மண்ணுக்கே இரையாக வேண்டியவர்; இதில் உமக்கோ எமக்கோ விதிவிலக்குக் கிடையாது. சாகா வரம் என்பது ஒருவர் சாகும் வரை மட்டுமே நிலைத்திருப்பது போலாகும். வீழ்ந்து விட்ட இந்த வீரன் மீது நாம் வைத்திருந்த வெறுப்புணர்வு விடைபெற்றுவிட்டது. உமது அண்ணனுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு அவருடைய உதிரத்தில் பிறந்த எவருமே உயிருடன் இல்லை. இராவணனுடைய சக உதிரச் செல்வமான உமக்கே அந்த உரிமை இன்று இருக்கிறது. கவலையை மறந்து வெறுப்புணர்ச்சியை நீக்கி, வீழ்ந்து விட்ட இந்த வீரனின் உடலை இலங்காபுரிக்கு எடுத்துச் சென்று வேத முறைப்படி செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பீராக!"

### மண்டோதரி

இராவணன், தனது குலத்தின் தன்மைக்கு ஏற்ப 'அரக்க குணம்' படைத்தவனாக இருந்தபோதிலும் அவனுடைய தர்மபத்தினியான-மயன் மகள்-மண்டோதரி ஒரு பதிவிரதை. கணவனையே கண்கண்ட தெய்வமாகக் கருதி வழிபட்டவள். தன் கணவனைக் கைப்பிடித்த நாள்முதல் கணவனின் சொல்லுக்கு மறுவார்த்தை எதுவும் பேசி அறியாதவள். துன்மார்க்க சீலனாக-தன் கணவன் அலைந்தபோதும் அதனையிட்டு தன்கணவனை வினவுவதற்கு எண்ணாதவள். சீதாப் பிராட்டியாரை சிறைப்பிடித்து வந்தபோதும் கூட- அது தவறு என்று மனதாரத் தெரிந்திருந்தும்- தன் கணவனிடம் அதனையொட்டி ஒரு கேள்வியும் • கேட்காதவள். அவள்

## மாண்டான் எனக் கேட்ட மண்டோதரி மாண்டாள்!



முகத்தில் சினமோ சந்தேகக் குறியோ, சலிப்புத் தன்மையோ, பிரதிபலிப்பதை இராவணன் எக்காலத்திலும் கண்டிருக்க மாட்டான்.

இராமபிரானுடன் போரிடுவதற்கு இறுதியாக இராவணன் புறப்பட்டபோது, அவனுக்கு வீரத்திலகமிட்டு வழியனுப்பி வைத்தவள்; ஆனால் அப்போதே அவளுக்கு, 'இதுவே என் கணவனை உயிருடன் காணும் இறுதிநாள்', என்று உளமாரத் தெரிந்துவிட்டது. போர்க் கோலமுடன் புறப்பட்டுப் போகும் தன் கணவனுக்கு தன் உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்வது அழகல்ல என்பதனால் அடங்கி நடந்தாள். அத்தப்புரம் சென்று அங்கிருந்த சிவன் கோயில் வாயிலில் நின்று கண்களை மூடிய வண்ணம் தியானத்தில் ஆழ்ந்தாள். அன்ன-ஆகாரம் எதுவும் அன்று அவள் அருந்தவில்லை.

போர்க் களத்தில் இராவணன் உயிர்நீத்த அதே கணமே மண்டோதரியின் ஆவி துடித்தது. அவள் மணாளன் இறந்து விட்டான் என்று செய்திவரும் முன்னே அந்தப் பத்தினியின் உணர்வில் உண்மை புகுந்துவிட்டது.

அவளது உள்ளுணர்வு-தன் கணவன் உயிர் பிரிந்து விட்டது என்று அறிவுறுத்தியது. ஆலயத்தில் இருந்து வாயுவேகத்தில் அவள் உடல் கணவனின் சடலம் கிடந்த இடத்திற்கு மிதந்து சென்றது. கணவனுக்கு முன் தம் உயிர் பிரிய வேண்டும். விதவையாக- விசனத்தைத் தாங்கிய வண்ணம் பூவுலகில் வாழக் கூடாது என்று தான் எந்தப் பெண்ணும் விரும்புவாள். ஆனால் தனக்கு முன்னே துணைபோய் விட்டதே என்ற எண்ணம் மேலோங்க, கண்களில் கண்ணீர் கடலாகக் கொட்ட கணவனின் உயிரற்ற உடல் மீது வீழ்ந்தாள். அக்கணமே அப்பத்தினியின் உயிர் பிரிந்து கணவனுடைய உயிருடன் சங்கமமாகியது.

இலங்கை மாநகரின் கண்ணிருந்த அரக்க மாந்தர் அனைவருக்கும் தங்கள் தலைவன் வீழ்ந்து மடிந்த செய்தி எட்டியதும்- அத்தனை பேரும் ஓலமிட்ட வண்ணம் ஓடோடி வந்து இராவணனின் உடலை மொய்த்தனர். காவலர்கள் பெரும் பாடுபட்டு மாந்தர்களை அப்புறப்படுத்திவிட்டு இருவருடைய சடலங்களையும் எடுத்துக் கொண்டு நகருக்குள் புகுந்தனர்.

### இறுதிச் சடங்கு

விபீடணர் தனது அண்ணனுக்கும் அவருடன் உடன் கட்டை ஏறாமலே உயிர் நீத்த அண்ணிக்கும் ஒரு பெரும் சிதையை அமைக்க ஏற்பாடுகளைச் செய்தார். அரக்க வேதியர்கள் பலர் வந்து உரிய முறைப்படி இறுதிக் கிரியைகளைச் செய்யத் தொடங்கினர். ஆற்றொணாத் துயருடன் விபீடணர் சிதைக்குத் தீமூட்டினார். இருவருடைய சடலங்களையும் அக்கினிதேவன் தன்னோடு அணைத்து வான்மண்டலத்தில் பரவச் செய்தான்.

இறுதிக் கடன்கள் யாவற்றையும் பழுதற- முறைப்படி முடித்துவிட்ட விபீடணர் ஆஞ்சநேயர், சுக்கிரீவன் அங்கதன், ஜாம்பவன், முதலானோர் தொடர்ந்து வர இராமபிரானை வந்து வணங்கினார்.

இராமபிரான் விபீடணரை அணைத்தவராக அறிவுரைகள் பலவற்றை ஆய்ந்து கூறினார். இலக்குமணனை அழைத்து, விபீடணரை ஏனையோருடன் இலங்கை மாநகருக்கு அழைத்துச் சென்று இலங்கை வேந்தனாக மகுடம் சூட்டிவிட்டு வருமாறு பணித்தார்.

நகரில் சூழ்ந்திருந்த சோக மேகம் மெல்ல விலகியது. அடுத்த நாள் பொழுது அனைவருக்கும் பரவசமூட்டும் நாளாக மலர்ந்தது. இலங்காபுரியின் மாமன்னனாக விபீடணர் அரியணையில் ஏறி அமர்ந்தார். வேதியர்கள் வேதம் முழங்க, இளைய பெருமாளாகிய இலக்குவன் விபீடணரது தலையிலே கிரீடத்தைச் சூட்டினார்.

(தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி: 111

**சரியானவிடை:- மோகக்கணை, வேலாயுதம்**

1. பி. கிருஷ்ணகுமார், 330, லெயாட்ஸ் புறோட்வே, கொழும்பு-14.
2. ரி. தமிழரசி, இல. 22, 14வது வீதி, மஸ்கெலியா.
3. கே. சங்கர், 19, காலி வீதி, வெள்ளவத்தை.
4. செல்வி பே. ஹர்சனா, இல. 242/2, பேராறு, கந்தளாய்.
5. எஸ். சஞ்ஜயன், மே.பா. ஸ்ரீஸ்கந்தராஜா, இலங்கை வங்கி, வவுனியா.

**போட்டி இல. 113** கேள்வி:- **விபீடணருக்கு முடி சூட்டியவர் யார்?**

டிசம்பர் 27 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.113, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## திருவிழா அழைப்பிதழ்

அன்பார்ந்த வாக்காளப் பக்தகோடிகளே!

நிகழும் ஈஸ்வர வருடம், மார்கழி மாதம் 1ம் நாள் கொடியேற்றத்துடன் தேர்தல் திருவிழா கோலகலமாக ஆரம்பமாகும். அத்தினத்தில அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஒரு குத்துமதிப்பாக 30 நாட்களுக்கு திருவிழா நடத்தப்பட உள்ளது. அந்த முப்பது நாளும் கிட்டத்தட்ட 1500 உருவத்தினர் யாழ் குடாநாடெங்கும் வீதி உலா வர உள்ளனர்.

**முக்கிய அறிவித்தல்:-** வீதி உலா வரும் 1500 பேரில், பக்த கோடிகள் மட்டுமல்லாமல், கேடிகளும் இருக்கக்கூடும் என்பதால் உங்கள் உடமைகளை பத்திரமாக பாதுகாத்துக் கொள்ளுமாறும், எக் காரணம் கொண்டும் திருவிழா உலாக் காலங்களில் வீடுகளை திறந்துவைத்துவிட்டு வெளியே செல்ல வேண்டாம் என்றும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நல் ஆதரவை நாடும்
திருவிழாக் குழுவினர்

## ஆட்கள் தேவை

யாழ் குடாநாட்டில் நடைபெறும் திருவிழாவுக்காக கடை விரிக்கும் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு, ஆட்கள் தேவை. தகுதி; தகுதி இன்மைதான் தகுதி.

மூன்று நேர உணவும், மாலையில் ஊரடங்கு அமுலில் உள்ளபோது தாக சாந்திக்கான பானங்களும் இலவசமாக வழங்கப்படும்.

முன்னாள் கேடிகளும் தொடர்பு கொள்ளலாம். வெட்கப்படத் தேவையில்லை. வேறு நிறுவனங்களில் இருந்து நைசாக நழுவி ஓடி வரும் மதிப்புக்குரிய மாண்புமிகு ஓடுகாலிகளுக்கு தகுந்த இடம் வழங்கப்படும். தயங்க வேண்டாம்.

முன் அனுபவம் இல்லையென்று யாரும் பின்நிற்கத் தேவையில்லை. எம்மிடம் கேடித்தனத்தில் கில்லாடியான பயிற்சியாளர்கள் உள்ளனர்.

<u>பிற்குறிப்பு:</u> அலவாங்கு ஆறுமுகம், கொடுவாக்கத்தி கந்தசாமி, கோடாலி கோவிந்தன் போன்ற ரகங்களில், மக்களையும், மற்றும் நிறுவனங்களையும் நடுங்கவைக்கக் கூடிய பட்டப் பெயர்களைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். இம்முறை ஆயுதங்களை பாவிக்க தடை செய்தாலும், ஆயுதம் தாங்கிய பெயர்களை தடை செய்ய எந்தக் கொம்பனாலும் முடியாது என்பதை உத்தரவாதப்படுத்துகிறோம்.

உடன் விண்ணபிக்கவும், அல்லது நேரில் வரவும். இல்லாவிட்டால் மாற்று நிறுவனங்களிடம் மாட்டிக்கொள்வீர்கள்.

## பகிரங்க அறிவித்தல்

குருவிக்குளம் நாலாம் தெரு 34ம் இலக்க வீட்டில் குடியிருக்கும் பம்மாத்து பரஞ்சோதியாகிய நான் இத்தால் அறிவிப்பது யாதெனில், நடைபெற்று வரும் தேர்தல் திருவிழாவில் நான் எவ்வகையிலும் ஒரு பங்குதாரரோ, பார்வையாளரோகூட அல்ல....அல்ல.... அல்ல... என்பதை அறியத் தருகிறேன்.

யாருடைய மிரட்டல் காரணமாகவோ, அன்றி,நேற்றுமாலை என் வீட்டுக்கு நேரடியாக வந்து எனக்கு விடுக்கப்பட்ட இறுதி எச்சரிக்கை காரணமாகவோ நான் இந்த அறிவித்தலை விடுக்கவில்லை என்பதையும் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு யாராவது கருதினால் அது வெறும் புரளியே அல்லாமல்,நான் யாரிடமும் கூறிய தகவல் அல்ல என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இப்படிக்கு,
பம்மாத்து பரஞ்சோதி
(முன்னாள் கவுன்சிலர்)

## நான் அவனில்லை

வடமராட்சி குடத்தனை குச்சு ஒழுங்கையைச் சேர்ந்த குமாரவேலு, செல்லாச்சி தம்பதியின் சீமந்த புத்திரனான குமாரசாமியாகிய நான் இத்தால் தெரிவித்துக் கொள்வது யாதெனில்; நடைபெற்றுவரும் தேர்தல் திருவிழாவில் என் பெயருடைய ஒரு நபர் பங்குகொண்டு வருகிறார்.

அவர் நானில்லை என்பதையும், நான் அவரில்லை என்பதையும் இத்தால் உறுதி செய்கிறேன். என் பெயரில் போட்டியிடும் குறிப்பிட்ட நபரின் கையை காலாக நினைத்து நான் கேட்டுக்கொள்வது யாதெனில், தயவு செய்து நீவிர் யாவீர் என்ற தகவலை வெளியிட்டு, உபகாரம் செய்தால், சந்நிதி முருகனின் சர்வ அநுக்கிரகமும் உம்மைக் காத்தருளும் என்று ஓரளவு நம்புகிறேன்.

உண்மையுள்ள,
குமாரவேலு குமாரசாமி.

# தேர்தல் திருவிழா

## உருக்கமானவேண்டுகோள் எனக்கு வாக்களிக்காதீர்!

கொடிகாமத்தை பிறப்பிடமாகக் கொண்ட பூபாலசிங்கம் (முன்னாள் கூட்டணி உறுப்பினர்) அன்னம்மா (மகளிர் பேரவை உறுப்பினர்) ஆகியோரின் அருமை மகனும், பூ. வீரசிங்கம் (இளைஞர் பேரவை அங்கத்தவர்) பூ. வீரத்தங்கம் (புலிகள் இயக்க அங்கத்தவராக இருந்து பலியானவர்) பூ. மாசிலாமணி (ரெலோ முன்னாள் உறுப்பினர்) ஆகியோரின் சகோதரனும், ஆ. தம்பையன் (புளொட் முன்னாள் உறுப்பினர்) தி. திருநா (ஈ.பி.டி.பி. முன்னாள் உறுப்பினர்) ஆகியோரின் மச்சானும், கா. நகுலன் (ஓய்வு பெற்ற பொலிஸ்காரர்) கா. விஜயன் (பதினைந்து வருடத்தின் முன்னர் ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர்) ஆகியோரின் மருமகனுமாகிய பூ. சீனித்தம்பி (எந்தக் கட்சியிலும் உறுப்பினரல்ல) ஆகிய நான் இத்தால் அறிவிப்பது யாதெனில்;

என் குடும்பம் ஒரு காலத்தில் பல் கட்சி, பல் இயக்க குடும்பமாக இருந்தது உண்மையே! அதன் காரணமாக, அக் குடும்ப அங்கத்தவனான என்னையும் சில கட்சிகள் தவறாக விளங்கிக் கொண்டுள்ளன. என்பது என் அறிவுக்கு எட்டியுள்ளது.

பல கட்சிகளின் பட்டியலில் என் சம்மதம் இன்றியே என் பெயர் இடம்பெற்றிருப்பதாக திடுக்கிடும் தகவல் ஒன்றை மூன்று நாட்களுக்கு முன்னர் அறிந்தேன். அதன் பின்னர் இன்றுவரை தூக்கம் இல்லை. பாலும் விஷம் போலாச்சு. படுக்கையும் கல்லறை போலாச்சு. பல்லியின் ஒலிகூட வேட்டுச் சத்தம் போலாச்சு.

சில கட்சிகளின் உறுப்பினர்களைப் பார்த்து நான் ஒரு முன் ஜாக்கிரதையாக சிரித்தது உண்மைதான். அதற்காக என் பெயரையும் தங்கள் பட்டியலில் போடுவார்கள் என்று நான் கனவிலும் எண்ணியதில்லை.

ஆகவே எக் கட்சிப் பட்டியலில் என் பெயர் இருந்தாலும், அது என் சம்மதம் இன்றி இடம்பெற்றதாகக் கருதிக் கொள்ளுமாறும், எக்காரணத்தை முன்னிட்டும் எனக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் உங்களை இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கும், என் குடும்பத்திற்கும் ஏதாவது உதவி செய்ய யாராவது நினைப்பீர்களேயானால், எனக்கு வாக்களிக்காமல் இருப்பதே அந்த மேலான உதவியாகும்.

இப்படிக்கு,
அபாக்கியவானான
பூ. சீனித்தம்பி
(எக்கட்சி அங்கத்தவருமல்ல)

## கற்பனைச் சித்திரம்



## கொலை முயற்சிக்கு சமன்

முன்னாள் சண்டியனும், முன்னாள் சமூக விரோதியுமாகிய முருகுப்பிள்ளையாகிய நான் தெரிவித்துக் கொள்வது யாதெனில்;

நான் முன் ஒரு காலத்தில் முருங்கைக் குள பக்கத்தில் தீய செயல் புரிபவனாக வாழ்ந்தது மெய். பின்னர் திருந்தி வாழ்ந்து வருகிறேன்.

எனினும் என்மீது முன்விரோதம் அல்லது பின் விரோதம் கொண்ட யாரோ ஒருவர், என்னுடன் நேருக்கு நேர் மோத முடியாமல், என்னை ஒழிக்க முடியாமல், கெட்டகாரியம் செய்திருக்கிறார். 'நான் தேர்தலில் போட்டி போடுகிறேன்' என்று புரளி கிளப்பி விட்டுள்ளார். இதனையிட்டு கொலை முயற்சி, கொலை செய்யத் தூண்டுதல், கொலைக்கு திட்டமிடல் போன்ற குற்றங்களின் நிமித்தம் வழக்குத் தொடர உள்ளேன்.

இன்னொரு உண்மையையும் கூறிவிடுகிறேன். யாரோ சிலர் எனக்கு நிவாரண உதவி என்று பணம் தந்துவிட்டு வவுச்சரில் கையெழுத்துப் பெற்றுச் சென்றனர். அது தான் வேட்பு மனு என்று தெரிந்தோ, சுய புத்தியிலோ நான் கையொப்பம் போட வில்லை என்பதை நல்ல புத்தியோடு இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

மு. முருகுப்பிள்ளை
(திருந்திவிட்ட முன்னாள் சமூகவிரோதி)

**காதிலை பூ கந்தசாமி**



அருள் ஜுவல்லர்ஸ்

JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

கிளை :

105. காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# தீவு ஏழு



↑ நீலக்கடலின் மத்தியில் ஒரு அழகான தீவு. சட்டென்று பார்த்தால் கடலுக்குள் இலக்கம் 7 ஐ யாரோ கீறிவிட்டுப் போனதுபோல் தெரியும். (நீரில் எப்படி கீறுவதாம்?) இந்த தீவுக்கு என்ன பெயர் தெரியுமா? ஏழு ஏக்கர் தீவு. தோற்றத்துக்கும் பொருத்தமான பெயர். வட அமெரிக்காவின் மியாமி கடற்கரை நகரின் கிழக்கு புறமாகவும், கியூபா நாட்டிற்கு வடக்கிலுமாக அட்லான்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளதுதான் பஹாமாஸ் தீவுக் கூட்டம். இங்கு 700 தீவுகள் உள்ளன. 30 தீவுகளில் மட்டும் மக்கள் வாழ்கின்றனர். அந்த தீவுக் கூட்டங்களில் ஒன்றுதான் இந்த ஏழு ஏக்கர் தீவு. இதனை பவளத்தீவு என்றும் அழைப்பர். கடற்கரை ஓரங்களில் பவளப் பாறைகள் உள்ளன. உல்லாசப் பயணிகள் கடலுக்கடியில் சுழியோடிச்சென்று பவளப் பாறைகளை புகைப்படம் எடுத்து மகிழ்வர்.

இத்தீவில் ஒரேயொரு வாடி வீடு மட்டும்தான் உள்ளது. அதில் பல வசதிகள் உண்டு. மாடியில் இருந்தவாறே முழுக்கடலையும் இரசிக்கலாம். இங்குள்ள சமையலறைக உணவு மற்றும் குடிவகைகளை சுவையார்க்கத் தேர்ச்சி பெற்ற ஒரு சுவையுணர்வாளரால் நிர்வகிக்கப்படுகின்றது. விதம் விதமாக சமைத்துப்போடுவார்.

உல்லாசப் பிரயாணியின் இரசனைக்கேற்ப பணியாளரை ஆணாகவோ, பெண்ணாகவோ தேர்ந்தெடுக்கலாம். கடற்கரை மணற்பாங்கானது. படகோட்டும் வசதியுண்டு. மீன்பிடித்துப் பொழுது போக்கலாம். டைவிங் (சுழியோட்டம்) செய்யலாம். முருகைப்பாறை, பவளப் பாறைகளின் அருகே சுழியோடி வரலாம். கொல்ஃப், ரெனிஸ் விளையாடலாம். வாடிவீடு 8 பேர் தங்கக் கூடியது. இத்தீவில் ஒரு வாரம் தங்கியிருக்க வாடகை 2 ஆயிரத்து 795 ஸ்ரேர்லிங் பவுண்சுகள்.

அதாவது தம்முாப் பெறுமதிக்கு ரூபா 2 இலட்சத்து 85 ஆயித்தி 90 ரூபாய். யப்பா! இத்தீவு மற்றும் அங்கு அமைந்துள்ள விடுதி அனைத்தும் தனியார் ஒரு வருக்குச் சொந்தமானதாகும்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னாகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னாகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657


# நெய்யாத ஆடை



↑ இந்த நவீன காலத்தில் விதம் விதமான ஆடைகள் வந்துவிட்டன. நவீன நாகரிகம் போகும் வேகத்தைப் பார்த்தால் ஆடை கால்பங்கு, அரை முக்கால் பங்கு என்னும் அளவுக்கு வந்துவிடும் போலுள்ளது. மேலும் சிக்கனமாகவும் வாய்ப்புண்டு.


படத்தில் காணப்படுபவர்கள் பழங்குடிமக்கள். ஃபீஜித் தீவுகளில் வசிப்பவர்கள். நாகரிகத்தை வெறுப்பவர்கள். இலை குழைகளால் செய்த ஆடைகளையே அணிகிறார்கள். நவீன ஆடைகளை விட இவை அதிக பாதுகாப்பானவைபோல தெரிகிற தல்லவா.

காடுகளுக்குள் நடமாடும் கொரில்லாக்கள் செடி கொடி மரங்களுடன் பதுங்கி இருக்க வசதியாக தலையில் இப்படித்தான் தொப்பி போடுவர். உருமறைப்பு என்று அதனை அழைப்பர்.

# போரும் வாழ்வும்

↓ வீதியோரங்களில் துப்பாக்கி ரவைகள் சிதறிக் கிடக்கின்றன. ஏ.கே.47 துப்பாக்கியால் சுடப்பட்ட ரவைகள்தான் இவை. வெற்றுக் கூடுகளாகக் கிடக்கும் ரவைகளை சிறுவர்கள் சேகரிக்கிறார்கள். திருத்து விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் ரொட்டி வாங்கிச் சாப்பிடப்போகிறார்கள்.

பொஸ்னியாவின் வீதியில் எடுக்கப்பட்ட படம் இது. போரும் வாழ்வும் ஒன்று கலந்து விட்டது. வாழ்வதற்காக போராடுவது, போராடுவதற்காக வாழ்வது என்று நாட்கள் நகர்கின்றன.



# கைவரிசை



→ எந்தக் கடையிலும் எடுக்கப்பட்ட படம் அல்ல. இவை தரை விரிப்பில் வந்த மீன்கள். என்ன புரியவில்லையா? இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவின் அமைப்பில் இடப்பது ஓரிசா மாநிலம். பழம் பெரும் காலம் முதல் சிற்ப வேலைகள், கைப்பணிகள் போன்றவற்றில் சிறந்தவர்கள் ஓரிசா மக்கள்.

ஆடை உற்பத்தியில் மீதமாகும் வர்ணத்துணிகளை சேகரித்து மேசை விரிப்புக்கள், தரை விரிப்புக்கள் ஆக்கம் செய்வதும், அவற்றில் இவ்வாறான உருவங்களை வடிவமைத்து அசத்துவதும் கைவந்த கலை.

இங்குள்ள மீன உருவங்கள் அனைத்துமே பல வர்ணத்துணிகளை வைத்து உருவாக்கியவைதான். முடிந்தால் நீங்களும் முயன்று பாருங்கள்.

↘ நாடுகளை கைப்பற்றி, அங்குள்ள வளங்களைச் சுரண்டும் பிரிட்டனின் சுரண்டல் பசிக்கு இரையான நாடுகளில் ஒன்று மொரிஷியஸ். 1814ம் ஆண்டு பிரிட்டன் ஆக்கிரமித்தது. மொரிஷியஸில் கரும்பு உற்பத்திதான் பிரதான இடம் வகிக்கிறது. மொரிஷியஸை பிடித்த பிரிட்டிஷ்காரர்கள் அங்கு கரும்புத்தோட்டங்களில் பணியாற்ற இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை கொண்டு சென்றனர்.

தற்போது மொரிஷியஸ் நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் இந்தியர்கள்தான். பெரும்பான்மை மக்களது மதம் இந்து மதம். படத்தில் இருப்பது மொரிஷியஸ் நாட்டு தலைநகரான போர்ட் லூயிஸில் உள்ள இந்துக் கோயிலாகும். இதன் சிற்ப வேலைப்பாடுகள் கலை நயம் மிக்கவை.

மொரிஷியஸ் மிக அழகான நாடாகும். இதன் மொத்த மக்கள் தொகை ஆக. 11 இலட்சம் மட்டும். 94 வீதமான மக்கள் எழுத்தறிவு பெற்றவர்கள். 1968 இல் வெள்ளையன் வெளியேறினான். சுதந்திரம் கிடைத்தது. 1992இல் குடியரசானது. சுதந்திரம் பெற்றதால் இந்த கண்டைக்காய் நாடு சொர்க்கமாகத் திகழ்கிறது.

# சீரும் சிறப்பும்




## 250 புலமைப்பரிசில்கள்

மாணவர்களே!! நீங்கள் O/L பரீட்சை எழுதிவிட்டீர்களா?

வேகமாக முன்னேறும் நவீன கம்பியூட்டர் உலகத்தில் இணைந்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

முதன் முதலாக குழந்தைகளுக்கான பாடநெறியை வெற்றிகரமாக நடத்திவரும் எமது நிறுவனம் சிறந்த பாடநெறியை உங்களுக்காக வடிவமைத்துள்ளது.

1. Introduction of Computer
2. Computer technology in Hardware and Software
3. Use of following s/w packages
   - A) Lotus 123 Rel 5/Exel
   - B) AUTO CAD(Specially designed for students who wish to go for Engineering stream in A/L)
   - C) Word processing package(MS WORD)
4. Languages: a) Visual Basic b) PASCAL
5. Application of Micro Process base technology in the field of Music and Multi media application Skills
6. Internet, E-mail, Global communication
7. Introduction to Hardware Engineering (ELECTRONICS CONSTRUCTION)

ஆகிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

புலமைப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுவே கீழ் உள்ள கூப்பனை நிரப்பி அத்துடன் ரூபா 100/= இற்கான காசுக்கட்டளையை கீழ் கண்ட முகவரிக்கு 31.12.1997 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி புலமைப் பரீட்சையில் தோற்றுங்கள். (காசுக்கட்டளை வெள்ளவத்தை தபாற்கந்தோருக்கு எடுக்கப்பட வேண்டும்)

பரீட்சைக்கான நேரம், திகதி, இடம், பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அறிவிக்கப்படும்

- இப்பாடநெறிக்கான காலம் 4 மாதங்கள்.
- தபால் மூலம் வரும் விண்ணப்பங்கள் 05 - 01 - 98 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அனுப்ப வேண்டிய முகவரி

General Manager,
Metro Computer World.
No.17, Charlemont Road, Colombo-06.T.P 501424

Specimen form

Full name ..............................................
Address:.................................................
..............................................................
School:...................................................
Class:.....................................................
Age ......... sex......... Phone:...................